விலை ரூபா 20.00


சூகியின் கட்சி பெரு வெற்றி
பக்கம் 09


ரஷ்ய விமானம் நொருங்கியது
பக்கம் 10


பாயத் தயார்
பக்கம் 11


50 ஆவது பட்டம்
பக்கம் 27

www.onlineuthayan.com

பக்கங்கள்: 32

# உதயன்

சுடர் 27
கதிர் 129

வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 21 செவ்வாய்க்கிழமை (03/04/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# இலங்கையின் குற்றங்கள் குறித்த அமெரிக்க அறிக்கை அடுத்த வாரம்

### இறுதி மோதல் தொடர்பில் முக்கிய பல ஆவணங்களும் பகிரங்கமாகும்

கொழும்பு, ஏப்ரல் 3

இலங்கையில் இறுதிநேர மோதலில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் விசேட அறிக்கையொன்றை வெளியிடுவதற்கு அமெரிக்க வெளிவிவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துவருவகிறது.

இன்னும் ஒருவாரத்திற்குள் இந்த அறிக்கை வெளிவரும். அறிக்கையைப் பகிரங்கப்படுத்தப்படுவதற்கு முன்னர் அமெரிக்க காங்கிரஸ் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்படுமென அமெரிக்க இராஜதந்திரி ஒருவர் தெரிவித்தார்.

"இந்த அறிக்கை மார்ச் மாத முற்பகுதியில் வெளியிடப்படவிருந்தது. அதே காலத்தில் ஜெனிவா ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு அமர்வில் இலங்கைக்கு எதிரான தீர்மானமொன்றை அமெரிக்கா கொண்டு வந்திருந்தது. எனவே, ஒரே நேரத்தில் இரண்டு பாரதூரமான விடயங்களைக் கையாள அமெரிக்கா விரும்பவில்லை. ஆகையால், ஜெனிவா மாநாடு முடிந்த நிலையில், இப்போது இந்த அறிக்கையை வெளியிடத் தீர்மானித்தோம்" என்று அந்த இராஜதந்திரி தெரிவித்தார்.

போர்க் குற்றங்கள் தொடர்பில் இதே போன்ற ஓர் அறிக்கையை 04

## ஜெனிவா தீர்மானத்தின் மூலம் இலங்கையில் நிரந்தர அமைதி

### ஐ.நாவுக்கான அமெரிக்க தூதுவர் நம்பிக்கை

ஜெனிவா, ஏப்.3

ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் இலங்கை அரசு நல்ல பாதையில் முன்னேறுவதற்காக அளிக்கப்படும் ஊக்கம் எமது நம்பிக்கை, இப்பொழுது நிறைவேற்றப்பட்ட பிரேரணை இலங்கையில் நிரந்த சமாதானத்தை உருவாக்கும் என்பதாகும் என ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமெரிக்காவின் பிரதிநிதி எலீன் டொணாஹே தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் எலீன் டொனாஹே ஊடகவியலாளர்களைச் சந்தித்துப் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தத் தீர்மானத்தின் நோக்கம் இலங்கை அரசுக்கு அது தன் சகல மக்களுடனும் ஏற்படுத்தும் நல்லிணக்க முயற்சியில் உதவுவதாகும். பொறுப்புக் கூறுதலும், நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நிறைவேற்றுவதும் நிரந்தர சாமாதானத்தை நோக்கி முன்னேறத் தேவையான இரண்டு அடிப்படை அம்சங்கள்.

இலங்கைக்காக மட்டுமல்லாது, சர்வதேச மனித உரி 04

## தமிழகத்தில் புலிகளின் இரகசிய முகாம்களா?

### தமிழகப் பொலிஸ்மா அதிபர் மறுப்பு

சென்னை,ஏப். 3

தமிழகத்தில் 3 இரகசிய முகாம்களில் 150 விடுதலைப் புலிகள் பயிற்சி பெற்று மீண்டும் இலங்கை திரும்பியதாக அந்நாட்டு பத்திரிகை ஒன்றில் வெளியான செய்திக்குத் தமிழகப் பொலிஸ்மா அதிபர் மறுப்புத்தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையைச் சேர்ந்த ஊடகம் ஒன்றில், 150 விடுதலை புலிகள் தமிழ்நாட்டில் மூன்று இரகசிய முகாம்களில் ஆயுதப் பயிற்சி பெற்று, 04

## இராணுவ வாகனம் மோதி நெடுங்கேணிவாசி சாவு

### நிற்காமல் ஓடித்தப்பினார் சாரதி

நெடுங்கேணி, ஏப். 3

இராணுவ வாகனம் மோதியதில் நெடுங்கேணியில் நேற்று ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இரவு 7.30 மணியளவில் சம்பவம் இடம்பெற்றது.

கற்குளம் சந்தியிலிருந்து சில நூறு மீற்றர் தூரத்தில், சைக்கிளில் வந்து கொண்டிருந்தவரை நேரெதிரே வந்த இராணுவ வாகனம் மோதி விட்டுத் தப்பிச் சென்றது என்று நேரில் பார்த்த சிலர் தெரிவித்தனர்.

நெடுங்கேணி ஊஞ்சால் பட்டி என்ற இடத்தைச் சேர்ந்த நற்குணம் பாலசிங்கம் (வயது-59) என்பவரே உயிரிழந்தவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர், வேலை நிமிர்த்த 04

## மோ. சைக்கிள் வாங்க முண்டியத்த மக்கள்

### விலையேற்றத்தின் முன் பெற்றுவிட கடும் முயற்சி

யாழ்ப்பாணம், ஏப்.3

வாகனங்களுக்கான வரி அதிகரிக்கப்படுகிறது என்று அரசு அறிவித்ததையடுத்து, விலை அதிகரிப்பதற்கு இடையில் மோட்டார் சைக்கிள்களை வாங்கிவிட யாழ்ப்பாணத்தில் பலர் நேற்று முண்டியடித்தனர். மோட்டார் சைக்கிள் விற்பனைக் கடைகள் பலவற்றில் நேற்று வழமைக்கு மாறான கூட்டம் இருந்தது.

''வழமையான விற்பனையைப் போன்று 10 மடங்கு கேள்வி இன்று (02.04.2012) காணப்படுகின்றது. பழைய விலைக்கே வாங்கி விடுவதற்காக முண்டியடிக்கிறார்கள்'' என்று நகரின் பிரபல மோட்டார் சைக்கிள் விற்பனை முகவர் ஒருவர் தெரிவித்தார்.

'' இப்போதைய நிலையில் ஏழைக்கு ஏற்ற எள்ளுருண்டையாக ஒரு மோட்டார் சைக்கிளைத் தான் எங்களால் வாகனம் என்று வைத்திருக்க முடியும். அதன் விலையும் இப்படி எக்கச்சக்கமாக அதிகரித்தால் என்ன செய்வது. அதுதான் விலைகூட முன்னம் ஒன்றை வாங்கி விடலாம் என்று வந்தோம்'' என்கிறார் ப.துஷிகரன். அரச ஊழியரான அவர் மனைவியுடன் கடைக்கு வந்திருந்தார்.

''நீண்ட காலமாக மோட்டார் சைக்கிள் வாங்க வேண்டும் என்றிருந்தோம். [illegible] காரணமாக அது தள்ளிப்போய்க்கொண்டே இருந்தது. இப்போது விட்டால் இனி 04

### ஆளும்கட்சி தலைவர்களுடன் ஜனாதிபதி பேச்சு

கொழும்பு, ஏப்.3

ஜெனிவா தீர்மானம் குறித்து நாடாளுமன்றில் இன்றும், நாளையும் முக்கியமான விவாதம் நடைபெறவுள்ள நிலையில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களுடன் நேற்று இது விடயம் தொடர் 04

## உள்நாட்டுப் பணம் வெளியேறுவதை தடுப்பதற்கே வாகனவரி அதிகரிப்பு

### காரணம் கூறுகிறது அரசு

கொழும்பு, ஏப்.3

கட்டுப்பாடின்றி அதிகரித்துச்செல்லும் வாகன இறக்குமதியைக் கட்டுப்படுத்தி உள்நாட்டுப் பணம் வெளியேறாமல் தடுக்கும் நோக்கிலேயே வரி அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது என அரசு தெரிவித்துள்ளது.

வரி சீரமைப்புக்குப் பின்னர் சீ.சீ. என்ஜின் ஆயிரம் கொள்ளளவுடைய பெற்றோல் காரின் விலை 80 சதவீதத்தாலும், சீ.சீ. 1,000 - 1,600 கொள்ளளவுடைய காரின் விலை 71 சதவீதத்தாலும், 1,600 - 2,000 கொள்ளளவுடைய காரின் விலை 64 சதவீதத்தாலும், 2 ஆயிரம் கொள்ளளவுக்கு மேற்பட்ட காரின் 04

### வெளிநாடுகளுக்கு ஆள்களைக் கடத்திய கும்பல் கைது

கொழும்பு, ஏப்.3

மிகவும் சூட்சுமமான முறையில் ஆள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றும் கைங்காரியத்தில் ஈடுபட்டுவந்த மர்மக்கும்பலை கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினர் மடக்கிப் பிடித்துள்ளனர். பல்வேறு கோணங்களிலும் இவர்கள்மீது முடுக்கிவிடப்பட்ட விசாரணைகளின் மூலம் பல திடுக்கிடும் தகவல்கள் வெளி 04

### பெற்றோல் விலையை அதிகரிக்குமாறு கோரிக்கை

இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் பெற்றோலின் விலையை 15 ரூபாவால் அதிகரிக்க வேண்டும் என அரசிடம் கோரியுள்ளது. தாம் எதிர்நோக்கும் நட்டத்தை நிவர்த்திக்கவே இந்தக் கோரிக்கையை விடுத்ததாகக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ்.சுரேஸ் குமார் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அரசு விரைவில் பதில் அளிக்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

### சம்பள அதிகரிப்பு குறித்துப் பேச்சு

ஜோர்தானில் பணிப்புரிகின்ற இலங்கையர்களுக்கான சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அமைச்சர் டிலான் பெரேரா, ஜோர்தானின் அரச தரப்புடன் பேச்சுக்களை மேற்கொண்டுள்ளார். ஜோர்தானில் பணி புரியும் இலங்கையர்களின் வாழ்க்கை நலனை அடிப்படையாக கொண்டு, சில உடன்படிக்கைகளும் ஏற்படுத்திக் கொள்ளப்பட விருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (கு)

### இராணுவ பஸ் மோதியதில் பெண் பலி

இராணுவ பஸ் ஒன்று மோதியதில் பெண் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். எப்பாவெல தலாவ, கிரலோகம வித்தியாலத்திற்கு முன்னால் உள்ள வீதிக் கடவையில் வைத்து குறித்த பெண், பஸ்ஸில் மோதுண்டுள்ளார். 64 வயதான பெண் ஒருவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார். பஸ்ஸின் சாரதியைப் பொலிஸார் கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.

### புத்தாண்டுக்காக 750 பஸ்கள் சேவையில்

சித்திரைப் புத்தாண்டு காலப் பகுதியை முன்னிட்டு நாளை மறுதினம் முதல் விசேட பஸ் சேவையை நடைமுறைப்படுத்தத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக சுமார் 750 பஸ்களை சேவையில் ஈடுபடுத்தவுள்ளதாகவும் பண்டிகைக்கால விசேட பஸ்களை அடையாளம் காணும் பொருட்டு மும்மொழிகளிலும் அச்சிடப்பட்ட புதிய ஸ்ரிக்கர் ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழுவின் தலைவர் ரோஷான் குணவர்த்தன குறிப்பிட்டார். (து)

### பஜாஜ் ஆட்டோ பங்கு 2 சதவீதம் வீழ்ச்சி

பெற்றோல் மற்றும் டீசலில் இயங்கும் முச்சக்கர வாகனங்கள் மீதான இறக்குமதித் தீர்வையை இலங்கை அதிகரித்ததைத் தொடர்ந்து பஜாஜ் ஆட்டோ பங்குகள் 2 சதவீதத்தால் வீழ்ச்சிகண்டன. சகல வகையான ஓட்டோக்கள் மீதான இறக்குமதி வரியும் 6 சதவீதத்திலிருந்து தற்போது 100 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. பஜாஜ் கம்பனி இலங்கைக்கு மாதாந்தம் 9,000 தொடக்கம் 10,000 வரையான ஓட்டோக்களை இலங்கைக்கு ஏற்றுமதி செய்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவாவில் இறுதிக் கணங்கள் வெளிவரும் மேலதிக தகவல்கள்

கொழும்பு, ஏப்.3

ஜெனிவாவில் அரசு பிரகடனப்படுத்திய இராஜ தந்திரப் போரில் அது தோற்று விட்டாலும், அங்கே நடந்த அரசியல், இராஜதந்திர முயற்சிகள் குறித்த தகவல்கள் தொடர்ந்து வெளியாகி வருகின்றன.

அப்படி ஜெனிவாவில் நடைபெற்ற மேலும் பல விடயங்களின் தொகுப்பு வருமாறு:-

தீர்மான இறுதி வரைபு வெளியாவதற்கு பல நாள்கள் முன்னதாகவே, ஜெனிவாவில் இந்திய - அமெரிக்க இராஜதந்திரிகள் இரகசியமான ஆலோசனைகளில் மூழ்கியிருந்தனர்.

''ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப உதவிகளுடன் இலங்கை அரசு நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்'' என்ற தீர்மான வாசகம் திருத்தப்படவேண்டும் என்பதில் இந்தியா ஒற்றைக் காலில் நின்றது.

இந்தப் பேரத்தில் மிகவும் முக்கிய பங்கை ஆற்றியவர், ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கான இந்தியாவின் புதிய தூதர் திலிப் சின்கா ஆவார்.

ஜெனிவாத் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்படுவதற்கு 5 நாள்கள் முன்னதாகவே அவர் ஞாயிற்றுக்கிழமை புதுடில்லியில் இருந்து ஜெனிவாவுக்கு வந்திருந்தார். அமெரிக்க அதிகாரிகளுடன் உடனடியாகவே அவர் ஆழமான ஆலோசனைகளை நடத்தினார்.

இலங்கைக்கு எதிரான தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்படுவதற்கு இரண்டு நாள்கள் முன்னதாக - செவ்வாய்க்கிழமை இரவு சின்காவுக்கு இரவு விருந்தளித்தார் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

ஜெனிவாவில் உள்ள இலங்கைத் தூதரகம் இந்த விருந்தை ஒழுங்கு செய்தது. அதற்குக் காரணம், இந்தியாவை வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் நடுநிலையாவது வகித்து ஒதுங்கி நிற்குமாறு வலியுறுத்துவதேயாகும்.

ஜெனிவாவுக்கான தூதுவராக நியமிக்கப்பட முன்னர், இந்திய வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலராக இருந்தவர் திலிப் சின்கா. இலங்கைக்கு ஆதரவாக இந்தத் தடவை இந்தியா நடந்துகொள்ளாது என்பதை அந்த இரவு விருந்தின்போதே சின்கா, பீரிஸுக்குத் தெளிவுபடுத்திவிட்டார்.

உள்நாட்டு விவகாரங்களினால் இந்தமுறை இலங்கையைக் காப்பாற்ற முடியாது என்று அவர் கைவிரித்து விட்டார்.

விருந்து முடித்து வெளியே வந்த இலங்கை அமைச்சர் ஒருவர், தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா வாக்களிக்கப் போகிறது என்பதைப் பகிரங்கமாகக் கூறினார். அதே வேளை, வாக்கெடுப்புக்கு முதல் நாளான புதன்கிழமை இரவு மிகக் கடுமையான இராஜதந்திர பேரம் பேசல்கள் இலங்கை - அமெரிக்க -இந்தியத் தரப்புகளில் இடம் பெற்றன.

தீர்மானத்தில் திருத்தம் செய்வதற்கு அமெரிக்கப் பிரதிநிதி எலின் டொனஹேயுடன் பேரம் பேசுமாறு திலிப் சின்காவுக்கு புதுடில்லியில் இருந்து அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் தீர்மானத்தைத் திருத்துவதற்கு அமெரிக்காவும் அதன் தோழமை நாடுகளும் விரும்பவில்லை. அப்படிச் செய்வது இலங்கையை வழிப்படுத்துவதாக அமையாது என்று அவை கருதின. ஆனால், திலிப் சின்கா மிகக் கடுமையாக, விடாப்பிடிப் போக்குடன் இருந்தார்.

ஒரு கட்டத்தில் அவர், திருத்த மாட்டேன் என்று அமெரிக்கா பிடிவாதம் பிடித்தால் இந்தியா தீர்மானத்தை எதிர்க்கும் என்று மிரட்டினார். 2009ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிராக மேற்குலக நாடுகள் கொண்டு வந்த தீர்மானத்தை இந்தியா முன்னின்று தோற்கடித்ததையும் அவர் நினைவுபடுத்திச் சுட்டிக்காட்டினார்.

கடைசியாக இந்தியாவின் வழிக்கு வந்தது அமெரிக்கா. தீர்மான வாசகங்கள் திருத்தப்பட்டன. நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசின் ஒப்புதலுடன், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்கலாம் என்ற இந்தியாவின் திருத்தம் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

அமெரிக்கா கொண்டு வந்த இந்தத் தீர்மானத்துக்கு ஹங்கேரி, ருமேனியா, நெதர்லாந்து, ஆஸ்திரேலியா, மொனாக்கோ, ஸ்பெயின், லித்வேனியா, பின்லாந்து, சைப்ரஸ், குரோசியா, பல்கேரியா, ஸ்லோவேனியா, எஸ்தோனியா, செக் குடியரசு, லக்சம்போர்க், கிறீஸ், இஸ்ரேல், ஸ்லோவாக்கியா, மோல்டா, ஜோர்ஜியா, சுவிற்சர்லாந்து, சோமாலியா, கனடா, கமரூன், லிச்சன்ஸ்டைன், நோர்வே, டென்மார்க், சுவீடன், அயர்லாந்து, பிரான்ஸ், பெல்ஜியம், போர்த்துக்கல், ஒஸ்ரியா, போலந்து, பிரித்தானியா, ஜெர்மனி, இத்தாலி, ஐஸ்லாந்து மற்றும் நியூசிலாந்து ஆகிய 40 நாடுகள் துணை அனுசரணை வழங்கியிருந்தன.

இவற்றில் 13 நாடுகள் மட்டுமே ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இந்த முறை வாக்களிக்கும் உரிமையைக் கொண்டிருந்தன.

40 நாடுகளின் ஆதரவுடன் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்கா கொண்டு வந்திருந்தாலும், இந்தியாவின் அழுத்தங்களுக்கு அமெரிக்கா பணிந்து போக வேண்டியிருந்ததால், முன்னைய வரைபின்படி - அதிக நெருக்குதல்களைக் கொடுக்கும் வகையிலான தீர்மானத்தை நிறைவேற்ற முடியாது போனது என்று அமெரிக்க ராஜதந்திரிகள் கூறுகிறார்கள். (உ)

## இராஜதந்திர ரீதியில் இலங்கைக்கு சிக்கல்



கொழும்பு, ஏப்.3

இலங்கையின் மீது இராஜ தந்திர ரீதியான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படக் கூடுமென வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பொருளாதாரத் தடைகளை விடத் தற்போதைக்கு இராஜதந்திர ரீதியான அழுத்தங்களின் ஆபத்தே அதிகளவில் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாகத் தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர்கள் செறிந்து வாழும் நாடுகளில் இலங்கை இராஜதந்திரிகள் மீது பல்வேறு வழிகளில் அழுத்தங்கள் பிரயோகிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன் ஒரு கட்டமாகவே உலகத் தமிழர் பேரவை அமைப்பு, பிரிட்டனுக்கான இலங்கைத் தூதரக உயரதிகாரி மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா மீது அழுத்தங்களைப்பிரயோகித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் காலங்களில் இவ்வாறான நெருக்கடிகள் ஏற்படலாம் எனவும் அவ்வாறான சவால்களை எதிர்நோக்கத் தயாராக வேண்டுமெனவும் அமைசசா பீரிஸ் தெரிவித்துள்ளார். (த)

# நீதிமன்றத்தாலும் மாற்றமுடியாத ஜனாதிபதி ராஜபக்ஷவின் முடிவு

## மனித உரிமை மீறலுக்கு அதுதான் காரணம்

கொழும்பு, ஏப்.3

இலங்கையில் நடைமுறையிலுள்ள அரசமைப்பு இலங்கை ஜனாதிபதிக்கு நிறைவேற்று அதிகாரத்தை வழங்குகிறது, நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டு ஜனாதிபதி எடுக்கும் முடிவுகளை இலங்கை நீதிமன்றங்களால் மாற்றமுடியாது.

இதன் காரணமாக, இலங்கை இராணுவமும், காவற்றுறையும் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதுடன் அவற்றுக்கான தண்டனைகளிலிருந்தும் விடுபடுகின்றனர். இவ்வாறு ஆசிய மனித உரிமைகள் ஆணைக் குழுவின் இயக்குநரான பசில் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பாகத், தற்போது ஆஸ்திரேலியாவில் வாழும் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட மக்கள் அமைப்பான மனித உரிமைகள் மற்றும் சமத்துவத்துக்கான மக்கள் அமைப்பு ஒழுங்கு செய்த கருத்தரங்கு அண்மையில் இடம் பெற்றது.

இக்கருத்தரங்கில் ஆசிய மனித உரிமைகள் ஆணைக் குழுவின் இயக்குநரான பசில் பெர்னாண்டோ மற்றும் சுதந்திரமான செயற்பாடுகள் மற்றும் வாழ்வதற்கான உரிமை தொடர்பாகப் பரப்புரைகள் மேற்கொண்டுவரும் 'பிளாட்போம் போர் பிரீடம்' என்ற அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பிரிற்றோ பெர்னாண்டோ ஆகியோர் உரையாற்றினர்.

இலங்கையில் நடைமுறையிலுள்ள சட்ட முறைமையில் காணப்படும் குறைபாடுகள் தொரடர்பாக ஆசிய மனித உரிமைகள் ஆணைக் குழுவின் இயக்குநரான பசில் பெர்னாண்டோ உரையாற்றினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

குற்றஞ்சாட்டப்படும் சந்தேகநபர்கள் எந்தவொரு சட்ட ரீதியான நடவடிக்கைகளுமின்றி தண்டிக்கப்படுகின்றனர். இவ்வாறு குற்றங்கள் எதுவும் செய்யாது காவற்றுறையால் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்படும் சிலர் தப்பிச்செல்ல முற்படும் போது சுடப்படுகின்றனர்.

இவ்வாறு கைதுசெய்யப்படும் குறிப்பிட்ட சில எண்ணிக்கையானவர்கள் காவற்றுறையின் தடுப்பிலிருக்கும் போதே காணாமற்போகின்றனர். பல ஆயிரக்கணக்கானவர்கள் எந்தவொரு விசாரணைகளுமின்றி அவசரகால சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.

1971 இல் ஜே.வி.பியால் மேற்கொள்ளப்பட்ட கிளர்ச்சி தொடர்பாகப் பீதியடைந்த இலங்கை அரசு, அதன் பின்னரே இவ்வாறான சட்ட மாற்றங்களை மேற்கொண்டது என பசில் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியானது இலங்கையின் தென்பகுதிக் கிராமங்களைச் சேர்ந்த சிங்கள இளையோர்கள் மத்தியில் ஆழமான மாற்றத்தைக் கொண்டுவந்த ஒரு அமைப்பாக உள்ளது. எவ்வாறிருப்பினும், இவ்வாறான சட்ட ரீதியான பிரச்சினைகள் ஜே.வி.பியின் கிளர்ச்சிக்கு முன்னரே ஆரம்பமாகின.

1971இற்கு முன்னர் இலங்கை அரசின் அடக்குமுறை பெரிதளவில் தமிழ் சிறுபான்மை மக்களையே பாதித்தது. இதன் பாதிப்பை சிங்கள பெரும்பான்மை மக்கள் சந்திக்கவில்லை.

1948இல் உருவாக்கப் பட்ட இலங்கையின் அரசமைப்பானது 'ஜனநாயகக்' கோட்பாடுகளைக் கொண்டது என பசில் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். ஆனால், இந்த அரசியலமைப்பின் கீழ் மலையகத் தமிழர்கள் தமக்கான குடியுரிமையை இழந்ததுடன், தமிழ்மொழி பேசும் மக்களுக்கான சமஉரிமைகள் மறுக்கப்பட்டதுடன், ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்ட தமிழ் மக்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன எனவும் ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இயக்குநரான பசில் பெர்னாண்டோ தனது உரையில் சுட்டிக் காட்டினார். (த)

## சேவைக்காக எனக்கு விருது வழங்குங்கள்

### கட்சியிடம் கேட்கிறார் மேர்வின் சில்வா

கொழும்பு, ஏப். 3

எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதைத் தவிர்த்து கட்சிக்காக நான் செய்த அர்ப்பணிப்புகளுக்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எனக்கு விருது வழங்கிக் கௌரவிக்க வேண்டும் என அமைச்சர் மேர்வின் சில்வா கூறியுள்ளார்.

அமைச்சரினால் தெரிவிக்கப்பட்ட கருத்து தொடர்பில், ஒழுக்காற்று நடவடிக்கைகளை [illegible] ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ள[illegible] பட்டுள்ளதையடுத்தே ஜப்பானில் இருந்தவாறு அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஒழுக்காற்று நடவடிக்கைகளையும், ஒழுக்க விதிமுறைகளையும் மீறும் வகையில் எனது கருத்து அமையவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குப் பாதிப்புகளை ஏற்படுத்தும் வகையில் நான் ஒருபோதும் செயற்பட்டதில்லை. அதனால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கட்சியின் தலைவராக இருக்கும் [illegible] எந்தப் பிரச்சினையும் ஏற்படாது - என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (சி)

## சர்வதேச அழுத்தம் அதிகரிக்கும் அபாயம்

### திஸ்ஸவும் எச்சரிக்கிறார்

கொழும்பு,ஏப் 03

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாவிடின் இலங்கை மீது சர்வதேச சவால்களும் அழுத்தங்களும் அதிகரிக்கும். எனவே அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட ஏனைய அரசியல் கட்சிகளை இணைத்துக் கொண்டு பொது இணக்கப்பாட்டுடன் செயற்படுவதே சிறந்தது என்று அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு;-

பரிந்துரைகளில் அதிகாரப் பகிர்வு மற்றும் அரசியல் தீர்வு என்பன முக்கிய இடம் பிடித்துள்ளமையால் நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஊடாக தீர்வுகளை எட்ட முயலவேண்டும். ஏனென்றால் ஜெனிவாத் தீர்மானத்தின் பின்னர் உலக நாடுகள் அனைத்தும் மிகவும் வெளிப்படையாகவே இலங்கை விவகாரங்களைக் கையாள ஆரம்பித்துள்ளன. இது நாட்டிற்கு நன்மை ஏற்படுத்தாது.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான தேசிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். பிரச்சினைகளுக்குரிய விவகாரங்கள் குறித்து அனைத்து தரப்புக்களுடனும் பேசிப் பொது இணக்கப்பாட்டின் அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டும். குறிப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்களிப்பு கட்டாயமாக இடம்பெற வேண்டியதொன்றாகும். -என்றார். (த)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ரூ. 50,000 நகைக்கடையில் திருட்டு

யாழ்ப்பாணம், ஏப் 03

நகைக்கடைக் கூரையைப் பிரித்து உள்நுழைந்த திருடர்கள் கடையிலிருந்த 50 ஆயிரம் ரூபா பணத்தைத் திருடிச் சென்றுள்ளனர் என்று பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

''நகைகள் வைத்துப் பூட்டப்படும் இரும்புப் பெட்டியை உடைக்க முயற்சி செய்யப்பட்டுள்ளது. எனினும் அது கைகூடாததனால் பணத்தை மட்டும் திருடிச் சென்றுள்ளனர்'' என கடை உரிமையாளர் தெரிவித்தார்.

யாழ். கஸ்தூரியார் வீதியில் உள்ள நகைக் கடை ஒன்றிலேயே நேற்று முன்தினம் இரவு சம்பவம் இடம்பெற்றுள்ளது. நேற்றைய தினம் கடை உரிமையாளர்கள் கடைக்குச் சென்று பார்த்தபோதே திருட்டு இடம்பெற்றுள்ளமை தெரியவந்தது.

குறித்த கடைக்கு அண்மையில் வசித்தவர்களுக்கோ அல்லது காவல் கடமையில் ஈடுபட்டவர்களுக்கோ இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக எதுவுமே தெரியவில்லை. திருடர்கள் வெகு சாமர்த்தியமாக எவருக்கும் சத்தம் கேட்காதபடி தாம் வந்த காரியத்தைக் கச்சிதமாகச் செய்து முடித்துவிட்டுப் பறந்துவிட்டார்கள்.

சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்ததோடு விசாரணைகளை மேற்கொண்டனர். (உ-4)

# பளை – காங்கேசன் ரயில் பாதை புனரமைப்பு விரைவில் ஆரம்பம்

## 146 மில்லியன் அமெ. டொலர் ஒதுக்கீடு

*யாழ்ப்பாணம், ஏப்.3*

***பளைக்கும் காங்கேசன் துறைக்கும் இடையிலான ரயில் பாதையைப் புனரமைக்கும் வேலைத் திட்டம் இரு மாதங்களுக்குள் ஆரம்பிக்கப்படவுள்ளது. ரயில் பாதை புனரமைப்பு வேலைகளில் ஈடுபடவுள்ள இந்திய நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் இந்தத் தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.***

ரயில் பாதைப் புனரமைப்புக்கான இரும்புத் தண்டவாளங்கள் தற்போது யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டு களஞ்சியப் படுத்தப்பட்டு வருகின்றன.

தினமும் ஏ-9 வீதி வழியாகத் தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பெரும் எண்ணிக்கையான கனரக வாகனங்கள் மூலம் ரயில் தண்டவாளங்கள் ஏற்றி வரப்படுவதனைக் காண முடிகின்றது.

''இந்திய அரசின் 146 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியுடன் பளைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான 56 கிலோ மீற்றர் நீளமான ரயில் பாதை புனரமைக்கப்படவுள்ளது. இந்தப் புனரமைப்புப் பணிகள் யாவும் இன்னமும் இரண்டு மாதங்களுக்குள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அடுத்த வருடம் டிசெம்பர் மாதத்துடன் இந்தப் புனரமைப்புப் பணிகளைப் பூர்த்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது'' என அந்த அதிகாரி மேலும் கூறினார். (த-3)



*இரண்டு நாள் பயணமாக பிரிட்டன் அனைத்துக்குழு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் நேற்று மாலை யாழ்ப்பாணம் வந்தடைந்தனர். யாழ்.மத்திய கல்லூரி விளையாட்டரங்கில் நேற்று மாலை 3.30 மணியளவில் ஹெலி மூலம் இவர்கள் வந்திறங்கினார்கள். இவர்கள் இன்று காலை 9 மணியளவில் யாழ்.மாவட்ட செயலகத்தில் யாழ்.மாவட்ட அரச அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். அதன் பின்னர் அரியாலை மற்றும் தனங்களப்பு பகுதிகளுக்கும் பயணம் செய்வர். (த-5-23)*

## சிறுமி மீது வன்புணர்வு இளைஞர் மீது வழக்கு

தென்மராட்சி, ஏப்.3

கொடிகாமம் பகுதியில் ஏழு வயது சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்திய சம்பவம் தொடர்பாக இளைஞர் ஒருவருக்கு எதிராக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் யாழ். மாவட்ட உள சமூக இணைப்பாளர் கு.கௌதமன் சட்டத்தரணி கே.சுகாஸ் மூலம் சாவகச்சேரி நீதிமன்றில் மீள் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

கடந்த டிசெம்பர் மாதம் இடம்பெற்ற சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்து கடந்த 12 ஆம் திகதி சாவகச்சேரி நீதிமன்றால் நிபந்தனையுடனான பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

சிறுமி படிக்கும் பாடசாலையின் பக்கமோ சிறுமி வசிக்கும் பகுதிக்கோ போகக் கூடாது என அந்த இளைஞருக்கும் இவரது நடவடிக்கையை கண்காணித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அந்தப் பிரிவு கிராம அலுவலருக்கும் நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்த இளைஞர் வெளியில் இருப்பதால் சிறுமிக்குப் பாதிப்பு ஏற்படலாமென்பதால் மீள் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (த-9)

## 'நொதேர்ன் பவர்' ஒயிலில் கலப்படம் பவுஸர் சாரதி, உதவியாளர் சிக்குவர்

யாழ்ப்பாணம், ஏப்.3

சுன்னாகத்திலுள்ள 'நொதேர்ன் பவர்' மின்பிறப்பாக்கிகளுக்கு எடுத்து வரப்பட்ட ஒயிலில் கலப்படம் செய்யப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொலன்னாவ எண்ணெய்க் களஞ்சியத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஒயில் மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோதே கலப்படம் செய்யப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக 'நொதேர்ன் பவர்' நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எண்ணெய் பவுசர் மூலம் சுன்னாகத்துக்கு எடுத்துவரப்பட்ட ஒயிலிலேயே இவ்வாறு கலப்படம் செய்யப்பட்டுள்ளது.

கொலன்னாவ எண்ணெய்க் களஞ்சியத்திலிருந்து சுன்னாகத்துக்குப் பவுஸரில் எடுத்து வரப்பட்ட ஒயிலில் இடையில் வைத்து இந்தக் கலப்படம் செய்யப்பட்டுள்ளதாக விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதாக அந்த அதிகாரி மேலும் கூறினார். தற்போது பவுஸர் சாரதி மற்றும் உதவியாளர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

தினமும் 'நொதேர்ன் பவர்' நிறுவனத்துக்கு ஒரு லட்சம் லீற்றர் ஒயில் தேவைப்படுகிறது. இந்த ஒயில் பெற்றோலியக் கூட்டுத்தாபன பவுஸர்கள் மூலம் எடுத்து வரப்படுகிறது. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பவுஸரிலேயே இந்தக் கலப்படம் இடம் பெற்றிருக்கிறது.

ஒயிலில் கலப்படம் செய்யப்பட்டுள்ளதாக 'நொதேர்ன் பவர்' நிறுவனத்துக்குச் சந்தேகம் ஏற்பட்டதை அடுத்து ஒயில் மாதிரிகள் சோதனைக்காக கொலன்னாவைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அந்த எண்ணெய் பவுஸர் சீல் வைக்கப்பட்டு சுன்னாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே. (த-3)

## யாழ். உருளைக்கிழங்கு தெற்குச் சந்தைகளுக்கு

வலி வடக்கு, ஏப். 3

தமது விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு குடாநாட்டுச் சந்தைகளில் உரிய விலையைப் பெற முடியாத நிலையில் அவற்றைத் தென்னிலங்கைச் சந்தைகளுக்குக் கொண்டு செல்வதாகக் குடாநாட்டு விவசாயிகள் கூறுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் கடந்த டிசெம்பர், ஜனவரி மாதங்களில் பயிரிடப்பட்ட உருளைக்கிழங்கு நல்ல விளைச்சலைக் கொடுத்துள்ளது.

ஆனால் இதனை யாழ்ப்பாணச் சந்தைகளில் உரிய விலை கிடைக்காமையால் தென்னிலங்கை சந்தைக்கு கொண்டு செல்வதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

உடுவில் விவசாய பிரதேசத்தில் கடந்த சீசனில் சுமார் 400 பெட்டி உருளைக் கிழங்கு விதைக்கப்பட்டு அறுவடை செய்யப்பட்டுள்ளதாக உடுவில் பிரதேச செயலக விவசாயப் போதனாசிரியர் தெரிவித்தார்.

இதன் மூலம் அதிக விளைச்சல் கிடைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

ஒரு பெட்டி உருளைக் கிழங்கில் 15 பெட்டி முதல் 18 பெட்டிகள் வரை விளைச்சல் கிடைத்துள்ளதாகவும் இதனை கொழும்பு, தம்புள்ள சந்தைகளில் விவசாயிகள் சந்தைப்படுத்தி குடாநாட்டிலும் பார்க்கக் கூடிய விலையை பெற்றுள்ளார்கள் எனவும் அவர் கூறினார். (த-86)

## நிகழ்வுகள் இன்று

**கூட்டம்**

நெடுந்தீவுப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் முற்பகல் 10 மணிக்கு நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் தலைமையில் நடைபெறும். (த-7)

**செயலமர்வு**

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான விழுமியக் கல்வி தொடர்பான விழிப்பூட்டல் செயலமர்வு காலை 9 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (த-9)

**கலந்துரையாடல்**

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட ஆங்கில தினப் போட்டிகள் தொடர்பாக ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் பிற்பகல் ஒரு மணிக்கு வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (த-9)

* * *

வடமராட்சி கல்வி வலய அதிபர்களுக்கான அவசர கலந்துரையாடல் பிற்பகல் 1.30 மணிக்கு புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது. சகல அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் அறிவித்துள்ளார். (த-190)

## கருணை இல்ல நிர்வாகத்திடம் விசாரணை நடத்த முடிவு

### சிறுமி சீரழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக

யாழ்ப்பாணம், ஏப் 3

உரும்பிராய் கருணை இல்லம் சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்த 13 வயதுச் சிறுமி வன்புணர்வுக்குட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக அந்த இல்லத்தை நடத்திவந்த நிர்வாகத்தினர் மீது விசாரணை நடத்தப்படவுள்ளதாக வட மாகாண நன்னடத்தைச் சிறுவர் பராமரிப்புத் திணைக்கள ஆணையாளர் ரி.விஸ்வரூபன் தெரிவித்துள்ளார்.

சிறுமி வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டமை தொடர்பான குற்றச்சாட்டில் அதனை நடத்திவந்த கோட்டக்கல்வி அதிகாரி கைது செய்யப்பட்டிருந்தார். பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். அவரிடமும் ஏனைய பணியாளர்களிடமும் விசாரணை நடத்தப்படவுள்ளது.

விசாரணையைத்தொடர்ந்தே அந்த இல்லத்தை எதிர்காலத்தில் இயங்க அனுமதிப்பதா இல்லையா என்பது தெரியவரும் என்று ஆணையாளர் தெரிவித்தார். விரைவில் இந்த விசாரணை நடத்தப்படவுள்ளது என ஆணையாளர் மேலும் கூறினார். (உ-4)

### சுவீகரிக்கப்பட்ட

## காணிகளுக்கு நஷ்ட ஈடு

காரைநகர், ஏப். 3

காரைநகர் கடற்படைத்தள விஸ்தரிப்பிற்காக அரசினால் சுவீகரிக்கப்பட்ட காணிகளில் ஒரு பகுதியினருக்கு நஷ்ட ஈட்டுத் தொகை வழங்குவதற்கான ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றுள்ளது. எனவே பின்வரும் இலக்க காணித் துண்டுகளில் உரிமையாளர்கள் காரைநகர் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு காரைநகர் பிரதேச செயலர் திருமதி தே. பாபு கேட்டுள்ளார்.

காணித்துண்டுகளின் இலக்கங்கள் வருமாறு:-

2, 4, 8, 11, 17, 26, 67லீ, 68, 90, 93, 125, 126, 131, 149, 154. (ங-250)

## திசைமாறிய இலங்கை மீனவர்கள்

### இந்தியப் பொலிஸாரின் பாதுகாப்பில்

யாழ்ப்பாணம், ஏப். 3

பிளாஸ்ரிக் படகில் கடலுக்குச் சென்ற பருத்தித்துறை சுப்பர் மடம் பகுதியைச் சேர்ந்த இரண்டு மீனவர்கள் இந்தியப் பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 30ஆம் திகதி இவர்கள் இருவரும் பிளாஸ்ரிக் படகில் கடற்றொழிலுக்குச் சென்ற போது திசை மாறி இந்தியக் கடல் எல்லைக்குள் நுழைந்தனர். அப்போது படகின் எரிபொருளும் தீர்ந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. இவர்களையும் படகினையும் இந்திய மீனவர்கள் தமது இழுவைப் படகுகள் மூலம் கோடிக்கரைக்கு அழைத்துச் சென்றுள்ளனர். அவர்களை இந்தியப் பொலிஸார் பொறுப்பேற்றுக் கொண்டதாக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாயர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.அருள்தாசன் தெரிவித்தார்.

இதேவேளை, நீர்கொழும்பிலிருந்து நயினாதீவு நோக்கி வந்துகொண்டிருந்த நயினாதீவு மீனவர்களின் படகு ஒன்றும் இராமேஸ்வரம் பகுதிக்கு திசைமாறிச் சென்றுள்ளதாகத் தெரியவருவதாக யாழ். மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ். தவரட்ணம் தெரிவித்தார். (ங-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்றங்களாலும் மாற்ற முடியாத ஜனாதிபதியின் முடிவு இலங்கையில் மனித உரிமைகளுக்கு அதுவும் காரணம்

## ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.3

இலங்கையில் நடைமுறையிலுள்ள அரசமைப்பு இலங்கை ஜனாதிபதிக்கு நிறைவேற்று அதிகாரத்தை வழங்குகிறது, நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டு ஜனாதிபதி எடுக்கும் முடிவுகளை இலங்கை நீதிமன்றங்களால் மாற்றமுடியாது.

இதன் காரணமாக, இலங்கை இராணுவமும், காவற்றுறையும் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதுடன் அவற்றுக்கான தண்டனைகளிலிருந்தும் விடுபடுகின்றனர். இவ்வாறு ஆசிய மனித உரிமைகள் ஆணைக் குழுவின் இயக்குநரான பசில் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பாகத், தற்போது ஆஸ்திரேலியாவில் வாழும் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட மக்கள் அமைப்பான மனித உரிமைகள் மற்றும் சமத்துவத்துக்கான மக்கள் அமைப்பு ஒழுங்கு செய்த கருத்தரங்கு அண்மையில் இடம்பெற்றது.

இக்கருத்தரங்கில் ஆசிய மனித உரிமைகள் ஆணைக் குழுவின் இயக்குநரான பசில் பெர்னாண்டோ மற்றும் சுதந்திரமான செயற்பாடுகள் மற்றும் வாழ்வதற்கான உரிமை தொடர்பாகப் பரப்புரைகள் மேற்கொண்டுவரும் Platform For Freedom என்ற அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பிரிற்றோ பெர்னாண்டோ ஆகியோர் உரையாற்றினர்.

இலங்கையில் நடைமுறையிலுள்ள சட்ட முறைமையில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாக ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இயக்குநரான பசில் பெர்னாண்டோ உரையாற்றினார்.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

குற்றஞ்சாட்டப்படும் சந்தேகநபர்கள் எந்தவொரு சட்ட ரீதியான நடவடிக்கைகளுமின்றி தண்டிக்கப்படுகின்றனர். இவ்வாறு குற்றங்கள் எதுவும் செய்யாது காவற்றுறையால் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்படும் சிலர் தப்பிச்செல்ல முற்படும்போது சுடப்படுகின்றனர்.

இவ்வாறு கைதுசெய்யப்படும் குறிப்பிட்ட சில எண்ணிக்கையானவர்கள் காவற்றுறையின் தடுப்பிலிருக்கும் போதே காணாமற் போகின்றனர். பல ஆயிரக்கணக்கானவர்கள் எந்தவொரு விசாரணைகளுமின்றி அவசரகால சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

1971 இல் ஜே.வி.பியால் மேற்கொள்ளப்பட்ட கிளர்ச்சி தொடர்பாகப் பீதியடைந்த இலங்கை அரசு, அதன் பின்னரே இவ்வாறான சட்ட மாற்றங்களை மேற்கொண்டது என பசில் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியானது இலங்கையின் தென்பகுதிக் கிராமங்களைச் சேர்ந்த சிங்கள இளையோர்கள் மத்தியில் ஆழமான மாற்றத்தைக் கொண்டுவந்த ஒரு அமைப்பாக உள்ளது. எவ்வாறிருப்பினும், இவ்வாறான சட்ட ரீதியான பிரச்சினைகள் ஜே.வி.பியின் கிளர்ச்சிக்கு முன்னரே ஆரம்பமாகின.

1971இற்கு முன்னர் இலங்கை அரசின் அடக்குமுறை பெரிதளவில் தமிழ் சிறுபான்மை மக்களையே பாதித்தது.

1948இல் உருவாக்கப்பட்ட இலங்கையின் அரசமைப்பானது 'ஜனநாயகக்' கோட்பாடுகளைக் கொண்டது. ஆனால், இந்த அரசியலமைப்பின் கீழ் மலையகத் தமிழர்கள் தமக்கான குடியுரிமையை இழந்ததுடன், தமிழ் மொழி பேசும் மக்களுக்கான சம உரிமைகள் மறுக்கப்பட்டன. தமிழ் மக்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன - என்றார் ஆசிய மனித உரிமைகள் ஆணைக் குழுவின் இயக்குநரான பசில் பெர்னாண்டோ.

### மோ. சைக்கிள் வாங்க முண்டியத்த மக்கள்

01 ஒருபோதும் வாங்க முடியாது போய்விடும் என்ற பயம் காரணமாக வந்திருக்கிறோம்'' என்றார் திருமதி துஷிகரன்.

இதேவேளை, யாழ். நகரில் உள்ள கடை ஒன்றுக்கு சென்றவர்கள் நேற்றுத் திருப்பி அனுப்பப் பட்டனர். விற்பனையை உடனடியாக நிறுத்தி வைக்குமாறு கொழும்பில் இருந்து தமக்கு உத்தரவிடப்பட்டதாக விற்பனைப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

'' விலை கூடிய பின்னர் தங்களிடம் இருப்பவற்றையும் கூட்டி விற்பதற்காகவே இப்படிச் செய்திருப்பார்கள்'' என்று முணுமுணுத்தபடி சென்றதையும் காண முடிந்தது.

வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான வரியை ஞாயிறு நள்ளிரவு முதல் அரசு திடீரென் அதிகரித்துள்ளது. இதனால் சொகுசு வாகனங்களின் விலைகள் மட்டுமன்றி மோட்டார் சைக்கிள்களின் விலைகளும் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. (உ-4-5)

## உள்நாட்டுப் பணம் வெளியேறுவதை தடுப்பதற்கே வாகனவரி அதிகரிப்பு

01 விலை 96 சதவீதத்தாலும் 3ஆயிரம் கொள்ளளவுக்கு மேற்பட்ட காரின் விலை 86 சதவீதத்தாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், டீசல் காரின் விலை 59 சதவீதத்திலிருந்து 70 சதவீதம்வரை அதிகரித்துள்ளது. பெற்றோல் காரின் விலை 13சதவீதத்திலிருந்து 28 சதவீதமாக அதிகரித்துள்ளது.

அரசின் இந்த வரி அதிகரிப்பு நடவடிக்கைச் செயற்பாட்டால் ஒட்டோவின் விலையும் உயரக்கூடுமென இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதேவேளை, 2009 ஆம் ஆண்டு இலங்கை 3ஆயிரத்து 421 வாகனங்களை இறக்குமதி செய்தது. 2010 ஆம் ஆண்டு 37ஆயிரத்து 134 வாகனங்களும், 2011 ஆம் ஆண்டில் 54 ஆயிரத்து 225 வாகனங்களும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

2012ஆம் ஆண்டு பெற்றோல் வாகனத்தின் இறக்குமதி 18.9 வீதத்தால் அதிகரித்துள்ளது என புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

## இராணுவ வாகனம் மோதி நெடுங்கேணிவாசி உயிரிழப்பு

01 மாக நெடுங்கேணிக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போதே இராணுவ வாகனம் அவரை மோதித் தள்ளியுள்ளது.

இரவு 8.30 மணியளவில் சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

பாலசிங்கத்தை மோதிய வாகனம் மருதோடைப் பக்கமிருந்து வந்ததாகவும் அதிலிருந்தவர்கள், பைலாப் பாடல்களைப் பாடியபடி கொண்டாட்டமாக-குதூகலமாக-இருந்தார்கள் என்றும் சாட்சிகள் தெரிவித்தன.

பாலசிங்கத்தை மோதிய வாகனம் நிற்காமல் ஓடி மறைந்து விட்டது. தலையிலும் காலிலும் அடிபட்டதால் அதிகளவில் இரத்தம் வெளியேறி இறப்பு சம்பவித்துள்ளது என்று ஆரம்ப விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

மோதிய வாகனத்தைக் கண்டறிவதற்கான விசாரணைகளைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (உ-435)

## வெளிநாடுகளுக்கு ஆள்களைக் கடத்திய கும்பல் கைது

01 யாகியுள்ளன.சட்டவிரோதமான முறையில் இலங்கையிலிருந்து ஆஸ்திரேலிய கிறிஸ்மஸ் தீவுக்கு ஆட்களை ஏற்றும் செயலில் ஈடுபட்டு வந்த மர்மக்கும்பலின் பிரதிநிதிகள் இருவரும், பயணிகள் நால்வரும் கொட்டாஞ்சேனையில் பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், கும்பலின் பிரதான சந்தேக நபர்களை கைது செய்வதற்கு தாம் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுவருவதாக கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவினர் கருத்து தெரிவித்தனர்.

மேற்கூறப்பட்ட சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கண்டவாறு கூறினர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சட்டவிரோதமானமுறையில் ஆஸ்திரேலியா செல்வதற்காக 15 இலட்சம் ரூபா கோரி இக்குழுவினர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வந்துள்ளனர். கடந்த 25ஆம் திகதி கொட்டாஞ்சேனையில் பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்ட இம் மர்மக்கும்பலின் பிரதிநிதிகள் இருவரும், பயணிகள் நால்வரும் எதிர்வரும் 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஆள்கடத்தல் கும்பலின் பிரதான சந்தேக நபர்களான கல்முனையைச் சேர்ந்த இந்திரன் ரூபசாந்தன் மற்றும் களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த பரமசிவன் சந்திரகுமார் ஆகியோரைக் கைது செய்வதற்கு நாம் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றோம்.

கொழும்பிலுள்ள கிரி மற்றும் கிளிநொச்சி ரவி என்பவர்கள் ஏனைய பிரதேசங்களிலுள்ள தமது கடத்தல் கும்பலின் பிரதிநிதிகளும் இணைந்து கொழும்பிலுள்ள விடுதியொன்றில் தங்கியிருந்து பேருவளைப் பகுதியிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு ஆள்கடத்தல் செய்வதற்கு திட்டமிட்டிருந்தனர்.

சட்டவிரோத குற்றச் செயல்களில் ஈடுபட்ட முன்னாள் விடுதலை புலிகளின் போராளிகளே இவ்வாறு ஆள்கடத்தல் செய்கின்றனர். இவர்கள் யாழ்ப்பாணம், விஸ்வமடு, கல்முனைப் பிரதேசங்களில் வசித்து வருகின்றவர்களாவர்.

இந்த ஆள்கடத்தல் கும்பலே கடந்த ஜனவரி மாதம் 25ஆம் திகதி 71பேரை ஆஸ்திரேலியாவுக்கு ஆள் கடத்தல் செய்துள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் பல இரகசியங்களை அம்பலப்படுத்துவதற்காக நாம் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றோம்- என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

## தமிழகத்தில் புலிகளின் இரகசிய முகாம்களா?

01 பின்னர் அவர்கள், மீனவர்கள் என்ற போர்வையில் இலங்கைக்குத் திரும்பி, அந்நாட்டைச் சீர்குலைக்க முயற்சிப்பதாக செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

அந்தச் செய்தி முற்றிலும் ஆதாரமற்றது. அத்தகைய ஆயுதப் பயிற்சி முகாம்கள் தமிழ்நாட்டில் எதுவும் இல்லை.

சில காலத்திற்கு முன்பு இது போன்ற ஒரு தகவல் இலங்கையில் கிளப்பப்பட்டுப் பின்னர் அது வெளியானதற்கான பழியை இந்திய ஊடகங்களின் மீது தவறாகப் போட்டு, அந்தச் செய்தி திரும்பப் பெறப்பட்டது.

தமிழ்நாட்டில் தீவிரவாத இயக்கங்கள் தடை செய்யப்பட்டு, மறைமுக அல்லது வெளிப்படையான தீவிரவாதச் செயல்கள் ஏதும் நடைபெறாதபடி கடுமையாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

யாராவது தீவிரவாதி எனக் கண்டறியப்பட்டால், அவர்கள் சிறப்பு முகாம்களில் அடைக்கப்படுகிறார்கள்.

எனவே, தமிழ்நாட்டில் ஆயுதப் பயிற்சி முகாம்கள் நடத்தப்படுவது அல்லது அவ்வாறு நடத்தப்பட அனுமதி வழங்கப்படுவது என்ற கேள்விக்கே இடமில்லை -என்றுள்ளது. (த)

## ஜெனிவா தீர்மானத்தின் மூலம் இலங்கையில் நிரந்தர அமைதி

01 மைக் கொள்கைகளுக்குமாக, பெரும் அளவில் மனித அழிவுகள் ஏற்பட்டும், உரிமைகள் மீறப்பட்டுமிருக்கும் போது நம்பிக்கையான விசாரணை ஒன்றும், ஒரு வகையான பொறுப்பு கூறலும் இருக்க வேண்டும். அது இல்லாமல், நல்லிணக்கமும், நிரந்தர சமாதானமும் இனங்களுக்கிடையில் வர முடியாது. இது இலங்கையின் சகல இன மக்களுக்கும் நல்லதொன்றும், அவர்களை நிரந்தர ஒற்றுமைக்கு இட்டுச் செல்லும் என்றும் நம்புகிறோம் -என்றார்.

இந்தியா வாக்களித்திருப்பது, அந்தப்பகுதி அயல் நாடுகளுக்கிடையில் கடுப்பு நிலைகளைத் தோற்றுவிக்காதா என்று ஊடகவியலாளர்கள் அவரிடம் கேட்ட போது, தீர்மானம் எல்லா நாடுகளும், இலங்கை மக்களுக்கு ஒரு நிரந்தர சமாதானத்துக்காக, இலங்கை அரசுடன் சேர்ந்து உழைப்பதற்காகும் என்றும் அதை எதிர்வனத்தில் பார்க்க முடியாதென்றும் கூறினார்.

அதேவேளை இலங்கையின் நண்பனான இந்தியாவின் இணைவு, தீர்மானத்தின் நன்நோக்கத்தைத் தெளிவாக நம்பவைக்கிறதென்றும், தீர்மானத்தின் நடைமுறைக்கு இது பெரும் பங்களிப்பாக இருக்கும் என்றும் டொனாஹே கூறினார். மேலும் இலங்கை நம்பிக்கையான விசாரணை ஒன்றை நடத்தும் என்றும், அவர்களின் நல்லிணக்க அறிக்கையில் கூறப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவார்கள் என்று தானும் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த இரண்டும் இலங்கையில் நடந்தது போன்ற பெரும் மனித உரிமை மீறல்களுக்கும், மனித அழிவுகளுக்கும் பின்னர் ஒரு நல்லிணக்கம் ஏற்பட்டு, நிலையான சமாதானம் உண்டாகத் தேவையானவை -என்றார். (த)

### இலங்கையின் குற்றங்கள் குறித்த அமெரிக்க அறிக்கை அடுத்த வாரம்

01 2009ஆம் ஆண்டு அமெரிக்க வெளிவிவகார அமைச்சு வெளியிட்டிருந்தது. இப்போது வெளிவரவுள்ள அறிக்கையில் போர்க்குற்றங்கள் தொடர்பில் பல புதிய ஆவணங்களை அமெரிக்கா முன்வைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (உ-சி)

### ஆளும்கட்சி தலைவர்களுடன் ஜனாதிபதி பேச்சு

01 பில் பேச்சு நடத்தியுள்ளார்.

அலரிமாளிகையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலின்போது, ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் குறித்து அரசு எவ்வாறானதொரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்', இது தொடர்பில் அரச தரப்பினர் நாடாளுமன்றில் எவ்வாறான கருத்துகளை வெளியிட வேண்டும் என்பன உட்பட முக்கிய பல அம்சங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

அதேவேளை, இச்சந்திப்பின்போது அரசில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் ஜெனிவாத் தீர்மானம் தொடர்பில் தத்தமது கட்சிகளின் நிலைப்பாடுகளைத் தெளிவுப்படுத்தியுள்ளதுடன், ஆலோசனைகளையும் முன்வைத்தனர் என அறியமுடிகின்றது.

ஜெனிவாத் தீர்மானத்துக்கமைய கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைபடுத்துவதில் உள்ள சிக்கல் நிலைமைகள், அவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில் நாட்டுக்கு எதிர்காலத்தில் ஏற்படும் பிரச்சினைகள் உள்ளிட்ட அகப்புறச்சூழல் காரணிகள் குறித்தும் நேற்றைய சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன், நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையிலுள்ள சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவது குறித்தான உள்நாட்டுப் பொறிமுறை, அந்த அறிக்கையின் சிபாரிசுகளை முழுமையாக அமுல்படுத்துவதற்கு எதிராகக் கிளம்பும் எதிர்ப் பலைகள் குறித்தும் அங்கு கவனம் செலுத்தப்பட்டது.

எது எப்படியிருப்பினும், ஜெனிவாத் தீர்மாணம் குறித்து நாடாளுமன்றில் தமது உறுதியான நிலைப்பாட்டை அறிவிக்கவுள்ள அரசு, நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் எதிர்காலத்தில் முன்னெடுக்கவுள்ள நடவடிக்கைகள் குறித்தும் தெளிவுபடுத்தவுள்ளது.

அமைச்சர்கள் பலர் இதற்கு முன்னர் ஜெனிவாத் தீர்மானம் தொடர்பில் பல்வேறு கோணங்களில் கருத்துகளை வெளியிட்டிருந்தாலும், அரசின் உத்தியோகபூர்வ முடிவு சபையில் அறிவிக்கப்படும் என சிரேஷ்ட அமைச்சரொருவர் தெரிவித்தார்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவும் நேற்றுமாலை கொழும்பில் ஒன்றுகூடி ஜெனிவா தீர்மானம் குறித்துக் கலந்துரையாடியுள்ளது. இன்று நாடாளுமன்றில் அந்தத் தீர்மானம் தொடர்பில் எவ்வாறான கருத்துகளை வெளியிடுவது என்பது குறித்தும் அது ஆராய்ந்துள்ளது என அறியமுடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## விலை உயர்வைத் தடுக்கும் சக்தி அரசுக்கு இனி எப்போது?

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி கண்டுள்ளதால், இம்முறை தமிழ்-சிங்களப் புதுவருடக் கொண்டாட்டம் சோபை இழந்து போகும் நிலை உருவாகியுள்ளது.

நாட்டின் பணவீக்கம் 5.5 வீதம் உயர்ந்து, ரூபாவின் பெறுமதி பெருமளவில் வீழ்ச்சி கண்டுள்ளது. பணவீக்கத்தினால் இறக்குமதி செய்யப்படும் சகல பொருள்களின் விலைகளும் உயர்ச்சியடையும் சாத்தியம் உண்டு. அதனைத் தடுக்க அரசாங்கம் உட்பட எந்தச் சக்தியினாலும் இயலாது.

சர்வதேச நாணயநிதியம், இலங்கை அரசுக்கு வழங்கவிருந்த கடன்களை இடைநிறுத்தியுள்ளது. நாட்டின் பொருளாதார வளர்ச்சி, எதிர்பார்த்த அளவுக்கு முன்னேற்றம் காணவில்லை என்பதாலேயே நாணய நிதியம் அத்தகைய ஒரு கடுமையான நடவடிக்கையை மேற்கொண்டது.

இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த கடன் பணத்தை இம்முறை எப்பாடு பட்டும் பெற்றுவிட வேண்டும் என்பதற்காகவே, இறக்கு மதிப் பொருள்களின் விலை அதிகரிப்பு, வட்டி வீதங்களின் அதிகரிப்பு, நாணய மதிப்பிறக்கம் ஆகிய பாதகமான செயற்பாடுகளை அரசு கையில் எடுத்ததாக பொருளாதார நிபுணர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

இதேவேளை, நாணயத்தின் பெறுமதி அடுத்தடுத்துச் சரிந்து வருவதும் வழமையாகி விட்டது. அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை நாணயத்தின் மதிப்பு கடந்த 19 ஆம் திகதி 111 ரூபாவிலிருந்து முதலில் 131 ரூபா 60 சதமாக உயர்ந்தது. அதனை 125 ரூபாவாக நிலைநிறுத்த அரசு நடவடிக்கை எடுத்திருந்த போதிலும், நான்கு ஐந்து நாள்களிலேயே அமெரிக்க டொலருக்கான பெறுமதி 128 ரூபா 30 சதமாக உயர்ந்தது. இலங்கையின் பொருளாதார நிலை சரிந்து செல்வதாலேயே, பணவீக்கம் தவிர்க்க முடியாத ஒன்றாகிறது. அடிக்கடி உயர்ந்து செல்கிறது.

இதேவேளை, 8.8 வீதமாக இருந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதமும் இப்போது, திடீரென 8.2 வீதமாக இறங்கு முகம் கண்டுள்ளது.

அதன் விளைவாக -

தமிழ் - சிங்களப் புத்தாண்டு நெருங்கிவரும் இவ்வேளையில், அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் உச்சத்துக்கு அதிகரித்து வருகின்றன. விலை உயர்வால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்குத் தீர்வு காணுமாறு எதிரணிக் கட்சிகளும், தொழிற் சங்கங்களும் வேலைநிறுத்தப் போராட்டங்களிலும், ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டுவரும் நிலையிலும், அவற்றின் விலைகளைக் குறைத்து மக்களுக்கு விமோசனம் அளிக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

இலங்கை நாணயத்தின் பெறுமதி குறைப்பு, பெற்றோல் விலை அதிகரிப்பு, மின்சாரக் கட்டண உயர்வு ஆகியவற்றால் ஒட்டு மொத்தமாக ஒரே வேளையில் இறக்குமதிப் பொருள்களின் விலைகளும், உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் விலைகளும் உயர்ந்துள்ளன. மேற்குறிப்பிட்டது போன்று அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை நாணயத்தின் பெறுமதி தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருகிறது. அதனால் இறக்குமதிப் பொருள்களின் விலைகள் ஏற்றம் கண்டுள்ளன.

தம்மிடமிருந்த கையிருப்புகள் முடிவடைந்துவிட்டதால், இனி புதிய விலைக்கே இறக்குமதிப் பொருள்களை விற்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இதனால் சந்தையில் பம்பாய் வெங்காயம், தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், சீனி, பருப்பு, கிழங்கு ஆகியவற்றின் விலைகள் உச்சத்துக்கு உயர்ந்துவிட்டன. அதனால் பாதிப்பு பொதுமக்களுக்கே.

இத்தகைய நிலையில், மோட்டார் வாகனங்கள், முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றுக்கான உற்பத்தி வரிகள் அதிகரிப்புக் குறித்து கடந்த சனியன்று அறிவிக்கப்பட்டிருப்பது மேலும் மக்கள் மீது சுமைகளை ஏற்படுத்தி உள்ளது.

*1, 000 சி.சிக்குக் குறைந்த வாகனங்களுக்கே இந்த வரிவிதிப்பு கடும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளதாக இலங்கை மோட்டார் வாகன ஏற்றுமதியாளர் சங்கத்தின் தலைவர் கூறுகிறார்.

*மோட்டார் சைக்கிள்கள் தொடர்பாக அறவிடப்பட்ட வரி 39 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய மோட்டார் சைக்கிள் ஒன்றின் விலை ஒரு லட்சம் ரூபா வரையில் அதிகரிக்கக்கூடுமென மோட்டார் சைக்கிள் விற்பனை நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

*14 முதல் 15 லட்சம் ரூபாவுக்கு முன்னர் கிடைத்த மோட்டார் வாகனமொன்றின் விலை 5 லட்சம் ரூபாவால் அதிகரிக்கலாம் என்றும், 27 லட்சம் ரூபாவுக்கு விலை போன மோட்டார் வாகனமொன்றின் விலை 10 முதல் 12 லட்சங்களால் அதிகரிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றால் இறுதியில் பாதிக்கப்பட உள்ளவர்கள் மக்களே.

மதுபான வகைகளின் தீர்வை வரியும் அதிகரிக்கப்பட்டுள்ளது. சிகரெட் விலை ஒரு ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில், அரசின் நடவடிக்கைகள் சகல தரப்பினரையும் பாதித்து வருகிறது.

அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைக்கும்படி கோரி நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களுக்கு இந்த அரசு அசைந்து விடப்போவதில்லை என்பது அரசின் நடவடிக்கைகளிலிருந்து வெளிச்சமாகிறது.

விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்காது விலைகள் புதிதாக அதிகரிக்கப்பட்டு வருகின்றன. விலைகள் உயர்த்தப்பட்டாலும் மக்கள் அவற்றைச் சமாளித்துவிடுவார்கள் என்று அரசு எதிர்பார்க்கிறது போலும். அதனாலேயே மூவர் அடங்கிய குடும்பம் ஒன்றுக்கு மாதம் 7,500 ரூபா போதும் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன கூறியிருக்கிறார்.

தாம் அவரிடம் கல்வி கற்றதற்காக வெட்கப்படுவதாக எதிர்க்கட்சி உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கூறியது பொருத்தமானதே. அரசு எத்தகைய சிந்தனையுடன் செயற்படுகிறது என்பது அமைச்சரின் கூற்றிலிருந்து வெளிப்படுகிறது.

இத்தகைய அர்த்தமற்ற கருத்துக்களைச் சொல்லி மக்களை ஏமாற்ற முயலக்கூடாது. இந்தத் தமிழ் - சிங்களப் புத்தாண்டையொட்டியாவது அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். நாட்டு மக்கள் தற்பொழுது எதிர்நோக்கி உள்ள பொருளாதார நெருக்கடி அவர்களைப் பட்டினிபோடுவதுடன், நாட்டில் கொலை, களவு, வழிப்பறி, விபசாரம் போன்ற சீரழிவுகள் அதிகரிக்கவே வழிவகுக்கும்.

மக்களுக்கு உண்டாகக்கூடிய நாளாந்த வாழ்க்கைப் பாதிப்புகளின் தாக்கத்தை திசை திருப்புவதற்காகவே, தெற்கில் ஜெனிவாத் தீர்மானத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களையும், கண்துடைப்புக் கூட்டங்களையும் நடத்துகிறார்கள் என்பதும் இப்போது நிரூபணமாகி வருகிறது. மக்களின் வாழ்க்கைச் செலவை, விலை உயர்வைத் தடுக்கும் சக்தி, அரசுக்கு இனி எப்போது வந்து சேரும் என்று எவராலுமே எதிர்வு கூற முடியாது!

# மேலதிக பதிவாளர் நியமனத்தில் வடக்கு, கிழக்கு புறக்கணிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.3

மேலதிக மாவட்டப் பதிவாளர் நியமனம் வழங்கப்படும் போது வடக்கு, கிழக்கு மாகாணங்கள் புறக்கணிக்கப்படுவதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்தப் பதவிகளுக்குரிய 90 வீதமான வெற்றிடங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பூர்த்தி செய்யப்படாமல் உள்ளன.

பிரதேச செயலகங்கள் தோறும் மேலதிக மாவட்டப் பதிவாளர் பதவிக்குரிய நியமனங்கள் வழங்கப்பட வேண்டும். ஆயினும் குறிப்பாக வடக்கில் ஒரு சில பிரதேச செயலகங்களைத் தவிர ஏனையவற்றில் இந்தப் பதவிகளுக்கான நியமனங்கள் வழங்கப்படவில்லை. இதே நிலைமைதான் கிழக்கு மாகாணத்திலும் உள்ளது. கடந்த 2005 ஆம் ஆண்டு பட்டதாரிகள் பயிலுநர்களாக நியமிக்கப்பட்ட போது மேலதிக மாவட்டப் பதிவாளர் நியமனங்கள் வழங்கப்பட்டன. அப் போதும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு எவரும் நியமிக்கப்படவில்லை. அவை அனைத்தும் தென்பகுதிக்கே வழங்கப்பட்டன.

இந்த வருடமும் பட்டதாரிகள் பயிலுநர்களாக உள்வாங்கப்பட்டு நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. இதன் போது வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குத் தேவையான ஆளணி வெற்றிடங்கள் உரிய முறையில் பூர்த்திசெய்யப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(த-3)

# வடக்கில் 80 வீதமானோர் வாகன வரி செலுத்தினர்

யாழ்ப்பாணம்,ஏப்.3

வடமாகாணத்தில் கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரையில் 80 வீதமானோர் மோட்டார் வாகனங்களுக்கான வரி செலுத்தியுள்ளனர் என்று வடமாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பில் இந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்ததாவது:-

வடமாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் பிரதேச செயலகங்கள் ஊடாக வாகன வருமான வரி அனுமதிப் பத்திரங்கள் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து டிசெம்பர் 31 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வகையில் கடந்த காலங்களில் வழங்கப்பட்டு வந்தன.

இந்த நடைமுறை காரணமாக குறித்த வருடத்துக்கான வாகன வருமானவரி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதில் பொது மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களைத் தவிர்க்கும் நோக்குடன் கணினி மயப்படுத்தப்பட்ட வாகன வரி அனுமதிப்பத்திரத்தை வடமாகாணத்திலுள்ள சகல பிரதேச செயலகங்கள் ஊடாகவும் இந்த வருடம் ஆரம்பத்திலிருந்து வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

புதிய நடைமுறையின் பிரகாரம் வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருட காலத்துக்குச் செல்லுபடியாகும் வகையில் வாகன வருமானவரி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டது. இந்தப் பதிவுகள் யாவும் மேற்கொள்வதற்காகக் கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரையில் அவகாசம் வழங்கப்பட்டது.

இந்தக் காலப் பகுதிக்குள் வடமாகாணத்திலுள்ள சகல பிரதேச செயலகங்கள் ஊடாகவும் 80 வீதமானோர் தமது வாகன வருமான வரியினைச் செலுத்தியுள்ளனர். வடமாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட வாகனப் பதிவுகளின் அடிப்படையிலேயே இந்தக் கணிப்பு மேற்கொள்ளப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

# அதிபர் சேவை பரீட்சை பெறுபேறு கிடைக்கவில்லை

அச்சுவேலி, ஏப் 3

கடந்த வருடம் நடத்தப்பட்ட இலங்கை அதிபர் சேவை வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையின் பெறுபேறுகள் சில பரீட்சார்த்திகளுக்கு உரிய முறையில் கிடைக்கவில்லை. இதனால் அவர்கள் தமது தடை தாண்டியது தொடர்பான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க முடியாமல் இருப்பதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இலங்கை அதிபர் சேவைத் தரங்களில் உள்ளவர்களுக்கான வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை கல்வி அமைச்சின் கோரிக்கைக்கு அமைய பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்பட்டு உரிய முறையில் பெறுபேற்றுச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

இந்த வகையில் கடந்த வருடம் நடைபெற்ற பரீட்சையில் பெறுபேறுகள் பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டதோடு பரீட்சைத் திணைக்களத்தினால் சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு கடித மூலமும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஆனால் வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சைக்குத் தோற்றிய சிலருக்கு பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்படும் பரீட்சைப் பெறுபேறு தொடர்பான சான்றுப்பத்திரம் கிடைக்கவில்லை என கவலை தெரிவிக்கின்றனர்.

பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்படும் பரீட்சைப் பெறுபேறு தொடர்பான சான்றுப் பத்திரம் கிடைத்தால்தான் உரிய முறையில் தமது கோரிக்கையை வலயக் கல்வி அலுவலகங்களில் சமர்ப்பித்து தமது சுயவிவரக் கோவையில் சேர்த்துக் கொள்ளவும் வருடாந்தச் சம்பள ஏற்றம் மற்றும் அது தொடர்பான நிலுவைக் கொடுப்பனவையும் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர்கள் கூறுகின்றனர்

(11)

## கூட்டுறவு ஆண்டையொட்டி முத்திரை வெளியிட கோரிக்கை

கொழும்புத்துறை, ஏப்.3

சர்வதேச கூட்டுறவு ஆண்டாக 2012 ஆம் ஆண்டை ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப் படுத்தியதையடுத்து இலங்கையில் அது தொடர்பான ஞாபகார்த்த முத்திரை ஒன்றை வெளியிட வேண்டும்மென யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

தேசிய கூட்டுறவுச் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும், கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் தேசிய கூட்டுறவுச்சபைத் தலைவர் பந்து ரணவக்க யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபைக்கு அறிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(த-17-135)

# கூட்டுறவுச் சபையின் தேசிய மகளிர் தினம்

கொழும்புத்துறை, ஏப்.3

ஆண்டு தோறும் தேசிய கூட்டுறவுச் சபையால் கொண்டாடப்படும் மகளிர் தின நிகழ்வுகளை கூட்டுறவு ஆண்டையொட்டி சிறப்பான முறையில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை தேசிய மட்ட மகளிர் குழு மேற்கொண்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கென பல வேலைத் திட்டங்களை செயற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இருநாள்கள் நடைபெறவுள்ள மகளிர் தின நிகழ்வுகளில் கலாசாரத்துறை சார்ந்த மகளிரின் ஆக்கங்கள், ஆற்றல்களை வெளிக்கொண்டுவர வாய்ப்பளித்தல், கருத்துப் பொதிந்த போதனைகள், சிறு வியாபாரங்களை ஆரம்பிப்பதற்கான அறிவூட்டல்களை வழங்குதல், கைப்பணி மற்றும் கலைப்படைப்புகளின் கண்காட்சிகள் விசேட திறனைக் கொண்ட மகளிரை ஊக்குவித்தல் போன்ற திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று தேசிய மட்ட மகளிர் குழு அறிவித்துள்ளது.

அத்துடன் கலை நிகழ்வுகள், வேடிக்கைகள், களியாட்டங்கள் [illegible] நடைபெறவுள்ளன.

(த-135)

# அனுமதியின்றி மணல் ஏற்றியவர் கைதானார்

யாழ்ப்பாணம், ஏப்.3

இரவு வேளையில் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற உழவு இயந்திரத்தைக் கைப்பற்றி அதன் சாரதியையும் பொலிஸார் கைது செய்தனர்

வாகனத்தையும் சாரதியையும் கொடிகாமம் பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கினை விசாரித்த நீதிவான், சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஆறு மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டு வாகனத்தை 15 லட்சம் ரூபா பெறுமதியான பிணையில் கொண்டு செல்ல அனுமதித்தார்.

(த-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 80 ஏக்கரில் விதைப்பு ஆரம்பம்

முல்லைத்தீவு,ஏப்3

ஒட்டுசுட்டான் கமநலச் சேவை நிலையத்துக்குட்பட்ட கற்சிலைமடு பெரிய குள வெளியில் இந்த முறை 80 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

கடந்த வாரம் ஒட்டுசுட்டான் பெரும்பாக உத்தியோகத்தர் ரி.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்ற சிறுபோகச் செய்கை சார்பான இறுதிக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமைய விவசாயிகள் செய்கையை ஆரம்பித்துள்ளனர். சென்ற மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் இந்த மாதம் 15 ஆம் திகதி வரை விதைப்புக்களை மேற்கொள்ளலாம்.

மழையில்லாததால் நீரினைச் சிக்கனமாகப் பேணிப் பயிர்களைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் பெரும்பாக உத்தியோகத்தர் மேலும் தெரிவித்துள்ளார். இதே வேளை பெரிய நீர்ப்பாசன குளமான முத்துஐயன்கட்டுக் குளத்தின் கீழும் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(க-500)

# சிறுபோகத்துக்கு காணி

## பன்னங்கண்டி மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஏப்.3

கிளிநொச்சி பன்னங்கண்டிப் பகுதிகளில் வசித்து வரும் வறிய குடும்பங்கள் சிறுபோகச் செய்கைக்கு ஏற்ற வகையில் தமக்குக் காணிகளை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி பன்னங்கண்டி, சின்னக்காடு ஆகிய பகுதிகளில் சுமார் 247 வரையான மிகவும் வறியகுடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இந்த நிலையில் இவர்களுக்குச் சொந்தக் காணிகள் இல்லாததால் நிரந்தர வாழ்வாதாரம் எதுவும் இல்லை. அத்துடன் இவர்களுக்கான நிவாரண உதவிகள் யாவும் கடந்த ஆண்டின் முற்பகுதியிலேயே நிறுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் கூலிவேலை செய்யக்கூடிய வேலை வாய்ப்புக்களும் இல்லை. தற்போது வயல் வேலைகள் யாவும் இயந்திரங்கள் மூலம் மேற்கொள்ளப்படுவதால் இவர்களின் வேலைவாய்ப்புக்கள் பறிபோயுள்ளன.

**உரிமையாளர்கள் இல்லாத 180 ஏக்கர் காணிகள் ராணுவத்தினரால் 132 குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.**

இந்த நிலையில் கடந்த பெரும்போகச் செய்கையின் போது மேற்படி பகுதிகளில் உரிமையாளர்கள் இல்லாத 180 ஏக்கர் காணிகள் ராணுவத்தினரால் 132 குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

இருந்த போதும் இதில் பல்வேறு முறைகேடுகள் இடம்பெற்றதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. அது தொடர்பான பிரச்சினைகளுக்கு இதுவரை தீர்வு காணப்படவில்லை எனவும் அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந்த நிலையில் இவ்வாண்டு தமக்குச் சிறுபோக செய்கைகளுக்கு அரை ஏக்கர் காணியாவது வழங்க வேண்டும் என்றும் அதனைக் கொண்டு தாங்கள் செய்கைகளை மேற்கொண்டு தமது தேவைக்கு நெல்லைப் பயிரிட முடியும் எனவும் இவர்கள் கூறுகின்றனர்.

இதற்கு கமநல் சேவை நிலையம் மற்றும் பிரதேச கமக்கார அமைப்புக்கள் என்பன ஏற்பாடு செய்து தர வேண்டும் எனவும் காணிகளுக்குரிய குத்தகைகளைத் தாம் உரிய காலத்தில் செலுத்துவதாகவும் மேலும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போதும் உரிமை கோரப்படாத பல காணிகள் கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாக வசதி படைத்தவர்களால் செய்கை பண்ணப்பட்டு வருவதாகவும், இதனையும் கவனத்தில் கொண்டு தமக்கு உதவ வேண்டுமெனவும் இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க)

# அக்கராயன் குள வேலைகள் விரைவில் நிறைவு செய்யப்படும்

## பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் தகவல்

அக்கராயன், ஏப்.3

அக்கராயன் குளத்தின் புனரமைப்பு வேலைகளை விரைவாக நிறைவு செய்யவுள்ளோம். இவ்வாறு கிளிநொச்சி மாவட்டப் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் என்.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

அக்கராயன் குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.


கடந்த ஆண்டு சிறுபோகத்தை விட்டுத் தந்த விவசாயிகளுக்கு நன்றி தெரிவிக்கிறோம். குளப்புனரமைப்பின் போதுஉடைப்புக்கள் ஏற்பட்டுச் சேதங்கள் ஏற்பட்டமைக்கு மன்னிப்புக் கோருகின்றேன். குளத்தின் வான்பகுதியில் ஏற்பட்ட சேதங்களை விரைவில் புனரமைக்கவுள்ளோம்.

சிறுபோக நெற் செய்கையை விரைவாக நிறைவு செய்ய வேண்டும். குளத்தின் நீர்மட்டம் துரிதமாகக் குறைவடைந்து செல்கின்றது. மேலும் குள அணைக்கட்டை ஒரு அடி உயர்த்தவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார். (க-18)

# அடிக்கல் நடும் விழா

தோணிக்கல் விசாலாட்சி சமேத விஸ்வநாதர் சிவன் கோயிலின் புதிய கட்டடத்துக்கான அத்திபாரம் இடும் சுபமுகூர்த்தப் பெருவிழா கடந்த 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சிற்பாசாரியார் ஸ்தபதி கலாபூஷணம் சீ.செந்தூர்ராசா, சீ.சிறிராசாமூர்த்தி, பிரதமகுரு வேதாகம உதயசூரியன் சிவஸ்ரீ ஆதி சௌந்தர ராஜக்குருக்கள், பிரம்மஸ்ரீ ஸ்ரீராமலிங்கசர்மா மற்றும் ஆலய பரிபாலன சபையினர் ஆலய பக்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். (க-402)




பத்திரிகைச் செய்தியைத் தொடர்ந்து உடனடியாகப் புனரமைக்கப்பட்ட மன்னார் பஸார் பகுதியில் தனியார் வாடகை வாகனத்தரிப்பிடத்துக்கு முன்னால் உள்ள தபால்பெட்டி தற்போது புதுப் பொலிவுடன் காட்சி தருகின்றது. (12)

# எரிபொருள் விலை ஏற்றத்தால் முல்லையில் அதிக பாதிப்பு

## மேட்டுப் பயிர்ச் செய்கைதான் காரணம்

முல்லைத்தீவு, ஏப்.3

எரிபொருள் விலையேற்றத்தால் கடுமையாகப் பாதிக்கப்படுபவர்கள் முல்லைத் தீவு மாவட்ட மக்களே எனக் கூறப்படுகின்றது.

இந்த மாவட்டத்தில் 90 வீதமான விவசாயிகள் மேட்டுப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளனர். இதற்கு மண்ணெண்ணெய், டீசல், பெற்றோல் என்பன மிகவும் அவசியமாகத் தேவைப்படுகின்றது. தற்போது அவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டதால் தாம் மிகவும் பாதிப்படைந்து வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மீளக்குடியமர்ந்துள்ள போதிலும் தமது வாழ்வாதாரத் தொழிலாக நெல் விவசாயம், உப உணவுப் பயிர்ச் செய்கை ஆகியவற்றை மேற்கொள்வதற்கு எரிபொருள் ஏற்றம் தடையாக இருப்பதாக இவர்கள் கூறுகின்றனர். உற்பத்திகளுக்கு விலை ஏற்றம் இல்லை. மரக்கறிகளும் மலிந்து போயுள்ளன.

ஆனால் எரிபொருள் மட்டும் விலை உயர்ந்துள்ளது. எரிபொருள் விலை ஏற்றத்தால் எமது விவசாயத் தொழிலை மேற்கொண்டு அதன்மூலம் வருவாயைப் பெறமுடியாதுள்ளது. மேலும் நெற்செய்கைக்கு 1 ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபா செலவாகிறது. எரிபொருள் விலை உயர்வால் இது மேலும் அதிகரிக்கலாம் எனவும் முல்லை விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (க-500)

# காற்பங்கு பயிரழிவு கால் நடைகளால்

அக்கராயன், ஏப்.3

அக்கராயனில் மேற்கொள்ளப்பட்ட காலபோக நெற்செய்கையில் காற்பங்கு அழிவடைந்தமைக்குக் கால்நடைகளே காரணமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கால்நடை வளர்ப்பாளர்கள் தமது கால்நடைகளைப் பட்டிகளில் அடைக்காது தன்னிச்சையாக உலாவ விட்டதால் அவை பயிர்களுக்குப் பெரும் சேதத்தை விளைவித்துள்ளன. சுமார் காற்பங்கு அளவிலான பயிர்களை இந்தக் கால்நடைகளே அழித்துள்ளன. இதனால் விவசாயிகள் அதிக நட்டத்தை எதிர் கொண்டுள்ளனர்.

எனவே கால்நடை வளர்ப்பாளர்கள் தமது கால்நடைகளைப் பட்டியில் அடைத்து வளர்க்கவேண்டும்.

சிறுபோக நெற்செய்கையின்போது இரு கட்டங்களாகப் பசளைகள் வழங்கப் படவுள்ளன. இதனால் விவசாயிகள் சிறுபோக நெற்செய்கையில் ஆர்வத்துடன் ஈடுபட முடியும்.

சிறுபோகப் பயிர்ச்செய்கையின் போது கால்நடைகள் அழிவுகளை ஏற்படுத்தினால் அவற்றின் உரிமையாளர்கள் அதிகளவு தண்டத்தைச் செலுத்த நேரிடும்.

இந்தத் தகவல்களை அக்கராயன் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். கதிர்காமநாதன் தெரிவித்தார்.

இதேவேளை அக்கராயன் சமாதானபுரம் கிராம விவசாயிகள் கால்நடைகளால் ஏற்படும் அழிவுகள் தொடர்பாகக் குரல் எழுப்பியுள்ளனர். (க-18)

# அவல வாழ்வு வாழ்ந்துவரும் ஒட்டறுத்தகுளம் கிராம மக்கள்

## பொதுச் சேவைகள் எவையும் சீராக இல்லை

துணுக்காய், ஏப்.3

முல்லைத்தீவு மாவட்டம் பாண்டியன்குளத்திலுள்ள ஒட்டறுத்தகுளம் கிராமத்தில் 185 குடும்பங்கள் எவ்வித அடிப்படை வசதிகளும் இன்றி அவல நிலையில் வாழ்ந்து வருகின்றன.

இவர்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்படவில்லை. வீதிகள் மோசமான நிலையில் உள்ளன. மின்சார வசதிகள் இல்லை. இவற்றினால் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளில் பின்னடைவுகள் ஏற்பட்டு வருகின்றன.

வடகாடு தொடக்கம் ஒட்டறுத்தகுளம் வரையும் 185 குடும்பங்கள் வாழ்கின்ற போதிலும் சீரான ஒரு பொதுச் சந்தை அமைக்கப்படவில்லை. குடிதண்ணீர்க் கிணறுகள் இல்லை. சனசமூக நிலையம் அமைக்கப்படவில்லை.

அத்துடன் மேற்படி கிராமத்தில் இருந்து சுமார் 4 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள மல்லாவிப் பாடசாலைகளுக்கு மாணவர்கள் கால்நடையாகச் சென்று கல்வி கற்று வருகின்றனர். காலையில் 6.45 மணிக்கே இந்தக் கிராமத்தில் இருந்து மாணவர்கள் பாடசாலைக்குச் செல்கின்றனர். பஸ் சேவைகள் இன்மையே இதற்குக் காரணமாகும்.

எனவே இந்தக் கிராம மக்களின் அவல நிலையைக் கருத்தில் கொண்டு இவர்களுக்கான தேவைகளை இனம் கண்டு அவற்றைப் பூர்த்தி செய்து வழங்குமாறு உரியவர்களுக்குப் பகிரங்க வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-415)

# கோணாவிலில் பற்றி எரிந்தது வீடு இருவர் காயம்; பொருள்கள் நாசம்

கிளிநொச்சி, ஏப் 03

கிளிநொச்சி கோணாவில் பகுதியில் வீடொன்று தீப்புற்றி எரிந்ததில் இருவர் காயங்களுக்கு உள்ளாகினர். சுமார் ஒரு லட்சத்து இருபத்தாயிம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியான வீட்டுப்பாவனைப் பொருள்கள் பணம் என்பன எரிந்து நாசமாகின.

**கிளிநொச்சி கோணாவில் ராஜன் குடியிருப்புப் பகுதியில் உள்ள வீடொன்று தீப்பற்றி எரிந்து இருவர் காயங்களுக்கு உள்ளாகியதுடன் பொருள்களும் நாசமாகின.**

கிளிநொச்சி கோணாவில் ராஜன்குடியிருப்புப் பகுதியில் உள்ள வீடொன்றே இவ்வாறு தீப்பற்றி எரிந்துள்ளது. இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

நேற்றுமுன்தினம் பகல் ஒரு மணியளவில் வீட்டுக்குப் பின்னால் உள்ள குப்பைக்கு நெருப்புவைத்துவிட்டு வீட்டின் உரிமையாளர் இருந்த வேளை வீட்டின் ஒருபகுதியால் திடீரெனத் தீப்பற்றிக் கொண்டது. நீண்ட நேரமாகயும் அயலவரின் உதவியுடனும் தீயை அணைக்க முடியவில்லை.

இந்த நிலையில் வீட்டில் இருந்த வீட்டுப்பாவனைப் பொருள்கள், உடுபுடைவைகள், சூரிய மின்கலத் தொகுதி மற்றும் இலத்திரனியல் பொருள்கள் மற்றும் பத்தாயிரம் ரூபா பணம் என்பன எரிந்து நாசமாகியுள்ளன.

இதேவேளை குறித்த வீட்டில் மூன்று குடும்பங்கள் வசித்து வந்துள்ளன.

சம்பவத்தில் வீட்டில் இருந்த மயில்வன் தாமோதரம் பிள்ளை (வயது - 60), துஷ்கரன் உசாநந்தினி (வயது - 26) ஆகிய இருவரும் எரிகாயங்களுக்கு உள்ளாகினர்.

வீட்டுக்குள் உறங்கிக் கொண்டிருந்த இரண்டு குழந்தைகள் அதிர்ச்சியடைந்த நிலையில் காப்பாற்றப்பட்டுள்ளன.

கடந்த யுத்தம் காரணமாக பலதடவை இடம் பெயர்ந்து தற்போது மீளக் குடியேறி தமது முயற்சியால் தேடிய பொருள்களே இவ்வாறு அழிந்து நாசமாகியுள்ளன எனப் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் கவலையுடன் தெரிவித்தனர். (10- 6)

# மன்னாரில் திருட்டு சிறுவர் கைது

மன்னார், ஏப் 03

மன்னார் எழுத்தூர், பெரியகமம் பகுதியில் இடம் பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய 15 வயதுச் சிறுவன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளான்.

நேற்றுமுன்தினம் மதியம் குறித்த பகுதியில் வீட்டின் கதவை உடைத்து அங்கிருந்த பெறுமதிமிக்க மடிக்கணினி மற்றும் கையடக்கத் தொலைபேசி ஆகியவற்றை பிரஸ்தாப சிறுவன் அபகரித்துச் சென்றிருந்தான்.

இவற்றின் பெறுமதி சுமார் 1 லட்சத்து 77ஆயிரம் ரூபா எனக் கூறப்பட்டது.

மன்னார் பொலிஸில் செய்த முறைப்பாட்டை அடுத்து அதே பகுதியைச் சேர்ந்த சிறுவன் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டான். சிறுவன் தெரிவித்த தகவலை அடுத்து திருட்டுப்போன அனைத்தும் மீட்கப்பட்டன.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதான வீதிகள் அகலிப்பு அடுத்த ஆண்டுக்குள் நிறைவு

## சீன உதவியுடன் பணிகள் துரிதம்

யாழ்ப்பாணம், ஏப்.3

சீன அரசின் நிதியுதவியுடன் யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்று வரும் பிரதான வீதிகளின் அகலிப்புப் பணிகள் அடுத்த ஆண்டு டிசெம்பர் மாதத்துடன் நிறைவு பெறும் என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மாவட்டத்தில் கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட 'சி7' என்ற வீதி அகலிப்புத் திட்டத்தில் உள்ளடங்குகின்ற வீதிகளின் அகலிப்பு வேலைகளை அடுத்த ஆண்டு டிசெம்பரில் நிறைவு பெறவுள்ளன.

யாழ்ப்பாணம்- காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்- பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்- பலாலி வீதி, புத்தூர் - மீசாலை வீதி ஆகிய நான்கு வீதிகளுமே 'சி7' திட்டத்தில் உள்ளடங்குகின்றன.

இந்த வீதிகளின் அகலிப்புப் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இந்த நான்கு வீதிகளின் நீளம் 84 கிலோமீற்றர்கள் ஆகும்.

வீதி அகலிப்பின்போது கோயில்கள், பொதுஇடங்கள், கலாசார மையங்கள், வரலாற்றுப் பிரபலமான கட்டடங்கள் ஆகியவற்றுக்குப் பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் அகலிப்பு வேலைகள் மேற்கொள்ளப்படும் என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயர் அதிகாரி கூறினார். (த-3)

### கிணற்றில் வீழ்ந்து இளைஞர் படுகாயம்

நவாலி, ஏப்.3

கிணற்றைத் துப்புரவு செய்வதற்குக் கயிற்றின் உதவியுடன் உள்ளே இறங்கிக் கொண்டிருந்த இளைஞன் அந்தக் கயிறு அறுந்ததால் கிணற்றுள் வீழ்ந்து கால் பாதம் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பகல் வேளை நவாலி சின்னப்பா வீதியைச் சேர்ந்த நாகரத்தினம் சரத் சந்திரன் (வயது-20) என்ற இளைஞன் உறவினரின் கிணற்றைத் துப்புரவு செய்வதற்குத் தண்ணீர் இறைக்கும் இயந்திரத்தை இயக்கிவிட்டு தண்ணீர் வற்றியவுடன் கயிற்றின் உதவியுடன் கிணற்றில் இறங்கினார். அப்போது கயிறு அறுந்ததால் உள்ளே விழுந்தார்.

இதன்போது கால் கல்லுடன் மோதியதால் காயமடைந்த அவர் உடனடியாக யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். (த-100)

### உள்ளூராட்சிச் சபைகளில் ஆலோசனைக் குழுக்கள்

நவாலி, ஏப்.3

யாழ்.மாவட்டத்தில் அரசியல் கலப்பற்ற ஆலோசனைக் குழுக்கள் அனைத்து உள்ளூராட்சிச் சபைகளிலும் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவியாளர் செ.பிரணவநாதன் மேற்கொண்டுள்ளார்.

இவற்றை அமைப்பது தொடர்பான வழிகாட்டி நூலொன்று சபைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-100)



சாவகச்சேரி அறவழி நிலையத்தில் ஜேர்மன் நண்பர்கள் அமைப்பின் அனுசரணையுடன் வறிய மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. சைக்கிள் பெற்ற மாணவர்களுடன் அறவழி நிலைய நிர்வாகிகள் காணப்படுகின்றனர். (த-9)

### கட்டாக்காலி கால்நடைகளால் அச்சுவேலி விவசாயிகள் பாதிப்பு

அச்சுவேலி, ஏப் 3

அச்சுவேலிப் பகுதியில் உள்ள விவசாய சம்மேளனங்கள் கட்டாக்காலிக் கால்நடைகளைப் பிடிப்பதற்கோ அல்லது கட்டாக்காலிக் கால்நடைகளின் உரிமையாளர்களை உரிய முறையில் வழிப்படுத்துவதற்கோ நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போதைய எரிபொருள் விலையேற்றம், பொருளாதார நெருக்கடி நிலையில் அச்சுவேலி பகுதியில் உள்ள தோட்டங்கள், பயிர்ச் செய்கை நிலங்களில் உள்ள பயிர் இனங்களைக் கட்டாக்காலிக் கால்நடைகள் மேய்ந்து சேதப்படுத்தி விடுகின்றன.

இதனால் சில தோட்டங்களில் செய்கை பண்ணப்பட்ட பயிர் வகைகளை தொடர்ந்து பராமரிக்கவோ, பயன் பெறவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலைப்படுகின்றனர்.

அச்சுவேலிப் பகுதியில் இரவு நேரங்களில் சிலர் தமது வளர்ப்பு மாடுகளை கட்டி வளர்க்காமல் கட்டாக்காலியாக விடுவதால் இரவு முழுவதும் அவை தோட்டங்களில் உள்ள பயிர்களைச் சேதப்படுத்தி நாசம் செய்வதாகவும் முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

அச்சுவேலிப்பகுதி விவசாய சம்மேளனங்கள் தமது பிரதேசத்தில் நடமாடும் கட்டாக்காலி மாடுகளைப் பிடித்துக் கட்டுவதற்கு அதிகாரம் வழங்கி யாரையும் நியமிக்கவில்லை. விவசாயிகள் கட்டாக்காலிகளை பிடித்தாலும் யாரிடம் அவற்றைக் கொடுப்பது? எந்த வகையில் பயிர் அழிவுக்கான உடனடி நிவாரணத்தைப் பெறுவது எனத் தெரியாமல் குழப்பத்துக்கு உள்ளாகிய நிலையில் உள்ளனர்.

கட்டாக்காலிக் கால்நடைகளைப் பிடிப்பதற்கும், அவ்வாறு பிடிக்கப்படும் கால்நடைகளின் உரிமையாளர்களிடம் தண்டம் அறவிடுவதற்கும் இரவு வேளையில் கால்நடைகளை அவிழ்த்து மேய விடும் உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-11)

### முதியோர் பராமரிப்பு நிலையம் நவாலியில்

நவாலி, ஏப்.3

வலி.தென்மேற்குப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நவாலி வடக்கு முதியோர் சங்கத்தின் பகல் பராமரிப்பு நிலையமொன்று தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்குத் தேவையான உபகரணங்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கான காணி, 'ஜெய்க்கா' நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது.

இந்த முதியோர் இல்லத்தில் தற்போது 60 முதியோர்கள் இருப்பதாக டாக்டர் எஸ்.சுந்தரதாசன் தெரிவித்தார். (த-100)

### கால்நடை வளர்ப்போர் சங்கங்கள் புனரமைப்பு

அச்சுவேலி, ஏப் 3

கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகப் பதவிக்காலம் முடிவடைந்த சங்கங்களின் பொதுக் கூட்டத்தைக் கூட்டிப் புதிய நிர்வாகத் தெரிவை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி பிரிவு மற்றும் பிரதேச செயலர் பிரிவு வாரியாகக் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் செயற்பட்டு வருகின்றன.

இந்த வகையில் யாழ். மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட பதினொரு சங்கங்கள் செயற்பட்டு வருகின்றன.

இதில் குறிப்பிட்ட எண்ணிக்கையான சங்கங்களின் பதவிக்காலம் நிறைவடைந்திருப்பதால், பொதுக் கூட்டத்தைக் கூட்டி புதிய நெறியாளர் குழுவைத் தெரிவு செய்யுமாறு யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே. அருந்தவநாதன் அறிவித்துள்ளார்.

நல்லூர் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் உடுவில் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் பொதுக் கூட்டங்கள் அண்மையில் கூட்டப்பட்ட போதிலும், கோரம் இன்மையால் புதிய நிர்வாகிகள் தெரிவு நடைபெறவில்லை. (த-11)

# காரைநகர்— ஊர்காவற்றுறை பாதைச் சேவை நெருக்கடியில்

## அரச அலுவலர்கள் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம், ஏப்.3

காரைநகருக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையிலான பாதைச் சேவையில் காலை 7.30 மணி மற்றும் 8.15 மணி ஆகிய நேரங்களில் இடம்பெறும் சேவையில் அரச உத்தியோகத்தர்களும் அவசர தேவை நிமித்தம் செல்பவர்களும் இடையூறுகளை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுற்றுலா செல்பவர்களும் வியாபாரிகளும் தமது பொருள்களை இந்த நேரத்தில் எடுத்துச் செல்வதனாலும் 'பாதை' சேவையில் நெருக்கடி ஏற்படுகிறது. இதனால் உத்தியோகத்தர்கள் உரிய நேரத்துக்கு அலுவலகங்களுக்குச் செல்வதில் இடையூறுகளை எதிர்கொண்டுள்ளனர். வைத்தியசாலை உட்பட பல இடங்களுக்கு அவசர தேவை நிமித்தம் செல்பவர்களும் உரிய நேரத்துக்குச் செல்வதில் சிக்கலை எதிர்கொண்டுள்ளனர்.

எனவே இந்த இரண்டு நேரங்களையும் தவிர்ந்த ஏனைய நேரங்களில் இடம்பெறும் பாதைச் சேவையில் ஏனையவர்களைப் பயணிக்க வைத்து தமது போக்குவரத்தில் நிலவும் இடையூறுகளை நீக்குமாறு உத்தியோகத்தர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தவிர இந்த நேரங்களில் தென்பகுதியைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் செல்லும்போது அவர்களை மையப்படுத்தியதாகப் 'பாதை' சேவையைத் தொடரும்படி கடற்படையினர் கூறுவதாகவும் இதனால் தாம் போக்குவரத்தில் பாதிக்கப்படுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

'பாதை' சேவையைச் சிறப்பாக வழங்கவென நான்கு பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். எனினும் அவர்களில் வேலணை, சரவணையைச் சேர்ந்த ஒருவர் பயணிகளுடன் ஒழுங்கான முறையில் நடந்து கொள்வதில்லை எனவும் இழிவான வார்த்தைகளைப் பிரயோகித்து பயணிகளுக்கு அசௌகரியம் ஏற்படுத்துகிறார் எனவும் பயணிகள் குற்றம் சாட்டுகின்றனர். சில வேளைகளில் அவர் சுயலாபம் ஈட்டும் வேலையில் ஈடுபடுவதாகவும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

இவைபற்றி 'பாதை' சேவைக்குப் பொறுப்பாக உள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையினிடம் பலதடவை முறையிட்ட போதும் இது வரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனப் பயணிகள் தெரிவிக்கின்றனர். (த-4)

# பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உதவிகள்



யாழ்ப்பாணம், ஏப். 3

போரால் பாதிப்படைந்த பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் செயற்திட்டத்தில் யாழ்.சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் அனுசரணையுடன் செரண்டிப் சிறுவர் இல்லம் வாழ்வாதார உதவிகளை வழங்கியது. இந்த நிகழ்வு கடந்த சனிக்கிழமை சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தில் நடைபெற்றது.

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் திட்டமிடல் செயலாளர் ரி.தேவதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வன்னி மாவட்டம் மூங்கிலாறு, வள்ளிபுனம், சுதந்திரபுரம் ஆகிய பிரதேசங்களில் போரால் பாதிப்படைந்த குடும்பத்தை தலைமைத்துவம் [illegible] பெண்களில் [illegible] பயனாளிகளுக்கு இந்த வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

தோட்டப் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்காக 40 ஆயிரம் ரூபா பெறுமதியான தண்ணீர் இறைக்கும் இயந்திரம், அதற்கு தேவையான பொருள்கள் என 5 லட்சம் ரூபா செலவில் 12 பயனாளிகளுக்கும் இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன.

பயனாளிகளுக்கான உபகரணங்களை செரண்டிப் சிறுவர் இல்லத் தலைவர் எ.கந்தசாமி, திருமதி கந்தசாமி ஆகியோர் கையளித்தனர்.

செரண்டிப் சிறுவர் இல்லம் சிறுவர்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வரும் நிலையில் பெண்களுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்கும் முதல் செயற்திட்டம் இது என்றும் கூறப்பட்டது. (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்றித் தலைச்சி அம்மன் ஆலயத்தில் நேர்த்தி முடிக்க குவிந்த பக்தர்கள்



தென்மராட்சி, ஏப்ரல் 3

பிரசித்திபெற்ற மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய பங்குனித் திங்கள் பொங்கல் விழாவின் மூன்றாம் திங்களான நேற்று பெருமளவு பக்தர்கள் ஆலயத்தில் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்ற அதிகாலையிலேயே குவியத் தொடங்கினர்.

ஆலயத்தின் நான்கு வீதிகளிலும் பொங்கல் நேர்த்தியை நிறைவேற்றுவதில் பக்தர்கள் மும்முரமாக ஈடுபட்டனர். ஆலய முகப்பில் பொங்கல் படைப்பதற்கான இடம் ஒதுக்கப்பட்டிருந்ததால் அம்பாளின் முன்னால் படைப்பதற்கு அடியார்கள் மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டியிருந்தது.

நாலாபுற வீதிகளில் பொங்களல் இடம் பெற்றதால் எல்லாப் பக்கமும் புகை மண்டலமாக காணப்பட்டது. ஆலயத்திற்கு வருகை தந்த வாகனங்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் பெரும் சிரமங்களை எதிர் நோக்கினர். ஆலய வீதிகளைத் தவிர்ந்த ஏனைய இடங்கள் வாகனங்களால் நிறைந்து வழிந்தன. ஆலய உள் வீதிகள், வெளி வீதிகள் அனைத்தும் பக்தர்களால் நிறைந்து காணப்பட்டன.

கனகன்புளியடிச் சந்தியிலிருந்து ஆலயம் வரையான வீதி காவடிகளாலும், 100 இற்கும் மேற்பட்ட பறவைக் காவடிகளாலும், நிறைந்து காணப்பட்டது. வீதிகளில் காவடிகளின் ஆட்டங்களால் வாகனங்களில் வருவோர் வேறு வீதிகளைப் பயன்படுத்தி ஆலயத்தை வந்தடைந்தனர்.

பங்குனித் திங்கள் பொங்கலின் மூன்றாவது திங்கள் உற்சவத்திற்கு வருடாந்தம் அதிக அளவு அடியார்கள் வருகை தருகின்ற போதிலும் இந்த வருடம் வழமையை விட பக்தர்களின் வருகை அதிகமாக காணப்பட்டதால் பக்தர்களின் நெருக்கடியைப் பயன்படுத்தி திருடர்களின் நடமாட்டமும் இருந்துள்ளது.

நேற்று நண்பகல் வரை மூன்று தங்கச் சங்கிலிகள் திருட்டுப் போயுள்ளதாக ஆலயத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை உற்சவ வேளையில் வீதிகளுக்கு தண்ணீரை பவுசர்களில் கொண்டு வந்து பாய்ச்சுவதாக பிரதேச செயலகத்தில் இடம் பெற்ற கூட்டத்தில் சாவகச்சேரி பிரதேச சபையினர் தெரிவித்த போதிலும் தண்ணீர் பாய்ச்சாததால் மக்கள் வெயில் வெப்பத்தினை சகிக்க முடியாது நிழல் தேடி ஓடியதாக அங்கிருந்த மக்கள் தெரிவித்தனர். (வ-207)



உரும்பிராய் பொதுநூலக மண்டபத்தில் நடைபெற்ற மகளிர் தின விழாவில் வலி.கிழக்கு பிரதேச சபையின் உப தவிசாளர் க. தர்மலிங்கம் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைக்கிறார். (வ-17)

## இலக்கியக் கருத்தரங்கு

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் சாவகச்சேரி, மீசாலை, நுணாவில் ஆகிய பொது நூலகங்கள் இணைந்த க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்களுகான இலக்கியக் கருத்தரங்குகளை நடத்தவுள்ளன.

நாளை மறுதினம் வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு நகராட்சி மன்ற கேட்போர் கூடத்தில் நகராட்சி மன் றத்தின் தவிசாளர் இ.தேவசகாயம் பிள்ளை தலைமையில் இந்தக் கருத்தரங்கு இடம் பெறும்.

தென்மராட்சி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் சி.முகுந்தன் க்ருத்துரை வழங்கவுள்ளார் என்று நகராட்சி மன்றச் செயலாளர் சு.புத்திசிகாமணி தெரிவித்தார். (ந-9)

## காணி உரிமையாளர்கள் தொடர்பு கொள்க

### காரைநகர் பிரதேச செயலர் கோரிக்கை

காரைநகர், ஏப் 03

காரைநகர் கடற்படைத் தள விஸ்தரிப்பிற்காக அரசினால் சுவீகரிக்கப்பட்ட காணிகளில் ஒரு பகுதியினருக்கு நஷ்ட ஈட்டுத் தொகை வழங்குவதற்கான ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றுள்ளது. எனவே பின்வரும் இலக்க காணித் துண்டுகளின் உரிமையாளர்கள் காரைநகர் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு காரைநகர் பிரதேச செயலர் திருமதி தே. பாபு கேட்டுள்ளார்.

காணித்துண்டுகளின் இலக்கங்கள் வருமாறு:-2, 4, 8, 11, 17, 26, 67½, 68, 90, 93, 125, 126, 131, 149, 151.

கடந்த வருடமும் காரைநகர் கடற்படைத் தள விஸ்திரிப்பிற்காகச் சுவீகரிக்கப்பட்ட சுமார் 80 காணித் துண்டு உரிமையாளர்களுக்கான நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவாக சுமார் 40 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ங-250)

## பஞ்சரத பவனி

காரைநகர் ஈழத்துச் சிதம்பர வருடாந்த பங்குனிப் பெருந்திருவிழாவின் பஞ்சரத பவனி எதிர்வரும் 4ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறஉள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை கொடியெற்றத்துடன் ஆரம்பமான பெருந்திருவிழா தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும். எதிர்வரும் 4ஆம் திகதி பஞ்சரத பவனியும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

## முன்பள்ளி நிகழ்வுகள் அதிகாரிகளால் புறக்கணிப்பு


தென்மராட்சிப் பிரதேசத்தில் நடத்தப்படும் முன்பள்ளிகளின் இல்ல மெய் வன்மைப் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினர்களாக அழைக்கப்படும் தென்மராட்சிக் கல்விவலய உயர் அதிகாரிகள் நிகழ்வில் பங்குபற்றுவதில்லை என்று பொதுமக்கள் கவலை தெரிவித்தனர். குறித்த முன் பள்ளிகள் தென்மராட்சிக் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் உட்பட பல்வேறு உத்தியோகத்தர்களிடம் விருந்தினராகக் கலந்து கொள்ள அனுமதி பெறப்படுகின்ற போதிலும் மெய்வன்மைப் போட்டிகள் உட்பட முன்பள்ளிகளின் நிகழ்வுகளில் பங்கு பற்றாமல் அதிகாரிகள் புறக்கணிப்பது தொடர்பாகப் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ந-9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மியன்மார் இடைத்தேர்தலில் சூகியின் கட்சி பெரு வெற்றி

## போட்டியிட்ட 45 தொகுதிகளில் ஒன்றை மட்டுமே தவறவிட்டது



வெற்றியைக் கொண்டாடும் சூகியின் ஆதரவாளர்கள்

மியன்மாரில் நடைபெற்றுமுடிந்த இடைத் தேர்தலில் ஆங் சான் சூகியின் கட்சி போட்டியிட்ட 44 தொகுதிகளிலும் அமோக வெற்றிபெற்றுள்ளது.

இடைத்தேர்தல் நடைபெற்ற 45 தொகுதிகளில் 44 தொகு திகளில் சூகியின் ஜனநாய கத்துக்கான தேசிய லீக் கட்சி போட்டியிட்டது. ஒரு தொகுதியில் அந்தக் கட்சிவேட்பாளரின் மனு நிராகரிக்கப்பட்டிருந்தது.

ஆங் சான் சூகி தலைமையிலான என்எல்டி என்ற ஜனநாயகத்துக்கான தேசிய லீக் கட்சி இரண்டு தசாப்தங்களின் பின்னர் இப்போதுதான் தேர்தலொன்றில் போட்டியிட்டுள்ளது.

மியன்மாரைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் ஆளும் இராணுவ அரசு அண்மையில் அரசியல் சீர்திருத்தங்களைக் கொண்டுவர உறுதியளித்திருந்த நிலையில், இந்தத் தேர்தல் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நடத்தப்பட்டது.

தேர்தலுக்கான பிரசாரங்களின் போது, வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கும் சர்வதேச கண்காணிப்பாளர்களுக்கும் பல ஆண்டுகளுக்குப் பின்னர் இங்கு தாராளமான அனுமதி அளிக்கப்பட்டிருந்தது.

தேர்தல் சுமுகமாக நடைபெற்றதால் அந்தநாட்டுக்கு எதிராக உள்ள சில தடைகளை விலக்கிக்கொள்ளத் தயார் என்று ஐரோப்பிய ஒன்றியம் வழங்கியிருந்தது.

இதற்கிடையில், இன்றைய வாக்குப்பதிவின் போது தலைநகர் நேட்டோவில் பல முறைகேடுகள் நடந்துள்ளன என்று என்எல்டி கட்சி தேர்தல் ஆணையத்துக்கு முறைப்பாடு செய்துள்ளது.

வாக்குச்சீட்டில் தமது கட்சிச் சின்னத்துக்கு நேரே மெழுகு பூசப்பட்டிருந்ததை பல இடங்களில் அவதானித்ததாகவும், மெழுகை உரித்துவிட்டு அந்த வாக்குகளை செல்லுபடி அற்றதாக்கும் முயற்சி தான் அது என்றும் என்எல்டி சுட்டிக்காட்டியுள்ளது.

## சிரியாவின் புரட்சிக் குழுவுக்கு சில நாடுகள் அங்கீகாரம்

சிரியாவின் புரட்சிக் குழுவான சிரியாவின் தேசிய சபையை, சிரியாவின் அனைத்து மக்களின் நியாயபூர்வ பிரதிநிதிகளாக, சிரியாவில் அரசியல் மாற்றங்களை ஆதரிக்கும் நாடுகள் அங்கீகரித் திருக்கின்றன.

இந்தநிலையில் இஸ்தான்புல்லில் நடைபெற்ற மாநாட்டில் பேசிய துருக்கியின் வெளியுறவு அமைச்சரான அகமத் டவுத்தொக்லு, சிரியா மனித நேய உதவிகளுக்கான ஆதரவை அதிகரிப்பது என்று தாம் உடன்பாடு கண்டுள்ளதாகவும், அண்டைய நாடுகள் சிரியாவின் அகதிகளை ஏற்பார்கள் என்றும் கூறியுள்ளார்.

தமக்கெதிரான தாக்குதலுக்கு எதிராகத் தம்மை பாதுகாத்துக்கொள்வதற்கான சிரிய மக்களின் உரிமையையும் அவர்கள் அங்கீகரித்திருக்கிறார்கள்.

> தம்மை பாதுகாத்துக் கொள்வதற்கான சிரிய மக்களின் உரிமையையும் அவர்கள் அங்கீகரித்திருக் கிறார்கள்.

வளைகுடா நாடுகளால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பல கோடி டொலர்கள் நிதியில் இருந்து சிரியாவின் தேசிய இராணுவப் படைக்கு நிதி வழங்கப்படும் என்று சிரியாவின் தேசிய சபை கூறியுள்ளது.

அதேவேளை சிரியாவில் தொடரும் மோதலில் நேற்று ஈராக் எல்லைக்கு அருகே 10 பேர் வரை கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

இந்த மோதல்கள் புரட்சிப்படையினருக்கு ஆயுதம் செல்வதைத் தடுப்பதற்கான அரசின் முயற் சியாக இருக்கலாம் என்று செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

## சிரியக் கிளர்ச்சியாளர்களுக்கு ஊதியம் வழங்க நடவடிக்கை

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் அசாத் அரசுக்கு எதிராகப் போராடும் கிளர்சியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படும் என்று சிரிய எதிர்க்கட்சி அமைப்பான 'சிரிய தேசிய சபை' அறிவித்துள்ளது.

அமெரிக்க ராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்டன் உட்பட மேற்குலக மற்றும் அரபு நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் 78 பேர் கலந்துகொண்ட, துருக்கியில் நடைபெற்ற 'சிரிய மக்களின் நண்பர்கள்' அமைப்பின் மாநாட்டின் பின்னர் அந்தச் சபை இவ்வாறு அறிவித்தது.

> துருக்கியில் நடைபெற்ற 'சிரிய மக்களின் நண்பர்கள்' அமைப் பின் மாநாட்டின் பின்னர் அந்தச் சபை இவ்வாறு அறிவித்தது.

இதற்காக அரபு நாடுகள் மில்லியன் கணக்கான டொலர்களை வழங்கும் என மாநாட்டில் பங்குபற்றிய தூதுக் குழுவினர் தெரிவித்தனர்.

இந்த மாநாட்டில் சிரியாவின் சட்டபூர்வ பிரதிநிதியாக சிரிய தேசிய சபையை இந்த மாநாடு அங்கீகரித்தது.

எனினும் 'சிரிய மக்களின் நண்பர்கள்' மாநாட்டை சிரியாவின் எதிரிகள் என சிரிய அரசு விமர்சித்துள்ளது. ரஷ்யா, சீனா, ஈரான் முதலான நாடுகள் இதில் பங்குபற்றவில்லை.

## செர்பியா தீ விபத்தில் 6 பேர் சாவு

செர்பிய நாட்டின் நோவி சேட் நகரில், இரவு விடுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி ஆறு பேர் உயிரிழந்துள்ளனர்.

செர்பியாவின் நோவி சேட் நகரில் நேற்றுமுன் தினம் இரவு விடுதியில், 350 பேர் தங்கியிருந்தனர். இங்கு திடீரென ஏற்பட்ட மின் கோளாறு காரணமாக அந்த விடுதியின் அரங்கம் தீப்பற்றி எரிந்தது. இதில் மூன்று ஆண்களும், மூன்று பெண்களும் தீயினால் எழுந்த புகையில் மூச்சுத் திணறி உயிரிழந்தனர். சிலர் காயமடைந்துள்ளனர்.பெரும்பாலானோர் தப்பிச் சென்று விட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இரவுவிடுதியின்உரிமையாளர் உட்பட மூன்று பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## தீ விபத்துக்குள்ளான கப்பல் மலேஷியாவை வந்தடைந்தது



மணிலா, ஏப் 03

தீ விபத்து ஏற்பட்ட 'அஸாமாரா' என்ற பயணிகள் கப்பல் மலேஷியத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

விபத்துக் காரணமாக 24 மணித்தியாலங்கள் கடலில் நிலைதடுமாறிய குறித்த கப்பல் பழுதுபார்ப்பதற்காகத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

ஆயிரம் பேரை ஏற்றிய குறித்த கப்பல் பிலிப்பன்ஸ் தலைநகர் மணிலாவில் இருந்து மலேஷியா நோக்கிப் கடந்த வியாழக்கிழமை புறப் பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தினால் ஐந்து கப்பல் பணியாளர்கள் மூச்சுத்திணறலுக்கு உள்ளான போதிலும், எந்தவொரு பயணிகளும் காயமடையவில்லை என்று கப்பல் நிறுவனம் கூறியுள்ளது.

## சோமாலியாவில் கடும் சண்டை

சோமாலியாவில் சோமாலிலாந்து குடியரசை சுயமாகப் பிரகடனம் செய்த படையினருக்கும், பிரிந்துபோன பிராந்தியமான கட்டுமா மாநிலத்தின் விசுவாசப் படைகளுக்கும் இடையே கடுமையான சண்டைகள் நடைபெற்றன.

சர்ச்சைக்குரிய வடமேற்கு சோமாலியப் பகுதியில் இரு முனைகளில் இடம்பெற்ற இந்தச் சண்டையில் மக்கள் பலர் கொல்லப்பட்டனர், பலர் காயமடைந்தனர்.

இந்த வருட முற்பகுதியில் சோமாலிலாந்தில் இருந்து கட்டுமா மாநிலம் பிரிந்த பின்னர் நடைபெற்ற மிகவும் மோசமான சண்டை இதுவென அந்தப் பகுதியில் இருக்கும் ஒரு பிபிசி செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

## கட்டிலுடன் பொருத்தப்பட்ட நவீன பாதுகாப்புப் பெட்டகம்



கொள்ளைச் சம்பவங்களில் இருந்து பொருள்களைப் பாதுகாப்பதற்கு கட்டிலுடன் பொருத்தப்பட்ட அதிநவீன பாதுகாப்புப் பெட்டகங்களை அமெரிக்க நிறுவனமொன்று வடிவமைத்துள்ளது.

அமெரிக்காவில் பொருளாதார மந்த நிலை காரணமாக கொள்ளைச் சம்பவங்கள் மற்றும் குற்றச் செயல்கள் அதிகரிக்கலாம் என்று அஞ்சுபவர்களுக்காகக் கட்டிலுடன் பொருத்தப்பட்ட அதிநவீன பாதுகாப்புப் பெட்டகங்கள் அந்த நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

'பெட் பங்கர்' எனப்படும் இந்தப் பாதுகாப்புப் பெட்டகம் சுமார் 1,300 இறாத்தல் எடையுடையது. அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்ரகன் போன்றவற்றில் பயன்படுத்தப்படும் அதிநவீன பூட்டுகள் இதில் பொருத்தப்பட்டுள்ளன.

கோடீஸ்வரர்கள் பலர் இந்தத் தயாரிப்பை வாங்கி வருவதாகக் கூறிய இதை வடிவமைத்த ஜோன் அட்ரெய்ன் " வீட்டுக்குள் அத்துமீறிப் பிரவேசிக்கும் நபர்களால் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரிக்கின்றன. பெறுமதியான பொருள்களை வைத்துக்கொள்வதற்கு உங்கள் கட்டில் அடியைவிட பாதுகாப்பான இடம் வேறு எங்கிருக்க முடியும்?" என வினவுகிறார்.

## இந்துக் கோவிலை இடிக்க ரஷ்யா நீதிமன்றம் உத்தரவு



ரஷ்யாவின் சென் பீற்றஸ்பர்க்கில் இந்துமத அடையாளமாக உள்ள கோவில் ஒன்றை இடிக்க அந்தநாட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இது குறித்து கோவிலை நிர்வகித்து வரும் சுரேன் காராபெட்யான் என்பவர் கூறியதாவது:-

கடந்த 1992ஆம் ஆண்டு பெடரல் ஆராய்ச்சி மையத்தின் உதவியுடன் இந்தப் பகுதியில் கோவிலைக் கட்டுவதற்கு நில உரிமையாளரிடம் 49 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

20 ஆண்டுகளே முடிவடைந்துள்ள நிலையில் கோவிலை இடிக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்தக் கோவில் சமஸ்கிருதம், யோகா உட்பட இந்தியாவின் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் கலாசார மையமாகவும் செயற்பட்டு வருகிறது. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இந்துக்களின் புனித நூலான பகவத்கீதைக்குத் தடைவிதிக்கக் கோரிக்கை விடுக்கப்பட்டது. அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில் தற்போது கோவிலை இடிக்க முற்பட்டுள்ளனர். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வலியுறுத்தி இந்திய மற்றும் ரஷ்ய ஜனாதிபதிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது - என்றார்.

## 400 சிறுவர்களுக்கு கட்டாயத் திருமணம்

### தப்பவில்லை 5 வயதுப் பிள்ளையும்

பிரிட்டனில் கடந்தாண்டில் மட்டும் இந்தியா, பாகிஸ்தான் உட்பட ஆசிய நாடுகளைச் சேர்ந்த 400 சிறுமிகளுக்கு கட்டாயத் திருமணம் நடந்துள்ளதாக அந்தநாட்டு அரசு தெரிவித்துள்ளது.

பிரிட்டன் உள்துறை அமைச்சகத்தின் கீழ் குழந்தை திருமணத் தடுப்புப் பிரிவு செயற்படுகிறது. இந்தப் பிரிவு வெளியிட்ட அதிகாரபூர்வத் தகவலின்படி கடந்த 2011ஆம் ஆண்டில் மட்டும் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் நாடுகளைச் சேர்ந்த 400 சிறுமிகளுக்கு அவர்களின் பெற்றோர்கள் கட்டாயத் திருமணம் செய்து வைத்துள்ளனர்.

அந்தச் சிறுமிகளில் 5 வயதுக் குழந்தையும் உண்டு. கடந்த 2008ஆம் ஆண்டில் 1,618 குழந்தை திருமணத் தடுப்பு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 2010ஆம் ஆண்டில் இது 1,735 ஆக அதிகரித்தது. பின்னர் 2011ஆம் ஆண்டில் 1,500ஆகக் குறைந்துள்ளது.

இதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்தாலும் முழு அளவில் தடுக்க முடியவில்லை. எனவே குழந்தைத் திருமணம் செய்து வைக்கும் பெற்றோருக்கு 2 ஆண்டு வரை சிறைத் தண்டனை அளிக்கும் வகையில் புதிய சட்டம் கொண்டுவர பரிசீலித்து வருகிறோம் என்று அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்ய விமானம் வானில் நொறுங்கியது

## 41 பேர் உருக்குலைந்து சாவு

மொஸ்கோ, ஏப் 03

43 பயணிகளுடன் சைபீரியா நோக்கிசென்ற ரஷ்யநாட்டுப் பயணிகள் விமானம் விபத்தில் சிக்கியது. இந்த விபத்தில் 2 ஊழியர்கள் உட்பட 41 பேர் உயிரிழந்துள்ளனர். 12 பேர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளனர் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரஷ்ய நேரப்படி காலை 5.30 மணியளவில் புறப்பட்டு சென்ற இந்த விமானம் சில நிமிடங்களில் ரேடார் கருவியில் இருந்து விலகியது. இதனையடுத்து பதற்றமடைந்த விமான அதிகாரிகள் அருகில் உள்ள விமான நிலையம் மற்றும் பாதுகாப்புத் துறையினருடன் தொடர்பு கொண்ட போதும் எவ்வித முன்னேற்றமும் இன்றி இறுதியில் விமானம் நொறுங்கியதாகத் தகவல் வெளியாகின.

இது குறித்து ரஷ்ய அவசரநிலைக்கான துறை அமைச்சக செய்தி தொடர்பாளர் இர்னியா ஆன்டிரியானோவா கூறியதாவது:-

இரட்டை இயந்திரங்கள் பொருத்தப்பபட்ட ஏ.டி.ஆர்., 72 என்ற ரக விமானம் டியூமென் நகரின் அருகில் உள்ள ரோஷ்சினோ விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டு சென்றது. சூர்குட் நோக்கி சென்ற சில நிமிடங்களில் வானிலை கோளாறு காரணமாக விபத்தில் சிக்கியது. மேற்கு சைபீரியாவில் உள்ள டியூமென் நகரில் இருந்து 35 கி,மீற்றர் தொலைவில் இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 12 பேர் உயிருக்குப் போராடிய நிலையில் மீட்கப்பட்டுள்ளனர். விபத்துக் குறித்து விசாரணை மேற்கொள்ளப் பட்டுள்ளது-என்றார்.



இந்த விபத்தில் 2 ஊழியர்கள் உள்பட 41 பேர் உயிரிழந்துள்ளனர். 12 பேர் அதிர்ஷ்ட வசமாக உயிர் தப்பியுள்ளனர்

### அடிக்கடி நடுங்கும் ஜப்பான்

ஜப்பானில் கடந்த சில வாரங்களாக ஏற்படும் நில நடுக்கங்களினால் அந்நாட்டு மக்கள் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

ஜப்பானின் மேற்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் நள்ளிரவும் பயங்கர நில நடுக்கம் ஏற்பட்டது. இதனால் நராஹா, தொமி யோகோ நகரங்களில் உள்ள வீடுகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கி அதிர்ந்தன. அப்போது தூங்கி கொண்டிருந்த மக்கள் அலறியடித்தபடி எழுந்து வீதியை நோக்கி ஓடினர் என்று அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்தநிலநடுக்கம் 5.9 ரிச்டர் அளவில் பதிவானதாக ஜப்பான் வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

மேலும் இந்த நிலநடுக்கம் காரணமாக வழக்கத்தை விட அதிக உயரத்தில் கடல் அலைகள் எழுந்தன. சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை.

### சிரியாவில் அடுத்த திட்டம் என்ன

சிரியாவில் அமைதி நிலவ மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் தோல்வியடைந்த நிலையில் அடுத்தது என்ன நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனச் சிறப்பு தூதர் கொபி அனானுக்கு அமெரிக்க வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து அமெரிக்க இராஜங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டன், சவூதி அரேபியா, குவைத், பஹ்ரைன், கட்டார், ஓமான் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுடன் முக்கிய ஆலோசனை நடத்தியுள்ளார்.

### ஏமனில் அல்குவைதா தாக்குதல்

சனா, ஏப் 3

ஏமனில் பாதுகாப்புப் படைகள் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் இரு தரப்பிலும் 30 பேர் உயிரிழந்தனர்.

அந்தநாட்டில் தெற்குப் பகுதியில் உள்ள அல்-முல்லா நகரில் உள்ள ராணுவத் தளத்தில் இந்த மோதல் நிகழ்ந்தது. இதில் ராணுவத் தரப்பில் 13 பேரும், தீவிரவாதிகள் தரப்பில் 17 பேரும் உயிரிழந்துள்ளனர் என்று ராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஏமனின் தெற்குப் பகுதியில் அமெரிக்க ராணுவ உளவு விமானங்களும் தாக்குதல் நடத்தி வருகின்றன.

அந்நாட்டு அரசுக்கு எதிராக எழுந்த உள்நாட்டுக் குழப்பத்தை அடுத்து, அதிபராக அபெட் ரப்போ மன்சூர் பதவியேற்றுக் கொண்டார். எனினும் முன்னாள் அதிபர் அலி அப்துல்லா சலேயின் ஆதரவாளர்கள் அரசு நிர்வாகத்தையும், ராணுவ நடவடிக்கைகளையும் முடக்கி வருவதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.



குருத்தோலை ஞாயிறு தினத்தை முன்னிட்டு, வத்திக்கான் புனித பீற்றர் சதுக்கத்தில் நடந்த நிகழ்ச்சியில் போப் பெனடிக்ட் ஆசி வழங்கினார்.

# எகிப்து ஜனாதிபதித் தேர்தல் களத்தில் முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பு

## வேட்பாளராக கைரத் அல் ஷாதிர் அறிவிப்பு

கெய்ரோ,ஏப் 03

எகிப்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தனது வேட்பாளரை முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பு அறிவித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் மே 23, 24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள எகிப்து ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பு சார்பில் அதன் துணைத் தலைவர் கைரத் அல் ஷாதிர் போட்டியிடவுள்ளார். எகிப்து மக்கள் எழுச்சியை சீர்குலைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பின் முன்னணித்தலைவர் மஹ்மூத் ஹுசைன் குறிப்பிட்டுள்ளார்.



ஏற்கனவே முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பு நடந்து முடிந்த எகிப்தில் நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை ஆசனங்களை வென்றுள்ளது. இந்நிலையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பின் வேட்பாளர் கைரத் அல் ஷாதிர் ஏனைய வேட்பாளர்களுக்குக் கடும் சவாலாக இருப்பார் என எதிர்பார்க்கப் படுகிறது.

# ஈரான் அணு உற்பத்தி தொடர்பில் இஸ்தான்புல்லில் புதிய கூட்டம்

இஸ்தான்புல், ஏப் 03

ஈரானின் அணு சக்தி விவகாரம் தொடர்பாக ஏப்ரல் 13, 14 ஆம் திகதிகளில் புதிய பேச்சு நடைபெறும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் தெரிவித்துள்ளார்.

சவூதி அரேபியாவில் நடைபெற்ற பெர்சிய வளைகுடா அரபு நாடுகளின் பாதுகாப்புத் தொடர்பான மாநாட்டுக்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய ஹிலாரி,'' அணுசக்தி விவகாரத்தில் சர்வதேச நாடுகள் தெரிவித்து வரும் கருத்துகளில் ஈரானின் அக்கறை குறித்து அறிய துருக்கியின் இஸ்தான்புல்லில் இந்தக் கூட்டம் நடத்தப்படவுள்ளது

ஈரானிடமிருந்து இந்தியா,சீனா உள்ளிட்ட நாடுகள் எரிபொருள் இறக்குமதி செய்வதைத் தவிர்க்குமாறு அமெரிக்க அதிபர் ஒபாமா எச்சரிக்கை விடுத்த மறுநாள் ஹிலாரி இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

ஈரான் தொடர்பான இந்தப் பேச்சுக்கு துருக்கி ஏற்பாடு செய்துள்ளது. அமெரிக்கா, பிரிட்டன் ,பிரான்ஸ், ரஷ்யா, சீனா, ஜேர்மன், ஈரான் ஆகிய நாடுகள் இஸ்தான்புல் கூட்டத்தில் கலந்து கொள்கின்றன.

இதேவேளை ஈரானின் அணுசக்தி ஆய்வு மையங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால் அது முழுமையாக வளைகுடா பிரதேசத்தையே பாதிக்கும் என்று துருக்கிப் பிரதமர் ரீசெப் எர்டோகான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

### பாரிஸ் பொலிஸ் நிலையத்தில் தீ

பிரான்ஸின் தலைநகர் பரிஸில் உள்ள பொலிஸ் நிலையம் ஒன்றில் நேற்றுக் காலை தீ விபத்து ஏற்பட்டது.இந்தத் தீ 150 தீயணைப்புப் படை வீரர்களின் கடும் போராட்டத்துக்குப் பின்னர் தீகட்டுப்பாட்டுக்குள்கொண்டு வரப்பட்டது.

இந்தத் தீ விபத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை.

இந்த விபத்து எவ் வித உயிர் சேதத்தையும் ஏற்படுத்தவில்லை என்றாலும்,பொருள் சேதங்களை ஏற்படுத்தியுள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடும்போக்கு கம்யூனிஸ்ட் நாடான

# கியூபாவில் பெரிய வெள்ளி விடுமுறை தினமாக அறிவிப்பு

கம்யூனிஸ நாடான கியூபா, கிறிஸ்தவர்களின் பெரிய வெள்ளி தினத்தை அரசு விடுமுறை நாளாக அறிவித்துள்ளது.

கடந்த சில திகதிகளுக்கு முன்பு, 16ஆவது போப் பெனடிக் கியூபாவுக்குச் சென்றிருந்தார். அதன்போது கியூபா தலைவர் பிடல் காஸ்ட்ரோவைச் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பில் ''கியூபா மக்களுக்கு இன்னும் அதிக சுதந்திரமும், உரோம கத்தோலிக்க சமயத்தின் பங்கும் அவசியம்''-என்று வலியுறுத்தினார்.

இதனையடுத்து எதிர்வரும் புனிதவெள்ளியை கியூபாவில் வசிக்கும் கிறிஸ்தவர்கள் கொண்டாடும் பொருட்டு விடுமுறை நாளாக அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது. இந்த விடுமுறை தினத்தை நிரந்தரமாக அறிவிப்பது குறித்து பின்னர் முடிவெடுக்கப்படும் என்றும் கியூபா தெரிவித்துள்ளது.

கியூபாவின் இந்த முடிவை வத்திக்கான் செய்தித்தொடர்பாளர் ஃபாதர்பெடரிகோலொம்பார்டி வரவேற்றுள்ளார்.

# ஓயவில்லை, இன்னும் ஓயவில்லை லிபிய கிளர்ச்சியாளர்களின் மோதல்

## சாவு 147 ஆக அதிகரிப்பு

லிபியாவில் கிளர்ச்சியாளர்களுக்கும் பழங்குடி இனத்தவர்களுக்கும் இடையில் கடந்த ஒரு வாரகாலமாக ஏற்பட்ட மோதலில் 147 பேர் கொல்லப்பட்டனர் ;395பேர் காயமடைந்தனர்.இந்தத் தகவலை அந்தநாட்டின் பிரதமர் அப்துர் ரஹிம் அல் கைப் திரிபோலியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக மாநாட்டில் தெரிவித்தார்.

லிபியாவின் தெற்கு நகரான சபாவில் டொபவ் கிளர்ச்சியாளர்கள் மற்றும் பழங்குடி இனத்தவர்களுக்கு இடையே மோதல் நீடித்து வருகிறது. மோதலைக் கட்டுப்படுத்த லிபிய இடைக்கால அரசு தொடர்ந்து முயற்சித்து வருகின்றது.

தமது இனத்தவர் ஒருவரை டொலவ் கிளர்ச்சியாளர்கள் கொன்றதாகப் பழங்குடியினர் கடந்த திங்கட்கிழமை குற்றம் சாட்டியதைத் தொடர்ந்தே இரு தரப்பு மோதல் வெடித்தது.

மும்மர் கடாபி அரசு கவிழ்க்கப்பட்ட பின்னர் அந்த அரசுக்கு எதிராகப் போராடிய கிளர்ச் சியாளர்கள் இன்னும் ஆயுதங்களைக் களையவில்லை. இதனால் அங்கு தொடர்ந்து மோதல்கள் நீடித்து வருகின்றன.

### இரட்டை குண்டுவெடிப்புகள் ஆப்கனில் 18 பேர் சாவு

ஆப்கானிஸ்தானின் பாக்லான் மாகாணத்தில் மக்கள் நெருக்கடி மிகுந்த ஷேர் பகுதியில் அடுத்தடுத்து நடைபெற்ற குண்டுவெடிப்புகளில் சிக்கி 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

உயிரழந்தவர்களில் 18 பேரில், 5 பேர் பாதுகாப்புப் படை வீரர்கள். இந்தச் சம்பவத்துக்கு இதுவரை எந்தத் தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்க வில்லை. ஆப்கனில் தலிபான் மீதான அடக்குமுறை அண்மையில் அதிகரித்துள்ளதன் விளைவாக அந்த அமைப்புத்தான் இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது.

# கோடீஸ்வரர்களுக்கு அதிகளவு வரி: ஒபாமா

அமெரிக்காவின் நலன் கருதி கோடீஸ்வரர்களுக்கு அதிகளவு வரி விதிக்க வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

அமெரிக்காவில் பெரும் முதலீட்டாளர்கள், கோடீஸ்வரர்களுக்கு அளிக்கப்படும் பல்வேறு சலுகைகளால், அவர்கள் செலுத்தும் வரி குறைவாகவே உள்ளது.

கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்குத் தற்போது கோடீஸ்வரர்கள் மிகவும் குறைந்த விகிதத்திலேயே வரி செலுத்துகின்றனர். குறிப்பாக வாரன் பபெட், பில்கேட்ஸ் குறைவாகவே வரி செலுத்துகின்றனர்.

அதிக லாபம் ஈட்டும் கோடீஸ்வரர்களுக்கு வரிச் சலுகை தேவையில்லை. மாறாக நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் நலன் கருதி கோடீஸ்வரர்களுக்கான வரிகளை அதிகரிக்க வேண்டும்.




இது தொடர்பான வரி உயர்வுப் பிரேரணை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட உள்ளது. அப்போது நாட்டுப் பொருளாதார வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு இதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விண்ணுக்குப் பாயத் தயாராகிறது முதல் ரேடார் செயற்கைக் கோள்

## இந்தியாவின் சொந்தத் தயாரிப்பு இது



புதுடில்லி, ஏப்.3

உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட இந்தியாவின் முதல் ரேடார் இமேஜிங் செயற்கைக்கோள் எதிர்வரும் 20 ஆம் திகதி விண்ணில் ஏவப்பட உள்ளது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தால், ரிசாட் -1 என்ற ரேடார் இமேஜிங் செயற்கைக்கோள் வடி வமைக்கப்பட்டுள்ளது. முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்த செயற்கைக் கோளை விரைவில் விண்ணில் ஏவுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

இது இந்தியாவின் முதல் ரேடார் இமேஜிங் செயற்கைக்கோள் என்ற பெருமையுடையது.

இந்த செயற்கைக் கோள் இரவு, பகல், மேகங்கள் சூழ்ந்த வானிலை என எந்த ஒரு சூழ்நிலையிலும், விண்ணிலிருந்து பூமியைத் தெளிவாகப் புகைப்படங்கள் எடுக்கும் திறனுடையது.

ஏற்கனவே இந்த செயற்கைக்கோள் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள ஏவுதளத்துக்குக் கொண்டு செல்லப் பட்டு விட்டது.

ஏற்கனவே சில செயற்கைக்கோள்களை 20 ஆம் திகதியில் வெற்றிகரமாக விண்ணில் ஏவியிருப்பதால் அதே திகதியில் இந்த செயற்கைக்கோளையும் விண்ணில் ஏவுவதற்கு இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.

ரிசாட்-2 என்ற செயற்கைக்கோள் இஸ்ரேலிடமிருந்து 11 கோடி டொலருக்கு வாங்கப்பட்டு, அது 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் 20 ஆம் திகதி விண்ணில் செலுத்தப்பட்டது.

அதேபோல் ரிசோர்சாட்-2 என்ற செயற்கைக்கோளும், கடந்த ஆண்டு ஏப்ரல் 20 இல் விண்ணில் ஏவப்பட்டது.

இரண்டு செயற்கைக் கோள்களும் வெற்றிகரமாகச் செலுத்தப்பட்டதால், ஏப்ரல் 20ஆம் திகதி இஸ்ரோவுக்கு ராசியான நாளாகக் கருதப் படுகிறது.

எனவே எதிர்வரும் 20 ஆம் திகதி ரிசாட்-1 செயற்கைக்கோள் விண்ணில் ஏவப்படலாம். மொத்தம் 1,850 கிலோ எடை கொண்ட இந்த செயற்கைக்கோள் பி.எஸ்.எல்.வி-சி-19 ரொக்கெட் மூலம் செலுத்தப்பட உள்ளது. (வ)

# மீண்டும் பன்றிக் காய்ச்சல் தமிழகம் எங்கும் பீதி

## கோவையில் ஒருவர் சாவு; சென்னையில் 4 பேர் பாதிப்பு

சென்னை, ஏப்.3

தமிழகத்தில் மீண்டும் பன்றிக் காய்ச்சல் தீவிரமாகப் பரவ ஆரம்பித் துள்ளதால் மக்கள் கவலை அடைந் துள்ளனர். கோவையில் முதியவர் ஒருவர் பன்றிக் காய்ச்சலினால் உயிரிழந்தார்.

சென்னையில் இதுவரை நான்கு பேருக்கு பன்றிக் காய்ச்சல் பரவியுள்ளது. இதனால் தமிழகம் எங்கும் பீதி பரவியுள்ளது.

தமிழகத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பு கோவையிலிருந்துதான் பன்றிக் காய்ச்சல் பரவி தமிழகம் முழுவதும் பல பகுதிகளில் பலரது உயிரைக் காவு வாங்கியது. இந்த நிலையில் தற்போது மீண்டும் பன்றிக் காய்ச்சல் பரவ ஆரம் பித்துள்ளது.

முதலாவது உயிரிழப்பு கோவையில் ஏற்பட்டுள்ளது. கோவை மாவட்டம் காங்கேயத்தைச் சேர்ந்த 75 வயதான கந்தசாமி என்பவர் காய்ச்சல் காரணமாக காங்கேயம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அங்கு நோய் குணமாக வில்லை. இதையடுத்து கோவையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு தொண்டை வலி, சளி, காய்ச்சல் காரணமாக அவர் சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் அவரது ரத்தப் பரிசோதனையில் அவருக்குப் பன்றிக் காய்ச்சல் ஏற்பட்டிருப்பது தெரிய வந்தது.

இதையடுத்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில், அவர் உயிரிழந்தார்.

இதற்கிடையே, சென்னையில் 4 பேருக்கு பன்றிக் காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டு அரசினர் ஸ்டான்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 2 பேர் நோய் பாதிப்புக் குறித்துத் தெரிந்ததும் மருத்துவமனையிலிருந்து தப்பி விட்டனர். அவர்களைப் பிடிக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (வ)

# ஊழல், கறுப்புப் பணம்: எதிர்ப்புப் போராட்டம் தயார்

## பாபா ராம்தேவ் அறிவிப்பு

பிரபல யோகா குரு பாபா ராம்தேவ், கறுப்புப் பணம் மற்றும் ஊழலை எதிர்த்து எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதி டில்லி ஜந்தர் மந்தரில் உண்ணா விரதப் போராட்டம் நடத்த உள்ளார்.

கடந்த 2011ஆம் ஆண்டு தலைநகர் டில்லியில் நடைபெற்ற அவரது உண்ணாவிரதம், பொலி ஸாரின் தடியடியால் கலைக்கப் பட்டது.


தற்போது அதன் நினைவாக, அதே நாளில் இந்த உண்ணா விரதம் நடைபெற உள்ளதாக யோகா குரு செய்தித் தொடர்பாளர் திஜராவாலா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஊழல் மற்றும் கறுப்புப் பணத் துக்கு எதிராக நேற்று முதல் ஓகஸ்ட் முதலாம் திகதி வரை, நாடு தழுவிய இயக்கத்தை ராம்தேவ் அறிவித் துள்ளார்.

எதிர்வரும் ஜூன் மாதம் 4ஆம் திகதி, நாட்டின் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் ரத்ததான முகாம்கள் நடைபெறும் என்றும் அறிவிக் கப்பட்டுள்ளது. (வ)

# தென்துருவ அந்தாட்டிக்காவில் இந்திய புதிய ஆய்வு மையம்



பனிமலைகள் நிறைந்த அந்தாட்டிகா கண்டத்தில் இந்தியா, தனது மூன்றாவது ஆய்வு மையத்தை ஆரம்பித்து சோதனை ரீதியாகச் செயற்படத் தொடங்கியுள்ளது.

உலகின் தென்பகுதியான அந்தாட்டிகாவில் பல்வேறு நாடுகள் ஆய்வு மையம் அமைத்து பல்வேறு ஆய்வுகளில் ஈடுபட்டு வருகின்றன.

இதில் இந்தியாவும் இடம் பெற்றுள்ளது. இந்தநிலையில் அங்குள்ள லார்சிமேன் பனி மலைப்பகுதியில் இந்தியாவின் மூன்றாவது ஆய்வு மையம் அமைக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பாக புவி அறிவியல் அமைச்சகத்தின் செயலாளர் சைலேஷ் நாயக் தெரிவித்ததாவது:-

ஆய்வு மையத்தின் கட்டுமானப் பணிகள் முடிந்து விட்டன. 'பார்தி' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த ஆய்வு மையம் நவம்பரில் முறைப்படி திறந்து வைக்கப்படும்.

இந்தியா அறிவியல் ரீதியாக வேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது என்பதை இதுபோன்ற ஆய்வு மையங்கள் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக்காட்டும். ராஜேஷ் அஸ்தனா தலைமையிலான 15 பேர் அடங்கிய குழு இப்போது அங்கு முகாமிட்டுள்ளது- என்றார் அவர்.


இதற்கு முன்பு, கடந்த 1988-89 இந்தியா சார்பில் மைத்ரி என்ற ஆய்வு மையம் அந்தாட்டிகாவில் அமைக்கப் பட்டது. இதில் இருந்து சுமார் 3 ஆயிரம் கிலோமீற்றர் தொலைவில் புதிய ஆய்வு மையம் உள்ளது. (வ)

# ஒருவரின் காணிக்கை ரூ.5 கோடி

திருப்பதி ஏழுமலையான் கோயிலில் உள்ள உண்டியலில் இதுவரை இல்லாத அளவில் நேற்று முன்தினம் ஒரேநாளில் ரூ.14 கோடியே 45 லட்சத்து 57 ஆயிரத்து 548 ரூபாவை (இந்திய நாணயத்தில் ரூபா 5கோடியே 73 லட்சத்து 2 ஆயிரம்) பக்தர்கள் காணிக்கையாகச்செலுத்தினர்.

ஏழுமலையான் கோயிலில் ராமநவமியை யொட்டி நேற்று முன்தினம் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. உண்டியலில் பக்தர்கள் காணிக்கையாகச் செலுத்திய பணம், பொருள் கள் ஆகியவை நேற்று முன்தினம் வழமையாகக்கணக்கிடப்பட்டன. அப்போதுபக்தர்ஒருவர் மட்டும் 5 கோடி ரூபாவை காணிக்கையாகச்செலுத்திஇருப்பதுதெரிய வந்தது. மேலும் நேற்று முன் தினம் ஒரே நாளில் மட்டும் 12 கோடியே 613 லட்சத்து 399 ஆயிரம் ரூபா உண்டியல் காணிக்கையாகக் கிடைத்துள்ளமை தெரியவந்தது.

# வயோதிபரின் வயிற்றிலிருந்து அகற்றப்பட்ட 4,294 கற்கள்



தமிழகத்தில் வயோதிபர் ஒருவரின் வயிற்றிலிருந்து அறுவைச் சிகிச்சை மூலம் 4, 294 கற்கள் அகற்றப் பட்டுள்ளன. ஈரோடு மாவட்டத்தை அடுத் துள்ள ஆர்.என்.புதூரை சேர்ந்த துரைசாமி (வயது 62) கடந்த 10 ஆண்டுகளாக நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டிருந்தார்.

சிகிச்சைக்காக ஈரோடு வள்ளி மருத்துவமனையில் சேர்க்கப்பட் டார். ஸ்கேன் செய்து பார்த்தபோது அவரது பித்தப் பையில் கற்கள் அடைத் திருப்பது தெரியவந்தது.

டாக்டர் டி.கே.சாமி தலைமையிலான மருத்துவர்கள் குழு லேப்ராஸ் கோபி முறையில் அறுவைச் சிகிச்சை செய்து பித்தப் பையில் இருந்து 4294 கற்களையும், இறு தியாக பித்தபையையும் அகற்றினர்.

இதுகுறித்து டாக்டர் டி.கே.சாமி தெரிவித்ததாவது:

எங்கள் மருத்துவமனையில் அதிகபட்சமாக 80 கற்கள் வரை மட்டுமே அகற்றி உள்ளோம். தற்போது 4,294 கற்கள் அகற்றப்பட்டு நோயாளி நலமுடன் உள்ளார்.

உலக ரீதியில் ஜேர்மனியைச் சேர்ந்த ஒரு மூதாட்டிக்கு 3,110 கற்கள் அகற்றப்பட்டதே சாதனையாக இருந்து வந்தது. பித்தப் பையில் ஆயிரக்கணக்கில் கற்கள் இருந்து எந்த உபாதையும் ஏற்படா விட்டால் அகற்ற வேண்டியதில்லை. ஒரு கல் இருந்து உபாதை ஏற் படுத்தினால் அகற்றுவது தான் சிறந்தது - என்றார். (வ)


# நக்ஸலைட் பீஹாரில் கைது

சாசரம், ஏப்3

பீஹாரின் ரோடாஸ் மாவட்டத்தில் உள்ள பெல்துரியா கிராமத்தில் நேற்று முன்தினம் அதிகாலை நக்ஸலைட் இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் கைது செய் யப்பட்டார்.

தங்களுக்குக் கிடைத்த தகவலின்பேரில் பல்வேறு வழக்குகளில் தொடர்புடைய நக்ஸலைட் இயக்கத்தைச் சேர்ந்த தினேஷ் யாதவை பொலிஸார் கைது செய்தனர். மாவோயிஸ்ட் தலைவர் முன்னா விஸ்வகர்மாவுடன் தினேஷ் யாதவும் [illegible] என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ)

# ஜீப்–லொறி விபத்து : 5 பேர் சாவு



இரண்டு பெண்கள் உட்பட 5 பேர் உயிரிழந் தனர்.

தூத்துக்குடி ஏப்.3

தூத்துக்குடியில் நேற்று முன் தினம் மாலை ஜீப் மீது லொறி மோதிய விபத்தில், இடுக்கியைச் சேர்ந்த 5 பேர் உயிரிழந்தனர். மேலும், 9 பேர் படுகாயமடைந் தனர்.

கேரளமாநிலம், இடுக்கி மாவட்டம், செண்பக தொழுகு டியைச் சேர்ந்த 14 பேர், நேற்று முன்தினம் ஜீப்பில் சென்று திருச்செந்தூர் முருகன் கோயிலில் சுவாமி தரிசனம் முடித்துவிட்டு, மாலையில் இருக்கன் குடிகோயிலுக்கு திரும்பிக் கொண்டிருந்தனர்.

மாலை 6.30 மணிக்கு, தூத்துக் குடி, சிப்காட் பைபாஸ் மேம்பாலத் தில் ஜீப் சென்ற போது, எதிரே வந்த லொறி, ஜீப் மீது மோதியது. இதில், ஜீப் பலத்த [illegible]ந்தது. இந்த விபத்தில் [illegible] மணிகண்டன், மாரியப்பன், லட்சுமி, மற்றும் அடையாளம் தெரியாத இரண்டு பெண்கள் உட்பட 5 பேர் உயிரிழந் தனர்.

மேலும், ஜீப்பிலிருந்த சிறுவன் கார்த்திகேயன், சிறுமிகள் சந்திரிகா, சித்ரா, ரேணுகா மற்றும் குமரன், சொக்கர், தேனி முத்தையா, மற்றொரு லட்சுமி உட்பட 9 பேர் படுகாயத் துடன், தூத்துக் குடி அரசு மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் பலர் மயக்க நிலை யில் இருந்ததால், வயது உள்ளிட்ட முழுமையான விவரங்கள் தெரிய வில்லை. சிப்காட் பொலிஸார் விசாரித்தனர். (வ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெயார்ஸ் 'காக்கும் கரங்கள்' திட்டத்தில் வெலிகந்த வைத்தியசாலை புனரமைப்பு

இலங்கையில் முன்னணி குழந்தைகள் பராமரிப்பு வர்த்தக நாமமான யுனிலீவர் நிறுவனத்தின் பெயார்ஸ் மூலம் முன்னெடுக்கப்பட்டு வரும் சமூக பொறுப்புணர்வு நடவடிக்கையான காக்கும் கரங்கள்'' திட்டத்தின் கீழ், வெலிகந்த மருத்துவமனையின் கர்ப்பிணிகள் மற்றும் சிறுவர் விடுதிகள் மறுசீரமைக்கப்பட்டிருந்தன. இந்த மறுசீரமைப்பு நடவடிக்கைகள் காக்கும் கரங்கள்'' திட்டத்தின் 18 ஆவது அங்கமாக முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதற்காக சுமார் 3 மில்லியன் ரூபா பெயார்ஸ் மூலம் வழங்கப்பட்டிருந்தது.

மருத்துவ விடுதிகளின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் குழந்தைகளுக்கு சிகிச்சையளிப்பதற்கு தேவையான உபகரணங்கள் நிறுவுதல் போன்றவற்றுக்கு மேலதிகமாக சிறுவர்களுக்கான விளையாட்டுப் பகுதியும் அமைக்கப்பட்டு, சிறுவர் பிரிவுக்கு புதுமலர்ச்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அரச-தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் சமூக அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதற்கு இது ஒரு சிறந்த முன்மாதிரியாக திகழ்கிறது.

வெலிகந்த மருத்துவமனையின் பிரதம வைத்திய அதிகாரி வைத்தியர் பிரதீப் மெண்டிஸ் கருத்து தெரிவிக்கையில், இந்த பகுதியில் அமைந்துள்ள ஒரே வைத்தியசாலை இதுவாகும். பெருமளவான நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கப்படுகிறது. எமது வைத்தியசாலையின் சிறுவர் சிகிச்சை பிரிவு பல குறைபாடுகளுடன் காணப்பட்டது. பெயார்ஸ் வர்த்தக நாமத்தின் உதவியுடன் தற்போது இந்த குறைகள் நீக்கப்பட்டுள்ளன. சுகயீனமடைந்து காணப்படும் ஒரு குழந்தையை உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் பராமரித்து சிகிச்சை வழங்குவது அத்தியாவசியமானதாகும். இந்த அனைத்து தேவைகளுக்கும் ஏற்ற வகையில் பெயார்ஸ் அனுசரணையுடன் வைத்தியசாலை தற்போது தயாராகியுள்ளது'' என்றார்.

யுனிலீவர், பிரத்தியேக பராமரிப்பு தயாரிப்புகளுக்கான பணிப்பாளர் ரமணி சமரசுந்தர கருத்து தெரிவிக்கையில், நாம் இயங்கும் சமூகத்தில், மேற்கொள்ளும் ஒவ்வொரு சிறிய நடவடிக்கையும், மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியது. இந்த உறுதியான நோக்கத்துடன், இந்த செயற்திட்டத்தை கடந்த 10 ஆண்டுகளாக முன்னெடுத்து வருகிறோம். நாம் இதுவரை மறுசீரமைப்பு செய்திருந்த வைத்தியசாலைகளின் மூலம் சுமார் 2 மில்லியன் இலங்கை சிறுவர்கள் பயனடைந்துள்ளனர்.

பெயார்ஸ் மூலம் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்த போதிலும், முழு தேசமும் இந்தத் திட்டத்துக்கு பங்களிப்பை வழங்கியுள்ளது. விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு பெயார்ஸ் தயாரிப்பின் மூலம் திரட்டப்படும் சிறிய நிதித் தொகை இந்த திட்டத்துக்காக ஒதுக்கப்படுகிறது'' என்றார்.

# CDB நிறுவனம் திருகோணமலையில்

சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பீஎல்சி (CDB) நிறுவனம் அண்மையில் இல. 266, சென்ட்ரல் வீதி, திருகோணமலை என்ற முகவரியில்தனது சேவைநிலையத்தைத் திறந்து வைத்ததன் மூலம் திருகோணமலை மற்றும் அதனை அண்டிய பிரதேச மக்களுக்கு முழுமையான நிதியியல் சேவைகளை அங்குரார்ப்பணம் செய்துள்ளது.

CDBயின்புதிய திருகோணமலை சேவை நிலையம் அனைத்து முன்னேற்றகரமான வசதிகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. உயர்தரமான தொழில்நுட்பத்தின் ஊடாக வாடிக்கையாளர்கள் விரைவாகச் சேவைகளைப் பெறக்கூடிய விதத்திலும் அமைந்துள்ளது. அதேநேரம் பல்வகைப்பட்ட நிதியியல் தீர்வுகளை உடனுக்குடன்வாடிக்கையாளர்கள் அனுபவிப்பதற்கும் வழிவகுக்கின்றது.

திறப்புவிழா நிகழ்வில், CDB நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மஹேஷ் நாணயக்கார, பணிப்பாளரும், பிரதம நிதியியல் அதிகாரியுமான தமித் தென்னக்கோன், பணிப்பாளரும், பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரியுமான மல்கம் வீரசூரிய, பணிப்பாளரும், பிரதம கடன் அதிகாரியுமான சசீந்திர முனசிங்க, CDB நலன்விரும்பிகள் மற்றும் பிரதேசவாசிகள் பலரும் கலந்துகொண்டிருந் தனர்.

தற்போது நாடெங்கிலும் வியாபித்துக் காணப்படுகின்ற CDB வாடிக்கையாளர் சேவை வலையமைப்பை இந்தப் புதிய சேவை நிலையமானது மேலும் விஸ்தரிப்பதுடன், சேவை நிலையங்களின் எண்ணிக்கையை 34ஆகவும் அதிகரித்துள்ளது.

# வாகனம் செலுத்துதல், வீதிப் பாதுகாப்பு ஆய்வில் மொரட்டுவைப் பல்கலையுடன் கைகோக்கும் டிமோ

வாகனம் செலுத்துதல் மற்றும் வீதிப் பாதுகாப்பு தொடர்பான ஆய்வு ஒன்றை நடத்துவதற்கு மொரட்டுவை பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் Diesel and Motor Engineering PLC (டிமோ) கைச்சாத்திட்டுள்ளது. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தமானது ரஞ்சித் பண்டிதகேக்கும், (தலைவர் மற்றும் நிறைவேற்று அதிகாரி - டிமோ) பேராசிரியர் ஆனந்த ஜயவர்தனவுக்கும் (துணைவேந்தர் - மொரட்டுவை பல்கலைக்கழகம்) இடையில் டிசம்பர் 22 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

சிரேஷ்ட பேராசிரியர் அமல் குமாரதுங்கவின் தலைமையில் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் போக்குவரத்து மற்றும் விநியோகப் பிரிவினால் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது. வாகனச் சாரதிகளுக்கான பயிற்சி நிலையம் ஒன்றை 2012 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் சூரியவெவவில் டிமோ ஆரம்பித்து வைக்கவுள்ளது.


அந்த ஆய்வின் மூலம் தேர்ச்சி பெற்ற வாகன சாரதிகளுக்கு மட்டுமன்றி இளம் சாரதிகளுக்கும் உயர்தரம் வாய்ந்த பயிற்சிகளை வழங்கமுடியும்.

அந்த ஆய்வு மூலம் கிடைக்கும் பெறுபேறுகள் பொருத்தமானதும் செயற்திறன் மிக்கதுமான பயிற்சிகளை விஞ்ஞான விளக்கங்களுடன் வழங்குவதற்கு உதவும்.

வருடந்தோறும் ஏறத்தாழ 2,500 மரணங்கள் வீதி விபத்துக்களால் ஏற்படுகின்றன. கிட்டத்தட்ட 3,00,000 விபத்துக்கள் ஓர் ஆண்டில் நிகழ்கின்றன.

போக்குவரத்து மற்றும் விநியோகப் பிரிவின் புள்ளி விவரத்தின் அடிப்படையில் இந்த விபத்துக்கள் மூலம் ஆண்டுதோறும் ரூ.36 பில்லியனுக்கு மேற்பட்ட இழப்பு ஏற்படு கின்றது. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் வைபவத்தில் உரையாற்றிய ரஞ்சித் பண்டிதகே தனது உரையில் ''மொரட்டுவ பல்கலைக்கழகத்துடன் இம்முயற்சியில் பங்கு கொள்வதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

(த)



விவாஹாஸ் தனியார் நிறுவனம் நேற்று யாழ். மணிக்கூட்டு வீதியில் திறந்து வைக்கப்பட்டது. ஹரிகணன் நிறுவனத்தின் உரிமையாளர் சிவஞானசுந்தரம் ராஜ்குமார் விவாஹாஸ் முகாமையாளர் பஞ்சராஜா சுஜேந்திரனிடம் ஆவணங்களை வழங்கிச் செயற்பாடுகளை ஆரம்பித்து வைக்கிறார். (த)

# கொமர்ஷல் வங்கியின் மூலம் வெளிநாட்டிலிருந்து பணம் பெற்றுக்கொள்பவர்களுக்குப் பரிசுப் பொதி

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் கொமர் ஷல் வங்கி மூலம் வெளிநாடுகளிலிருந்து பணத்தைப் பெற்றுக்கொள்பவர்களுக்கு எதிர்பாராத பரிசுமழை காத்திருக்கின்றது.

வெளிநாட்டுப் பணப் பரிமாற்றச் சேவையில் மிக உறுதியான நிலையில் உள்ள கொமர்ஷல் வங்கி மார்ச் 15 முதல் ஏப்ரல் 12 வரையான காலப்பகுதியில் ஈ எக்ஸ்சேன்ஜ் சேவை மூலம் பணத்தைப் பெற்றுக்கொள்பவர்களில் அதிர்ஷ்டசாலிகள் 200 பேருக்கு தலா ரூபா 10,000 பெறுமதியான பொருள் கொள்வனவு வவுச்சர்களைப் பரிசாக வழங்கவுள்ளது.

'அவுருது படு மல்லக்' என்று பெயரிடப்பட்டுள்ள அப்போட்டியில் சீட்டிழுப் பொன்றின் மூலம் வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்படுவர். பண்டிகையைச் சந்தோஷமாகக் கொண்டாடக்கூடிய வகையில் நுகர்வோர் பொருட்களைக் கொள்வனவு செய்யக் கூடியதாக இந்த வவுச்சர்கள் வழங்கப்படும். மொத்தம் 2 மில்லியன் ரூபா இவ் வாறு பரிசாக வழங்கப்படவுள்ளது.

இதனிடையே மணிகிராம் பணப்பரி மாற்றச் சேவை மூலம் ஏப்ரல் 1க்கும் 13க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் கொமர்ஷல் வங்கிக் கிளை ஒன்றிலிருந்து ரூபா 50,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையைப் பெற்றுக் கொள்பவர்கள் வங்கியிடமிருந்து ஒரு பாரம்பரிய குத்து விளக்கொன்றைப் பரிசாகப் பெற்றுக்கொள்வர்.



மேலும் இந்தக் காலப் பகுதியில் மணிகிராம் மூலம் எந்தவொரு தொகையைப் பெற்றுக்கொண்டாலும் அவர்களுக்கு விசேட முத்திரை பொறிக்கப்பட்ட பேனா ஒன்றும் வழங்கப்படும் என்று வங்கி அறிவித்துள்ளது.


''வெளிநாடுகளிலிருந்து பணத்தைப் பெற்றுக் கொள்ள மிகச் சிறந்த தெரிவு கொமர்ஷல் வங்கியாகும். அதற்குக் காரணம் நாடு முழுவதும் 214 சேவை நிலையங்களுடன் காணப்படும் எமது விரிவான வலையமைப் பாகும். அத்தோடு, சர்வதேச ரீதியாகப் பணப்பரிமாற்றச் சேவையில் ஈடுபட்டுள்ள உயர்மட்ட நிறுவனங்களுடனான எமது பங்குடைமையுமாகும்'' என்று கூறினார் கொமர்ஷல் வங்கியின் செயற்பாடுகளுக்கான பிரதிப்பணிப்பாளர் சனத் பண்டாரநாயக்க.

''இந்த ஊக்குவிப்பின் மூலம் இலங்கையின் தலை சிறந்த வங்கியாக சர்வதேச மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டுள்ள வங்கியின் மூலம் பணப்பரிமாற்றத்தில் ஈடுபடுவது நியாயமானது என்பதற்கான இன்னொரு காரணத் [illegible] என்று அவர் மேலும் கூறினார்.

# பூமியைப் பாதுகாப்பதற்காக எக்ஸ்போலங்காவின் செயற்திட்டம்

உலகெங்கும் ஏழு கண்டங்களிலுள்ள 135 நாடுகளில் காணப்படும் 5,251 நகரங்களில் வாழ்கின்ற நூற்றுக்கணக்கான மில்லியன் மக்களுடன் இணைந்து இலங்கையும், இவ் வருடத்தின் Earth Hour நிகழ்வினை அனுஷ்டிக்க வழிவகுக்கும் முயற்சியில் எக்ஸ்போலங்கா நிறுவனம் முன்னின்று உழைத்தது.

Earth Hour என்பது காலநிலை மாற்றத்திற்கு எதிராக போராடுவதற்காக ஏற்பாடு செய்யப்படும் மிகப் பெரிய தொண்டு அடிப்படையிலான சூழல்சார் பிரசார முயற்சியாகும். இந்நிகழ்வு 2012 மார்ச் 31ஆம் திகதி சனிக்கிழமை இரவு 8.30 மணி முதல் 9.30 மணிவரை அனுஷ்டிக்கப்பட்டது. அம்முயற்சிக்கு சமிக்ஞை அடிப்படையில் தமது ஆதரவை வெளிப்படுத்தும் வகையில் அத்தியாவசியமற்ற மின் குமிழ்கள் அனைத்தையும் அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் அணைத்து விடுமாறு அனைவரும் கேட்டுக் கொள்ளப்பட்டனர். WWF (உலக இயற்கை வள நிதியம்) இனால் முன்னெடுக்கப்படும் இந்த சர்வதேச நிகழ்வில் இலங்கையும் பங்கேற்கின்றது.





இந்நிலையில் இலங்கையில் இடம்பெறுகின்ற Earth Hour நிகழ்வுக்கு எக்ஸ்போலங்கா நிறுவனம் தேசிய பங்காளராக செயற்படுகின்றது.

Earth Hour இனை இலங்கையிலும் கடைப்பிடிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த முன்னெடுப்புகள் தொடர்பில் எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் கூட்டாண்மைத் தொடர்பாடல் பிரதம அதிகாரி பெடி வீரசேகர விவரிக்கையில், ''சர்வதேச ரீதியிலான பிரமாண்டமான இந்த செயற்திட்டத்தில் பங்கேற்பதையிட்டு நாங்கள் பெருமிதம் அடைகின்றோம்.

இந்த செய்தியை பரப்புவதற்கும் அதன்பால் கூடுமானவரை இலங்கைப் பொது மக்களை அணி திரட்டுவதற்கும் அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் மேற்கொண்டுள்ளோம்.

இக்குறிப்பிட்ட மணித்தியால நேரத்தில் தம்மால் முடியுமானவரை அதிகளவான மின்குமிழ்களை அணைத்து விடுமாறும் அதன்மூலம் இச்செயற்றிட்டத்தின் செயற்படு நிலையிலுள்ள பங்காளராக திகழுமாறும் இலங்கையர்கள் அனைவருக்கும் நாம் அழைப்பு விடுக்கின்றோம்'' என்றார்.

Earth Hour மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பில் மாணவர்களுக்கு அறிவூட்டுவதற்கான விழிப்புணர்வு பிரசார நடவடிக்கை ஒன்று, AIESEC இன் பிரதிநிதிகள் என்ற வகையில் மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை தொடரும் மாணவர்களினால் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுய மதிப்பீடல்

②

ஒருவேளை பிறரது விமர்சனமும், கேலியும் உங்கள் தன்னம்பிக்கையைக் குறைக்கவோ, சிதைக்கவோ செய்திருக்கிறது என்றால் அதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டும்? என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

காரணம், பிறரைக் கேலி செய்து விமர்சிப்பவர்களே இந்த உலகில் எப்போதுமே இருப்பார்கள். இந்த உலகில் யார்தான் கேலி செய்யப்படவில்லை?

ஆனால், அவர்களின் கேலியிலிருந்தும், விமர்சனத்திலிருந்தும் நாம் பாடம் கற்றுக் கொள்ள முடியும்.

குழந்தைப் பருவத்தில் அனைவருமே தரையில் தவழ்ந்தவர்கள்தான்! ஒரு குழந்தை எழுந்து நடக்கும் பருவத்தில், அந்தக் குழந்தையின் தாய் அந்தக் குழந்தையிடம், ''எழுந்திரு! எழுந்து நட!'' என்று சொல்வார். அந்தக் குழந்தையும் எழுந்து நடக்க முயற்சிக்கும். அப்போது கால்கள் பலவீனமான நிலையில் அதுவரை நடந்தே பழக்கப்படாத நிலையில் அந்தக் குழந்தை கீழே விழுந்து விடும். அப்போது அந்தக் குழந்தையின் தாய் ஒரு வேளை சிரிக்கலாம். ஆனால் அந்தக் குழந்தை சற்றும் அதை சட்டை செய்வதில்லை.

மாறாக அது மீண்டும் எழுந்து நடக்க ஆரம்பிக்கிறது. இவ்வாறு தொடர்ந்து விழுந்து, எழுந்து நடக்க ஆரம்பிக்கும் குழந்தை ஒரு குறிப்பிட்ட பருவத்தில் முழு பலத்துடன் எழுந்து நடக்க ஆரம்பித்து விடுகிறது.

தாயின் சிரிப்போ, விமர்சனமோ அந்தக் குழந்தையின் தன்னம்பிக்கையைக் கொஞ்சமும் சிதைத்து விடுவதில்லை. மாறாக அதன் செயல் வேகத்தை அதிகரிக்கின்றது.

அதுபோலவே, இந்தச் சமுதாயத்தில் உங்களைப் பலர் கேலியோ, விமர்சனமோ செய்யும்போது, அவற்றை உங்கள் நிறைகுறைகளைத் தெரிந்து கொள்வதற்கான வாய்ப்புக்களாகக் கருதி எடுத்துக் கொள்ளுங்கள்.

உங்கள் மனதளவில் நீங்கள் நேர்மையாகவும் துடிப்போடும் செயல்படும் நிலையில் பிறரது கேலியையும் விமர்சனத்தையும் பற்றி நீங்கள் கவலைப்படத் தேவையில்லை.

உங்களை விமர்சனம் செய்பவர்கள் உங்கள் தாயைப் போல உங்கள் முன்னேற்றத்துக்காகச் சொல்கிறார்களா? அல்லது உங்கள் மீது பொறாமை கொண்டு அவ்வாறு சொல்கிறார்களா? என்று யோசித்துப் பாருங்கள். பொறாமை கொண்டு அவ்வாறு சொல்கிறார்கள் என்றால் பிறரது விமர்சனங்களைச் சட்டை செய்யாதீர்கள். ஒருவேளை அந்த விமர்சனம் உங்கள் முன்னேற்றத்துக்கான வழிகளாக இருக்கும் நிலையில் நீங்கள் அவற்றை உங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

**ஒப்பீடு**

மற்றவர்களோடு தன்னை ஒப்பிட்டுப் பார்த்தால் தேவையில்லாமல் தாழ்வு மனப்பான்மை தோன்றும். இது உங்களுக்கு ஏற்கனவே தெரிந்த ஒன்றுதான்.

ஒருவரை மற்றவரோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த உலகில் பலரது தன்னம்பிக்கை சிதைக்கப்படுகிறது என்பது நாம் கண்கூடாகக் காணும் உண்மையாகும்.

ஆனால் உங்களைச் சுற்றியுள்ளவர்கள் அதைப்பற்றியெல்லாம் யோசிக்காமல் என்றேனும் உங்களைப் பிறரோடு ஒப்பிட்டுப் பேசிவிடலாம். அவ்வாறு ஒப்பிட்டுப் பேசுவது உங்களைக் குற்றம் சுமத்துவது போலவும் உங்களுக்குத் தோன்றலாம்.

பல பெற்றோர்கள் கூட, பிள்ளைகளின் மனோநிலை அறியாத நிலையில் தங்கள் குழந்தைகளை வேறு குழந்தைகளோடு ஒப்பிட்டு, குழந்தைகளின் தன்னம்பிக்கையைத் தகர்த்து விடுகிறார்கள்.

அம்மாதிரி வேளைகளில் நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

இவர்கள், இப்படி நம்மைப் பிறரோடு ஒப்பிட்டுப் பேசுகிறார்களே, நம்மைக் குற்றம் சுமத்துகிறார்களே, என்று நினைத்தபடி மனம் புழுங்கிக் கொண்டு இருந்தால் மன இறுக்கம்தான் வரும்.

ஒரு வயதான மூதாட்டியிடம் இரண்டு மண் பானைகள் இருந்தன. அவள் தினமும் அந்த மண்பானைகளை ஒரு கொம்பின் இரு முனைகளில் கட்டி, வெகுதூரம் நடந்து சென்று அங்குள்ள கிணற்றில் தண்ணீர் இறைத்துக் கொண்டு வருவாள்.

கிழவியிடமிருந்த இரண்டு பானைகளில் ஒன்று ஓட்டைப்பானை. கிழவி தண்ணீர் கொண்டுவரும்போது ஓட்டைப் பானையிலுள்ள துளையின் வழியே தண்ணீர் வழியெங்கும் சிந்திவிடும். அவள் வீடு வந்து சேர்வதற்குள் அந்த ஓட்டைப் பானையிலுள்ள முக்கால் பங்கு தண்ணீர் கீழே ஒழுகி, கால்பாகத்துக்கு மட்டுமே தண்ணீர் எஞ்சியிருக்கும்.

ஓட்டைப் பானையைப் பார்த்த நல்ல பானை தினமும் கேலி செய்யும். ''உன்னால் நம் எஜமானிக்கு எவ்வளவு துன்பம், பாவம் நம் எஜமானி ஒரே மாதிரித்தான் எம்மில் நீர் இறைக்கின்றாள். ஆனால் அவள் இறைத்து வைக்கும் தண்ணீர் முழுவதையும் நான் வீடு கொண்டு வந்து சேர்த்து விடுகிறேன். ஆனால் நீயோ வழியெல்லாம் தண்ணீரைச் சிந்திவிடுகிறாயே!'' என்று ஓட்டைப் பானையைக் கேலி செய்யும்.

(தொடரும்)

-ஷிவேந்த்ரா

# கல்வி அறிவு அற்ற சமுதாயம் இன அடையாளத்தை இழந்துவிடும்

### வலி.வடக்கு துணைத் தலைவர்

**அறிவியல் ரீதியான உலகமே சிறந்த மாணவ சமுதாயத்தைப் பெற்றுக் கொள்வதற்குத் துணையாக உள்ளது. இதனை மாணவ சமுதாயம் உணர வேண்டும். பாடசாலைக் காலத்தில் தமது கல்விச் செயற்பாடுகளைப் பூரணமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.**

மானிப்பாய், ஏப்.3

கல்வியறிவு அற்ற சமுதாயம் தனது இன அடையாளத்தை இழப்பதுடன் எமது பாரம்பரிய கலாசாரப் பெருமைகளையும் அழித்து விடும். எனவே இதற்கு மாணவ சமுதாயம்தான் கைகொடுக்க வேண்டும்.

பாடசாலை நாள்களில் கிடைக்கும் கல்வியைப் பூரணமாக சீரான முறையில் பெற்றுக்கொள்ள முன்வரவேண்டும் என வலி.வடக்குப் பிரதேச துணைத் தவிசாளர் ச.சஜீவன் தெரிவித்தார்.

வயாவிளான் சுதந்திரபுரம் கிராமப் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது: இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே சஜீவன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:

அறிவியல் ரீதியான உலகமே சிறந்த மாணவ சமுதாயத்தைப் பெற்றுக் கொள்வதற்குத் துணையாக உள்ளது.

இதனை மாணவ சமுதாயம் உணர வேண்டும். பாடசாலைக் காலத்தில் தமது கல்விச் செயற்பாடுகளைப் பூரணமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

கல்வியானது எமது கண்களைப் போன்றது. பார்வையில்லாமல் நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் போன்று கல்வியற்ற சமுதாயம் பெற்றுக் கொள்ள நேரிடும்.

இதனை விட கல்வியற்று நாம் ஒரு மந்தபுத்தி. கொண்டவர்களாக இருந்தால், அடிமைச் சிந்தனையுடன் சமுதாயத்தில் வெளிவருவதுடன் எமக்கான கலாசாரப் பண்பாடுகளையும் குழிதோண்டிப் புதைக்கிறோம்.

பாடசாலைக்காலம் என்பது ஒவ்வொரு மாணவனுக்கும் பொற்காலமாக உள்ளது. இதுவே அவர்களது எதிர்காலத்தைத் தீர்மானிப்பதாக அமைந்துவிடுகிறது.

இதனை மாணவர்கள் உணர்ந்து கல்விச் செயற்பாடுகளை தடையின்றிப் பெற்றுக் கொண்டு அறிவு சார்ந்த ஒரு சமுதாயத்துடன் தம்மை இணைத்துக் கொள்ள முயற்சி எடுக்க வேண்டும்.- என்றார். (எ-14)



யாழ்.இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழகத்தினரால் கலைமாலை என்னும் இசை நடன நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெற்றபோது. (எ-13)

## அபிவிருத்தி குழுக்கள் நியமனம்

யாழ்ப்பாணம், ஏப்.3

வலி.மேற்கில் சுழிபுரம் பிரதேச சபையின் பிரதேச அபிவிருத்தியையும், சூழல் மேம்பாடு மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தியையும் மேம்பாடு செய்ய நான்கு அபிவிருத்திக் குழுக்கள் நியமிக்கப்பட்டன.

இந்த அபிவிருத்தி செயற்பாட்டுக்கு நியமிக்கப்பட்ட குழுக்களும், அதன் தலைவர்களும் வருமாறு:

நிதி குழு- தலைவி திருமதி நா.ஐங்கரன், சமூக அபிவிருத்திக்குழு தலைவர் - க.கனகராசன், தொழில் நுட்ப மதிப்பீட்டுக்குழு - தலைவர் த.நடனேந்திரன் , சுற்றாடல் அபிவிருத்திக் குழு- தலைவர் ந.சிவரஞ்சன். (எ)

# பல விடயங்களைத் தொட்டவர்களே வாழ்வில் சந்தோஷமாக வாழ்கின்றனர்

**எங்களுக்குள்ளேயே எத்தனையோ ஆற்றல்கள் மறைந்து கிடக்கின்றன. அவற்றை வெளிக் கொணர வேண்டுமானால் நாம் பல துறைகளிலே ஈடுபட்டு முயற்சிக்க வேண்டும்.**

யாழ்ப்பாணம், ஏப்.3

உலகத்தில் மிகவும் சந்தோஷமாக இருப்பவர்கள் வாழ்க்கையின் பல விடயங்களைத் தொட்டுப் பார்த்தவர்கள்.

வாழ்க்கையிலே சோர்வுற்றும் விரக்தியுற்றும் காணப்படுபவர்கள் ஓரிரு விடயங்களில் தான் ஆர்வம் காட்டுகிறார்கள் என வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி உப அதிபர் வண. ஜி. நடராஜா தெரிவித்தார்.

ஒருதடவை எல்லாவற்றிலும் முயற்சி செய்யுங்கள் என்னும் தலைப்பில் வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி ஒட்லி மண்டபத்தில் உரையாற்றும்போதே நடராஜா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:

வாழ்க்கையிலே முற்றுமுழுதாக சோர்வுற்றும் - விரக்தியுற்றும் காணப்படுபவர்கள் ஒருசில விடயங்களில்தான் ஆர்வம் காட்டுகின்றார்கள்.

அந்தத் துறைக்கு ஆபத்து வந்தவுடன் சிறுமைப்பட்டு போய்விடுகிறார்கள்.

மோல்டன் மார்சன் என்ற தலைசிறந்த உளவியல் அறிஞன் கூறு கையில் ஒருவன் குழந்தை பிராயத்திலே எல்லா விடயத்தையும் தொட்டுப் பார்க்க வேண்டுமென்று விரும்புகின்றான்.

எனவே ஒருவன் அல்லது ஒருத்தி பல்வேறுதுறைகளிலேஆவல் கொண்டு உழைக்க வேண்டும்.

பல்வேறு கலைகளைப் பயின்று பார்க்க வேண்டும். ஒரு துறையிலே நாம் இறங்கினால் நாம் அதிலே எவ்வளவு ஆற்றல் படைத்திருக்கிறோம் என்பதை அறிய மாட்டோம்.

எங்களுக்குள்ளேயே எத்தனையோ ஆற்றல்கள் மறைந்து கிடக்கின்றன. அவற்றை வெளிக் கொணர வேண்டுமானால் நாம் பல துறைகளிலே ஈடுபட்டு முயற்சிக்க வேண்டும்.

இன்று க.பொ.த.உயர்தரப் பரீட்சை ஒன்று மட்டுமே மனிதனுடைய ஆளுமையை மதிப்பிடுவதாக விளங்குகின்றது.

க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்கு என்ன பாடங்கள் செய்தாய் அவற்றிலே என்ன சித்திகளைப் பெற்றாய் என்றுதான் நாம் கேட்டு ஒருவரை மதிப்பீடு செய்கின்றோம்.

ஆனால் மேலை நாடுகளில் எத்தனையோ பரீட்சைகள் ஊடாக வாலிப பிராயத்தின் திறமைகளை நிரூபித்துக் காட்ட முயல்கின்றனர்.

பல சமயங்களில் பெரும்படிப்பு படிப்பதற்கோ, பிரசித்தி பெற்ற பயிற்சியைப் பெறுவதற்கோ நமக்கு வசதியில்லை. பணமில்லை என்று கூறலாம். ஆனால் நம்மைச் சூழ எத்தனையோ வாய்ப்புக்கள் கோரிக் கையற்றுக் கிடக்கின்றன. வட்டு, யாழ்ப்பாணக் கல்லூரியிலேயே பல வாய்ப்புக்கள் ஆசிரியர்களால் வழங்கப்படுகின்றன. நாம் அவற்றையெல்லாம் சரியாகப் பயன்படுத்துகின்றோமா.- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## பிரிவைத் தடுக்க முடியாது

"ஏகாதிபத்தியவாதிகள் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இலங்கையைக் கைப்பற்ற முயற்சித்தனர். ஒல்லாந்தர், போர்த்துகேயர், ஆங்கிலேயர் என்று பலர் பலமுறை முயற்சிகளை மேற்கொண்ட போதும், அவர்களால் இலங்கையை ஒன்றும் செய்ய முடியவில்லை.

சில பிரதானிகள் அன்றைய அரசருக்கு எதிராகச் செயற்பட்டு ஆங்கிலேயரிடம் நாட்டைக் காட்டிக் கொடுத்ததால், அவர்களால் எம்மை ஆள முடிந்தது. ஏகாதிபத்தியவாதத்திற்கும் பிரிவினைவாதத்திற்கும் எதிராகவே இங்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்று கூடியுள்ளீர்கள்.

அரசசார்பற்ற நிறுவனம் என்று கூறிக் கொள்ளும் சில அமைப்புகளும், கனவுலகில் மிதக்கும் சில அரசியல் கட்சிகளும் நாட்டுக்கு எதிராகச் செயற்படுகின்றன. அவர்களுக்கு நான் கூறிக் கொள்ள விரும்புவது என்னவென்றால், நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன்னர் நீங்கள் உங்கள் கட்சியின் அதிகாரத்தைக் கைப்பற்றுங்கள், அதற்குப் பின் நாட்டைப் பற்றிச் சிந்திக்கலாம். இவர்களின் பொய்ப் பரப்புரைகளில் ஏமாந்து விடாமல், நாட்டின் பாதுகாப்புக்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டும்."

இவ்வாறு தெரிவித்திருப்பவர் இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. கண்டியில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் இதனைக் கூறினார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து நாட்டு மக்களுக்கு விளக்குவதற்காக அரசு ஏற்பாடு செய்துவரும் 'ஒன்றிணைந்த நாடு' என்ற கூட்டத்தொடரின் முதலாவது கூட்டம் அதுவாகும்.

ஐ.நா. தீர்மானம் பற்றிய ஜனாதிபதியினதும் அரசினதும் அதிகாரபூர்வ கருத்தாக இதனை எடுத்துக்கொள்ளலாம். அதாவது அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகள் இந்தத் தீர்மானத்தின் மூலமாக இலங்கையைக் கைப்பற்ற முயற்சிக்கின்றனர் என்பதே அரசு கொண்டுள்ள கருத்தாகும்.

இந்தக் கருத்துக்கு வருவதற்கு முன்னர், மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு ஒரு விடயத்தை மறந்து விட்டது. இலங்கை என்ற ஒரே நாட்டை உருவாக்கியவர்களும் அதனை ஆளும் உரிமையைச் சிங்களப் பௌத்தர்களிடம் கையளித்துச் சென்றவர்களும் மஹிந்த இன்று கூறும் ஏகாதிபத்தியவாதிகளே. அவர்களே சிறுகச் சிறுக இந்த நாட்டைக் கைப்பற்றி பின்னர் ஒன்றிணைத்தார்கள்.

அவர்களால் ஒன்றிணைக்கப்பட்ட நாடு பிளவுபட்டு விடக்கூடாது என்பதற்காகவே 'ஒன்றிணைந்த நாடு' என்ற கூட்டத் தொடரை அரசு இப்போது ஆரம்பித்துள்ளது. பேச்சில் உள்ள முரண்போலவே அரசின் செயல்களிலும் முரண்பாடுகள் காணப்படுகின்றன. இந்த அரசால் 'மனிதாபிமானப் போர்' என்ற கூப்பாட்டுடன் முன்னெடுக்கப்பட்ட போரே இன்று இரத்தகளரியான போர்க் குற்றங்களின் நிலைக்களன் என்று சர்வதேசத்தின் குற்றஞ்சாட்டுக்கு உள்ளாகியுள்ளன.

அதேபோன்றே, இந்த நாட்டில் இருந்து தமிழர்களை மேலும் அந்நியப்படுத்தி, பிளவுகளை ஆழமாக்கி, காயங்களை மேலும் ரணப்படுத்தி நாட்டை நிரந்தரமாகப் பிரிப்பதற்கான நவடிக்கைகளை 'ஒன்றிணைந்த நாடு' என்ற கூப்பாட்டுடன் அரசு முன்னெடுக்க ஆரம்பித்திருக்கிறது.


ஜெனிவாத் தீர்மானம் இலங்கை அரசுக்கு எதிரானதல்ல. இலங்கை மக்களுக்கும் எதிரானதல்ல. அது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்கக் கோருகிறது. நீதியை நிலைநாட்டக் கோருகிறது. அனைத்து மக்களுக்குமான அரசு என்ற பொறுப்பை ராஜபக்ஷவின் ஆட்சியும் ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

ஆனால், 'ஒன்றிணைந்த நாடு' என்று கூப்பாட்டுடன் அதனை எதிர்க்க ராஜபக்ஷ அரசு துணிந்திருப்பது, தமிழருக்கு நியாயம் வழங்க மாட்டேன், நீதியை நிலைநாட்ட மாட்டேன், தமிழ் மக்களுக்குமான ஆட்சியாளராக ஒருபோதும் பொறுப்புக்கூற மாட்டேன் என்று பிரகடனப்படுத்துவது போல் இருக்கிறது.

அப்படிப்பட்ட ஒரு நிலைப்பாட்டை தமிழ் மக்களுக்கு வெளிப்படுத்திக் கொண்டு மஹிந்த ராஜபக்ஷவால் இந்த நாட்டை எப்படி ஒன்றிணைத்து வைத்திருக்க முடியும்? இன்றில்லாவிட்டால் என்றாவது ஒருநாள் நாடு பிரிவதைத் தடுக்க முடியாது என்பதே உண்மை.

# கருணாநிதியிடமிருந்து ஈழத் தமிழருக்கு சொல் அல்ல செயல் மட்டுமே தேவை

■ புனிதவாதியான்



பிரபாகரனின் போராட்டம் சரியானதே. தமிழ் ஈழம்தான் எனது வாழ் நாள் இலட்சியம் - கனவு. அதை அடையும் வரை தொடர்ந்து போராடுவோம்: மு.கருணாநிதி

தமிழக அரசியலில் ஈழத் தமிழர் பிரச்சினை சுமார் 30 வருடங்களாக ஏற்றத் தாழ்வுகளுடன் எதிரொலித்து வருகிறது.

ஒரு காலத்தில் முழுத் தமிழகமும் ஈழத்தமிழர் போராட்டத்திற்கு வழங்கிய பங்களிப்பும் தியாகங்களும் அளப்பரியவை. சில கசப்புக்கள், சம்பவங்களால் இடைப்பட்ட காலத்தில் ஒரு விரிசல் விழுந்தது.

ஆனால், முள்ளிவாய்க்காலில் ஈழத் தமிழர்கள் சிக்கிக் கொண்டு, கொத்துக்கொத்தாக செத்து மடிந்த போது மீண்டும் அந்த தொப்புள்கொடி பாசம் தமிழகம் எங்கும் வீறுகொண்டது. போர்நிறுத்தத்தை வலியுறுத்தி, தமிழக உறவுகள் தங்கள் உயிரையே தீக்கு இரையாக்கி தியாகம் செய்தனர்.

அதேபோல், இம்முறை ஜெனிவா ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் அமெரிக்கா கொண்டு வந்த இலங்கை மீதான பிரேரணை வெற்றி பெற்றமைக்குத் தமிழகக் கட்சிகளும் தமிழக உறவுகளும் முக்கிய காரணமாக இருந்தன.

இலங்கைக்கு எதிரான பிரேரணையை இந்தியா ஆதரித்தே ஆக வேண்டும் என்று ஒரே பிடியில் தமிழகக் கட்சிகள் அனைத்தும் வரலாற்றிலேயே முதல் முறையாக ஒன்றிணைந்து குரல் கொடுத்தன - போர்க்கோலம் பூண்டன.

தமிழகத்திலுள்ள ஆளுங்கட்சியான அ.தி.மு.க., எதிர்க்கட்சியான தே.மு.தி.க. மற்றும் தி.மு.க., ம.தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள், இடதுசாரிகள், காங்கிரஸ் என தமிழகத்தில் உள்ள அத்தனை கட்சிகளும் கிளர்ந்தெழுந்தன. டில்லி நாடாளுமன்றத்திலும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்திப் பொங்கிஎழுந்தனர்.

இதையடுத்து, இறுதிவரை இலங்கைக்கு எதிரான பிரேரணையை ஆதரிப்பதில்லை என்ற முடிவில் இருந்த இந்தியா தனது முடிவை மாற்றியது. இந்தியாவின் முடிவை அடுத்தே நடுநிலை வகிக்கத் திட்டமிட்டிருந்த நாடுகளும் தீர்மானத்தை ஆதரித்தன. மேலும், இலங்கை அரசுக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்திருந்த சில நாடுகளின் முடிவிலும் மாற்றம் ஏற்பட்டது. இதனால், பிரேரணைக்கு ஆதரவாக 24 நாடுகளும், எதிராக 15 நாடுகளும் வாக்களித்தன. 8 நாடுகள் நடுநிலை வகித்தன. குறித்த பிரேரணை 9 மேலதிக வாக்குகளால் வெற்றிபெற்றது.

இந்தியாவின் முடிவில் தமிழகத்தின் காத்திரமான பங்களிப்பை எவரும் மறுக்கவும் முடியாது; மறக்கவும் கூடாது.

ஆனால் வேதனை என்னவெனில், ஈழத்தமிழர் பிரச்சினையை வைத்து தமிழகத்தில் அரசியல் பிழைப்பு நடத்துபவர்கள் வழமையான பாணியில் தமது கபட நாடகங்களை இந்த விடயத்திலும் அரங்கேற்றியதுதான்.

அதில் முக்கியமானவர் முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி. முள்ளிவாய்க்காலில் தமிழர்கள் செத்துக் கொண்டிருந்தபோது, அவர்தான் தமிழகத்தின் முதல்வர். மத்திய காங்கிரஸ் அரசிலும் அவர் மிகச் செல்வாக்குள்ள பங்காளியாக அப்போதும் இருந்தார்.

ஆனால், அப்போதெல்லாம் அவர் அடக்கியே வாசித்தார். மத்திய அரசுக்கு அழுத்தங்களைக் கொடுத்து போரை நிறுத்த [illegible] பதில், மத்திக்கு இடைஞ்சல் கொடுக்காத அரசியல் போராட்ட வடிவங்களின் ஊடாகவே அவர் ஈழப் பிரச்சினையை நகர்த்தினார்.

தமிழக முதல்வராக ஆட்சிப்பீடத்தில் இருந்தும் ஈழத் தமிழர்களைக் காப்பாற்றுவதற்கு கருணாநிதி மனப்பூர்வமான - உருப்படியான - ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. மாறாக ஈழத்தமிழர் படுகொலையை அரங்கேற்றி வந்த இலங்கைக்கு ஆயுதம், இராணுவ உதவிகளை அள்ளி வழங்கிய மன்மோகன் தலைமையிலான இந்தியக் காங்கிரஸ் அரசுக்குஅவர்தோள்கொடுத்து நின்றார்.

மூன்று மணி நேர உண்ணா விரதம், மனிதச் சங்கிலி, நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இராஜினாமாக் கடிதங்களை வாங்கி வைத்துக் கொண்டமை போன்ற நாடகங்களை கருணாநிதி மிகவும் கனகச்சிதமாக அரங்கேற்றினார்.

அப்படிப்பட்டவர் மீண்டும் ஜெனிவா விடயத்திலும் தனது நாடகங்களை அரங்கேற்றத் தவறவில்லை.

கருணாநிதியை மன்னிப்பார்களா?

ஜெனிவாவில் இலங்கை மீதான தீர்மானத்தை ஆதரிக்க மத்திய டில்லி அரசு முடிவு செய்து விட்டதை அங்கிருந்த தனது கட்சிக்காரர்கள் மூலம் தெரிந்துகொண்ட கருணாநிதி, வழக்கமான பாணியில் திடீரென, தீர்மானத்தை ஆதரிக்கக் கோரி பட்டினிப் போராட்டம் இருக்கப் போவதாக அறிவித்தார். அத்துடன், மத்திய அரசுக்கான ஆதரவை திரும்பப் பெறப் போவதாகவும் கட்சியின் உயர்மட்டக் குழு கூடி முடி வெடுக்கவுள்ளது எனவும் வெற்று வேட்டுக்களைத் தீர்த்தார்.

அவரது அறிவிப்பு வெளியான ஒரு நாளுக்குள் பிரதமர் மன்மோகன் சிங், ஜெனிவாத் தீர்மானத்தை ஆதரிக்கப் போவதான அறிவிப்பை விடுத்தார். பிறகென்ன கருணாநிதியின் பட்டினிப் போராட்டம் இந்த முறை ஆரம்பமாகாமலே முடிவுக்கு வந்தது.

இப்படிப்பட்டவரை உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள்.

"இப்படியெல்லாம் கூற இவருக்கு எப்படித்தான் மனம் வருகிறது என்று தெரியவில்லை. தொப்புள் கொடி உறவு கொண்ட ஈழத்தமிழ் மக்களிடமும் அரசியல் செய்கிறாரே" எனத் தமிழக மக்களே விசனிக்கின்றனர்.

தனது அரசியல் இருப்பைப் பாதுகாப்பதற்காக ஈழத் தமிழர் பிரச்சினையைப் பகடையாகப் பயன்படுத்தினாரே தவிர, தமிழர்களுக்கு எந்த நன்மையையும் அவர் செய்யவில்லை என்பதே உண்மை.

இந்த நிலையில்தான் தமிழீழம் தான் தனது ஒரே கனவு என்று கருணாநிதி தெரிவித்திருக்கிறார். "தமிழர்களுக்கென்று இலங்கையில் ஒரு தாயகம் வேண்டும். தனி ஈழத்துக்கான பிரபாகரனின் போராட்டம் தவறானது என்று சொல்லும் அளவுக்கு நான் முட்டாள் அல்லன். பிரபாகரனின் போராட்டம் சரியானதே. தமிழ் ஈழம் தான் எனது வாழ் நாள் இலட்சியம் - கனவு. அதை அடையும் வரை தொடர்ந்து போராடுவோம்" என்று அறைகூவல் விடுத்திருக்கிறார் அவர். அவரது இந்தக் கூற்றில் எவ்வளவு தூரம் உண்மை இருக்கிறது என்ற கேள்வி எல்லோரிடமும் இருக்கிறது.

உண்மையில் கருணாநிதி, ஈழத் தமிழருக்காக - அவர்களின் அவல வாழ்வுக்காக கண்ணீர் வடிப்பவராக இருந்தால், இந்திய அரசின் பொறுப்பற்ற தன்மையை அது உணர்ந்து கொள்ள ஏதாவது செய்திருக்க வேண்டும்.

ஈழத் தமிழருக்கு கருணாநிதியின் அனுதாபம் தேவையில்லை. அந்த அனுதாபம் அவர்களின் விடுதலை பசியைப் போக்காது. எனவே, அவரது ஆதரவு - உழைப்பையே எதிர்பார்க்கின்றனர்.

இவை எல்லாவற்றிக்கும் மேலாக செவிடான இந்திய அரசின் காதுகளில் கேட்கக் கூடியவாறு ஒருங்கிணைந்த போராட்டத்தை தனி ஈழத்துக்காக அவர் நடத்த வேண்டும். இவ்வாறான ஆக்கபூர்வமான காரியங்களில் ஈடுபடுவதை விடுத்து, நீலிக்கண்ணீர் வடிக்கக் கூடாது. அதுவே ஈழத் தமிழர்கள் அவரிடம் இருந்து எதிர்பார்ப்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர்களின் அறிவித்தல்கள்; அதிர்ந்துபோயுள்ளார் ஜனாதிபதி

**நேற்று 01.04.2012 ஞாயிற்றுக்கிழமை சண்டேரைம்ஸ் எழுதியிருந்த அரசியல் விமர்சனத்திலிருந்து ஒரு பகுதி**

தொகுப்பு: கோகுலன்

கடந்தவாரம் ஜெனிவாவில் ஏற்பட்ட பின்னடைவு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்குப் பெரும் கவலையை ஏற்படுத்தியிருந்தாலும் அவருடைய சில அமைச்சர்கள் வெளியிடும் சில கருத்துக்கள் அவருக்கு மேலும் அதிர்வுகளையே ஏற்படுத்துவதாக உள்ளன.

பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா ஏற்கனவே ஒரு குண்டைத் தூக்கிப் போட்டுள்ளார். அதாவது நாட்டைவிட்டு வெளியேறியுள்ள ஊடக செயற்பாட்டாளர் ஒருவரின் காலை உடைத்தமைக்கு தாமே பொறுப்பு என்று அவர் அறிவித்துள்ளார். இது பற்றி விசாரணை நடத்தவிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். பிரச்சினை என்னவென்றால் இந்த விசாரணைகள் ஒருபோதும் முடிவடைவதில்லை. அமைச்சர் வெளியிட்ட தகவல் ஜனாதிபதியை மிகுந்த கோபம் கொள்ளச் செய்துள்ளது. மேர்வின் சில்வாவுக்கு தாம் என்ன செய்வார் என்று ஜனாதிபதி தமது நண்பர்களிடம் கடந்த வாரம் கூறியவை அச்சில் பொறிக்கப்பட முடியாதவை.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன மூன்று பேர் கொண்ட குடும்பம் ஒன்று மாதம் ரூ.7500 வருமானத்தில் சௌகரியமாக வாழ்க்கை நடத்தலாம் என்பதாக, புதுவித கணிதக் கணிப்பொன்றை வெளியிட்டு அதிர்ச்சி கொடுத்திருக்கிறார். மாணவர்கள் தமது மாதாந்த உணவுக்காக 2,500 ரூபாவைச் செலவழிக்கும் ஹோட்டல் ஒன்றின் கணக்கை வைத்து இந்தக் கணிப்பீட்டுக்கு வந்துள்ளார் அமைச்சர்.

இதனை எவ்வாறு கணக்கிட்டீர்கள் என்று ஜனாதிபதி அமைச்சரிடம் வினாவியுள்ளார். இதை அந்த மாணவர்களிடமிருந்தே தாம் அறிந்ததாகவும் மாணவர்களின் மாதாந்த உணவுச் சிட்டையையே தாம் குறிப்பிட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தபோது, ஹோட்டல் நடத்த யார் உதவுகிறார்கள், எரிபொருளுக்கு யார் பணம் கொடுப்பது என்ற சாதாரணமாக எழும் கேள்விகளையும் ஜனாதிபதி எழுப்பியுள்ளார். 'அரசாங்கம்' என்பதாகவே அமைச்சர் பதிலளித்துள்ளார்.

கால்நடைகள் அபிவிருத்தி அமைச்சர், ஆறுமுகம் தொண்டமான் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்காவுக்கு அனுப்பிய ஒரு கடிதத்தில் ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு முகம் கொடுத்திருக்கும் மில்கோ சந்தைப்படுத்தும் நிறுவன முகாமையாளர், மீண்டும் அரசினால் பதவியில் அமர்த்தப்பட்டுள்ளமையால் தாம் ராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார். சந்தைப்படுத்தும் நிறுவன முகாமையாளர் தாம் மீண்டும் பதவியில் அமர்த்தப்படுவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தனவின் உதவியை நாடினார் என்பது தெரிய வந்துள்ளது.

தொண்டமானின் ராஜினாமா குறித்து வீரதுங்கவோ, வேறு எவருமோ பிரதிபலிப்பு எதையும் வெளியிடத் தேவையில்லை என்பது ஜனாதிபதியின் விருப்பமாக இருந்துள்ளது. ஜனாதிபதியின் பத்திரிகை துறை செயலாளர் கூறிய ஒரே ஒரு இரட்டைப் பொருள் கொள்ளும் கருத்து "அவர் பதவி விலகியுள்ளது இது தான் முதல் தடவையென்றில்லை" என்பதாகும்.

முன்னொருதடவை ஆறுமுகம் தொண்டமான் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு மது அருந்திய நிலையில் வந்தார் என்றும் அங்கு அவர் அதிகாரிகளால் மரியாதையாகக் கவனிக்கப் படாமையால் பதவி விலகப் போவதாக அறிவித்தார் என்றும் ஜனாதிபதி மாளிகை அலுவலர்கள் நினைவு கூர்ந்தார்கள். எதிர்பார்க்கப்பட்டது போல் தொண்டமான் ஜனாதிபதியை சந்தித்தார். பின் தன் வீட்டுக்குச் சென்றார். அங்கிருந்து இந்தியாவுக்கு பறந்துவிட்டார் அடுத்த நாளில்.

அதன்பிறகு வந்தது வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் அறிக்கை, அந்த முழு வாரமும் ஜெனிவாவில் ஏற்பட்ட தோல்விக்கு ஒன்றன் பின் ஒன்றாக நாடாளுமன்றத்துக்கு வெளியில் பல்வேறு சமாதானங்களைக் கூறிக் கொண்டிருந்தவர் பீரிஸ். அவர் விடுத்த அறிக்கையில், அமெரிக்க வெளியுறவுக் குழுவின் தலைவர் இலினா றொஸ் லெஹ்ரினென் அம்மையார் ஜெனிவாவிலுள்ள மனித உரிமைகள் சபையை "திருடர்களின் மேடை" என்று வர்ணித்திருந்ததைச் சுட்டிக்காட்டியிருந்தார்.

மனித உரிமைகள் பேரவையில் இஸ்ரேலின் யூதக் குடியேற்றங்கள் தொடர்பாக கண்டித்து ஐந்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதையடுத்து அம்மையார் இந்தக் கருத்தை வெளியிட்டிருந்தார். அந்த சபைக்கான தேர்தலை மீண்டும் நடத்துவதற்குப் பதிலாக, அந்தத் திருடர்கள் மேடையை விடுத்து வேறு நம்பகமான சபையை மனித உரிமைகளுக்காக அமெரிக்கா நாடிச் செல்ல வேண்டும் என்று அவர் தெரிவித்திருந்தார்.

இது இரட்டை நிலைப்பாட்டைக் காட்டுவதாக பீரிஸ் கூறினார். அரசியல் மற்றும் விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்ப சில நாடுகள் தமது நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன என்றார் அமைச்சர்.

ஆனால் அமெ. காங்கிரஸ் பிரதிநிதியான றொஸ் லெஹ்ரினென் அம்மையாரின் கருத்து அமெரிக்க அரசின் கருத்து அல்ல, முதலில் அவர் குடியரசுக்கட்சியைச் சேர்ந்தவர். அதனால் எதிர்க்கட்சி காங்கிரஸ் உறுப்பினர். கியூபா வம்சாவளியினரான இவரது குடும்பம் புளோரிடாவில் வசித்து வருகின்றது.

அங்குள்ள யூத மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றவர் இவர். பி.பி.ஸி. ஒலிபரப்பு ஒன்றின் போது பிடல் காஸ்ட்ரோ சுட்டுத் தள்ளப்பட வேண்டியவர் என்று கூறி பரபரப்பேற்படுத்தியவர்.

அமைச்சர் பீரிஸின் அமெரிக்க பயணம் மே மாதம் இடம் பெறவிருக்கிறது. ஏப்ரலில் வருமாறு அமெரிக்கா விடுத்திருந்த அழைப்பு, அவர் தென்கொரியாவுக்கு ஜனாதிபதியுடன் செல்லவிருப்பதால் இப்பொழுது பின்போடப்பட்டிருக்கிறது. ஜெனிவா மனித சபையில் தீர்மானம் எடுக்கப்படுவதற்கு முன்னர் பீரிஸ் அமெரிக்காவுக்கு வர வேண்டும் என்று ஹிலாரி கிளின்ரன் அம்மையார் எதிர்பார்த்தார்.

ஆனால் பீரிஸ் போகவில்லை. அதற்கான காரணத்தைக் கடந்த வாரம் அவர் கூறியிருந்தார். அவர் போயிருந்தால் தீர்மானம் கொண்டு வரப்படுவதற்கு இலங்கை சம்மதிக்கிறது என்ற தவறான கருத்து ஏற்பட்டிருக்கும் என்றார் அவர்.

தான் சென்றிருந்தால் அந்தத் தீர்மானம் இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் ஒரு இணக்கப்பாட்டின் அடிப்படையில் கொண்டுவரப்படுகிறது என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தியிருக்கும் என்று பீரிஸ் கூறினார். பெருத்த தப்பபிப்பிராயம் ஒன்று தோன்றியிருக்கும் என்றார்.

> " வெளிநாட்டில் இப்போதுள்ள ஊடக வியலாளரின் காலை உடைத்தவர் தானே என்று ஒப்புக் கொண்டுள்ளார் அமைச்சர் மேர்வின் சில்வா. "

பீரிஸுக்கு தீர்மானத்தைக் கொண்டுவரப் படுவதிலிருந்து தவிர்க்க முடியும் என்ற நம்பிக்கை இருந்திருக்க வேண்டும் என்றே எவரும் எதிர்பார்ப்பார்கள். அவர் தான் தமது அமைச்சரவை சகாக்களிடம் , அமெரிக்கா தீர்மானம், கொண்டு வருவதாகக் கூறுவது வெறும் நெருக்குதல் தந்திரம், எதுவானாலும் அவர்கள் தீர்மானத்தைக் கொண்டுவரமாட்டார்கள் என்று கூறியவர்.

மேலும் அவர் மேற்கொள்ளவிருக்கும் பயணம் மிகவும் எதிர்பார்க்கப்படும் ஒரு நிகழ்ச்சியாக இருக்கப் போகிறது. நாடு இன்று மிகுந்த பொருளாதார இக்கட்டில் இருப்பது இதற்குக் காரணம்.

மனித உரிமைகள் பேரவை மாநாடில் கலந்து கொள்ள இலங்கையில் இருந்து சென்ற குழுவில் 50 பேருக்கு மேல் இருந்தார்கள். ஜி.எல். பீரிஸ், மகிந்த சமரசிங்க, ரவூப் ஹக்கீம், றிச்சார்ட் பதியுதீன், நிமால் சிறி பாலடி சில்வா, அனுரா பிரிய தர்சன யாப்பா, டக்ளஸ் தேவானந்தா ஆகிய ஏழு அமைச்சர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு உதவியாக இரு பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற மற்றும் ஜனாதிபதி ஆலோசகர்கள் கலந்து கொண்டனர். இவர்களுக்குப் பின்புலத்தில் கியூபா, சீனா மற்றும் இந்தியா இருந்துள்ளன. கியூபா தீர்மானத்தைக் கடுமையாக எதிர்த்து நின்றது. சீனா தனது ராஜதந்திரத்தைப் பிரயோகித்தது வளரும் நாடுகள் இலங்கையை ஆதரிக்கச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டது. இந்தியா தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தாலும் தீர்மானத்தில் கடைசிநேர மாற்றங்களைச் செய்து அதன் இறுக்கத்தை இலகுவாக்க உதவியது.

இறுதியாக நிலைமைகளை அலசிப் பார்க்கையில், ஒரு நாட்டின் மனித உரிமைகளின் செயற்பாடுகளோ, தீர்மானத்தைக் கொண்டுவந்த நாட்டின் செயற்பாடுகளோ அல்ல சீர்தூக்கிப் பார்க்கப்படுபவை சர்வதேச அரசியலில் ஒரு நாடு கொண்டிருக்கும் அதிகாரப் பிரயோகம் தான் விடயங்களை முடிவெடுக்கின்றது என்பதேயாகும்.

இலங்கைக்கு எதிராக கச்சைக்கட்டிக் கொண்டு நின்ற நாடுகளின் சார்பில் அரச சார்பற்ற நிறுவனங்கள் பலவும் மகாநாட்டையொட்டி நடைபெற்ற பக்க நிகழ்வுகளில் கலந்து கொண்டு செயல்பட்டன.

மனிதாபிமான சட்டங்கள் தொடர்பான நிறுவனம் கருத்துவெளியிடுகையில், 1949 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் பெரும்பான்மையினத்தவர்களால் சமூக, கலாசார மற்றும் சமய மட்டங்களில் தமிழ் இனத்தவர்கள் கொடுமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று சுட்டிக் காட்டியது. ஐ.நாவின் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கையின் பிரகாரம் சர்வதேச சமூகம் இலங்கையின் தமிழ்ப் பொது மக்களைக் காப்பாற்ற முடியாமல் போயுள்ளது என்றும் அது சுட்டிக்காட்டியது.

முன்னதாக சர்வதேச மன்னிப்பு சபை கருத்து வெளியிட்டபோது, இலங்கை அரசானது கடும் குற்றங்களைப் புரிந்து விட்டுத் தாம் பாதிக்கப்பட்டு விட்டது போல் பாசாங்கு செய்கிறது. இது ஒரு குழந்தையானது தன் பெற்றோர்களை கொன்றுவிட்டுதான் பெற்றார் இல்லாத அனாதையாகி விட்டதாகக் கூறி பாதுகாப்பு கேட்பது போலிருக்கிறது என்று கூறியது.

அரச சார்பற்ற நிறுவனங்களின் தாக்குதல்கள், மற்றும் அறிக்கைகள் மட்டுமின்றி சனல் 4 காணொளி காட்சிகளும் இலங்கையின் எதிர் செயற்பாடுகளை கடுமையாகப் பாதித்திருந்தன.

போரின் இறுதிக்கட்டங்களில் இலங்கைக்குழுவினர் பாதுகாப்புப் படைகளின் நடவடிக்கைகளை தற்காத்து செயற்படுவது மட்டுமன்றி போருக்குப் பின்னரான காலங்களில் நடந்துள்ள புதிய விடயங்கள் குறித்தும் எதிர்த்தரப்பினருக்குப் பதில் கூறி தற்காக்க வேண்டியநிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர்.

வடக்கில் பொது மக்கள் வதிவிடங்களில் ராணுவம் ஆக்கிரமிப்பது மற்றும் பெண்கள் வன்புணரப்படுவது மட்டுமல்ல ஆள் கடத்தல்கள், காணாமல் போகச் செய்தல் போன்ற குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டன.

இவ்வாறு எதிர்த்தரப்பினர் இலங்கையைச் சாடுவதற்கான ஆயுதங்களை இலங்கையே வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அப்படி ஒன்று தான் அரசு நடத்தும் ஊடகம் ஒன்றில், கொழும்பில் வதியும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் தாக்கப்பட்ட சம்பவம். அரசு நடத்தும் பத்திரிகையொன்றில் வெளியான செய்தியின் துண்டு பிரதி இதற்கு சான்றாக முன்வைக்கப்பட்டு இதில் செயற்பாட்டாளர்கள் துரோகிகள் என்று குறிக்கப்பட்டிருந்தமையும் இலங்கையின் போர் முடிந்து மூன்றாண்டுகள் ஆகியும் குற்ற வாளிகள் பாதுகாக்கப்படும் நிலைமை இன்னமும் நடைமுறையில் இருப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது.

மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை விடுத்த அறிக்கையிலும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் தாக்கப்பட்ட விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது.

அரசு சாரா சமூகத்தினர் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு மாநாட்டில் பங்கு பற்றியவர்களின் மனங்களைக் கவர்ந்தனர். இலங்கை தொடர்பான பக்க நிகழ்வுகள் ஆரம்பித்தபோது தலைமை வகித்தவர், தயவு செய்து புகைப்படம் எடுக்காதீர்கள் பங்குபற்றுநர்கள் இலங்கையில் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வார்கள் என்ற அறிவித்தலுடன் ஆரம்பித்தார்.

பாக்கியசோதி சரவணமுத்து (மாற்றுக்கொள் கைகளுக்கான நிலையம்) சுனில் அபேசேகர (பெண்களின் உரிமைகளுக்கான உலக நிறுவனம்) நிமால்கா பெர்னாண்டோ (சகல விதமான பாகுபாடுகள் இன மத குரோதங்களுக்கு எதிரான சர்வதேச நிறுவனத்தின் தலைவர்), பராமிஹ்லர் (சிறுபான்மை உரிமைக்குழு) சந்தியா எக்கலியகொட (காணாமல் போன ஊடகவியலாளர் எக்கலிய கொடவின் மனைவி) ஆகியோர் தமது உயிர்களுக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாக அறிவித்துள்ளனர்.

இலங்கையின் மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்துவதற்காக இவர்கள் ஜெனிவாவுக்கு வந்திருந்தனர். தீர்மானத்துக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ இவர்கள் ஆதரவு தேடினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்விகள் சாவிகள்!

வாழ்க்கை என்பது ஒரு சூதாட்டம் என்றே பலர் கருதுகின்றார்கள். இதன் வெற்றி, தோல்விகள் அதிர்ஷ்டத்தின் மூலமாகவே நிர்ணயிக்கப்படுகின்றன என்று நிறையப் பேர் நினைக்கிறார்கள். வாழ்க்கையின் வெற்றி, தோல்விகள் தேர்தல் முடிவுகள் போல் குழப்பமானவையல்ல. தேர்வின் முடிவுபோல் தீர்க்கமானவை.

வாழ்க்கையில் வெற்றி பெற நினைப்பவர்களுக்கு என் நல் வாழ்த்துக்கள். உங்களுக்கு நன்மை உண்டாகட்டும். உங்களால் வீடும் நாடும் விரிந்த உலகமும் நன்மை பெறட்டும். வெற்றிக்கு வழி என்ன? வெற்றி உலகின் மொழி என்ன? சொல்கிறேன்.

என்னிடத்தில் உதவிகள் கேட்டு சில இளைஞர்கள் வருவதுண்டு. அவர்களில் அதிகமான பேர் வேலை வாங்கித் தரும்படிதான் கேட்பார்கள். என்ன வேலை என்று கேட்பேன். ஏதாவது ஒரு வேலை என்பார்கள் வருத்தப்படாதீர்கள். இவர்கள் வெற்றி பெறுவது கடினம். என்ன வேலை என்கிற தெளிவு இல்லாமல் ஏதாவது ஒருவேலை என்றால் நான் அவருக்கு எந்த வேலைக்கு முயற்சி செய்வது? என்னுடைய வேலையைத்தான் அவருக்குத் தரமுடியும்! அவரால் செய்யமுடியும்?

இது மிக முக்கியமான விஷயம். எதை அடைய வேண்டும் என்கின்ற தெளிவு உங்களுக்கு இருந்தால் தான் அதை நீங்கள் அடைய முடியும்? நமக்கு எது வேண்டும் என்கின்ற தெளிவு இருந்தால்தான் அது கிடைக்கும் கிடைத்தாலும் ருசிக்கும் இல்லையென்றால் கிடைக்காது கிடைத்தாலும் ருசிக்காது. காரணம் கிடைத்ததே தெரியாது.

ஹோட்டலில்கூட பல பேர் என்ன சாப்பிடுவது என்ற தெளிவின்றி மெனுகார்டை, பட்சணம் பட்டியலை வெற்றித்து வெறித்துப் பார்ப்பார்கள். எதையும் முடிவு செய்ய மாட்டார்கள. இந்தப் குழப்பவாதிகள் முறையாக வெற்றிக் கனியைப் பறிப்பது கடினம். எனவே, வாழ்க்கையில் உங்களுக்கு என்ன வேண்டும் என்கிற தெளிவு கண்டிப்பாக இருக்க வேண்டும்.

இப்போது நாம் இருக்கும் நிலை என்ன? இனி அடைய வேண்டிய நிலை என்ன? அதற்கு நாம் செய்ய வேண்டிய முயற்சிகள் எவை? என்கின்ற விழிப்பு நம்முன் தோன்றி விட்டால் நமக்கு வெற்றி நிச்சயம். எங்கே இருக்கிறோம்? எங்கே போக வேண்டும்? எப்படிப் போகப் போகிறோம்? என்கிற தெளிவு பிறந்து விட்டால் வெற்றி நிச்சயம்.

அமெரிக்க ஜனாதிபதியாகப் புகழுடன் விளங்கியவர் ஜான் எ.ப் கென்னடி. அவர் வெள்ளை மாளிகையில் தம்மைக் காண வந்திருக்கும் பார்வையாளர்களுடன் நாள்தோறும் சில நிமிடங்கள் செலவிடுவார். தம்மைப் பார்க்க வந்திருந்த இளைஞர்கள், பள்ளி மாணவர்களுடன் சிறிது நேரம் பேசுவார்.

பார்வையளர்களில் பளிச்சென்ற புன்னகையுடன் இருந்த மாணவன் கன்னத்தை தட்டி உன் எதிர்கால லட்சியம் என்ன என்றார் கென்னடி. பளீர்ரென்று இன்று நீங்கள் இருக்கும் இடத்தில் நாளை நான் இருக்க வேண்டும். இதுதான் என் லட்சியம் என்றான் அந்தச் சிறுவன். விழிகளை உயத்திவிட்டு குட் என்று வாழ்த்திவிட்டு கென்னடி நகர்ந்தார்.

அமெரிக்க ஜனாதிபதியாக ஆவதுதான் லட்சியம் என்ற அந்தச் சிறுவன் பிற்காலத்தில் அப்படியே ஆனான். அவன் வேறு யாருமல்ல.... புகழ் பெற்ற பில்கிளிண்டன். அவர் எண்ணம் வெறும் ஆசையோ, கற்பனையோ அல்ல. தீர்க்கமான தீர்மானம். அதனால் அது நடந்து விட்டது. எல்லாருக்கும் இப்படித்தான். ''என்னை ஏளனமாகப் பார்க்கும் மூடர்களுக்கு ஒன்று சொல்கிறேன். நம்பிக்கைகள் நடக்காமல் போகும் பட்டியலில் நம் பெயர் ஏன் இருக்க வேண்டும்? பலித்தவர் பட்டியலில் நம் பெயர் இருக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்க கூடாதா? மனம் இருந்தால் மார்க்கம் உண்டு''.

இந்த இளைஞனைப் பற்றிச் சொன்னேன். நான் சந்தித்த வேறு இளைஞனைப் பற்றிச் சொல்லவா? செழிப்பாக வளர்ந்திருந்தான் அந்த இளைஞன். ஒரு கூட்டத்தில் என்னிடத்தில் சம்மந்தமில்லாமல் அபத்தமாகக் கேள்விகள் கேட்டான். பொறுமையாக தம்பி... என்ன செய்கிறீர்கள்? என்று நான் கேட்டேன். அப்பாவுக்கு உதவி ஒத்தாசையாக இருக்கிறேன் என்றான். இந்த நூற்றாண்டில் இப்படி ஓர் இளைஞன் இருக்கிறான் என்ற இன்ப அதிர்சியுடன் அப்பா என்ன செய்கிறார் என்றேன் வீட்டில் சும்மா இருக்கார் என்று வெடிகுண்டு வீசினான் அந்த இளைஞன். தான் காலத்தை வீணாக்குகிறேன் என்ற குற்ற உணர்வே இல்லாதவன் எப்படி முன்னேற முடியும்?

இப்போது நாம் இருக்கும் நிலை என்ன? நம் குடும்பத்தின் நிலை என்ன? நாம் வளர, முன்னேற என்ன செய்யலாம் என்கின்ற சின்னச் சின்னக் கேள்விகள் உங்களுக்குள் பிறந்து விட்டால் கொஞ்சம் கொஞ்சமாக விடைகள் கிடைக்கத் தொடங்கும். ஒன்றை மறந்து விடாதீர்கள்.

எவ்வளவு பெரிய கதவுக்கும் தாழ்ப்பாள் சின்னது தான். பூட்டு அதைவிட சின்னது. சாவியோ ... பூட்டை விடச் சின்னது, சின்னச் சாவியால் பூட்டைத்திறக்கலாம், பூட்டைத்திறந்தால் தாழ்ப்பாளைத்திறக்கலாம் தாழ்ப்பாளைத் திறந்தால் பெரிய பெரிய கதவுகளையே சுலபமாகத் திறக்கலாம்.



எனவே சின்னச் சின்னக் கேள்விகள், பெரிய பெரிய கோட்டை வாயில்களைத் திறக்க போகும் சாவிகள். உங்களை நீங்களே கேள்வி கேளுங்கள். அந்தக் கேள்விகள் பெரிய பெரிய கோட்டைகளின் பூட்டுக்களை திறக்கும் சாவிகள். இதை நீங்கள் உணர்ந்தால் வெற்றி நிச்சயம்.

சுகி.சிவம்

# இந்துப் பண்பாட்டை எடுத்தியம்பும் யாழ். இந்து மகளிர் கல்லூரி




லக்ஸ்மன்

(கடந்த வாரத் தொடர்ச்சி)

விளையாட்டுத் துறையை பொறுத்தவரையில் உள்ளக விளையாட்டில் அதாவது சதுரங்கம், கரம், மேசைப் பந்து போட்டிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவர்களால் சாதனை நிலை நாட்டப்படுகின்றது. பதினைந்து வயதுப் பிரிவுக்கான நூறு மீற்றர் ஓட்டம், முப்பாய்ச்சல், பத்தொன்பது வயதுக்கான நூறுமீற்றர் தடை தாண்டல், உயரம் பாய்தல் போன்றவற்றில் தேசிய மட்டத்தில் கலந்து கொண்டு கல்லூரிக்குப் பெருமை சேர்த்த மாணவிகள் உள்ளனர். மாகாண மட்டத்தில் இடம்பெற்ற அகில இலங்கை சிறுவர் சித்திரப் போட்டி, சர்வதேச ஒலிம்பிக்விழா, போதைப்பொருள் தடுப்பு, ஆக்கத்திறன், சர்வதேச அஞ்சல் தினம், புற்றுநோய்க் கருத்தோவியம் போன்ற பல்வேறு போட்டிகளில் மாணவிகள் சான்றிதழ்களையும் பணப்பரிசில்களையும் தட்டிக்கொண்டுள்ளனர்.

முறை சார்ந்த, முறை சாராக் கல்வி ஆசிரியர்களுக்கான தொழில் வாண்மைப் பயிற்சி நெறிகள் போன்றவற்றை வழங்கக்கூடிய வசதிகள் மிக்க கல்லூரியாக சமூகப் பொருத்தப்பாடுடைய நல்ல பிரஜைகளை உருவாக்கும் பாடசாலையின் நோக்கத்தை அடையக்கூடிய கல்வி, விளையாட்டு, இணைப்பாடவிதானங்களுக்கான செயற்பாடுகள் உரிய முறையில் முன்னெடுக்கப்படுகின்றன.

முதல்தர கல்லூரி என்பதால் அதிபர், ஆசிரியர்களின் முயற்சியாலும் ஊக்கத்தாலும் மக்கள் மத்தியில் யாழ். இந்து மகளிர் கல்லூரிக்குத் தனி மதிப்புக் கிடைத்தாலும் கட்டடங்களைப் பொறுத்தவரை அறுபத்தி ஐந்து ஆண்டு பழைமை வாய்ந்தவையாகவே இன்னமும் உள்ளன. வகுப்பறைகள் உரிய முறையில் அமைக்கப்பட்டதாக இல்லை. ஆசிரியர் பற்றாக்குறையும் உண்டு. புதிய கட்டடங்கள் அமைவது அவசியம். ஆண்டுதோறும் கணிசமான மாணவிகள் இணைந்து கொள்வதால் பாடசாலையின் வளங்கள் அவ்வப்போது கவனத்தில் எடுக்கப்படல் வேண்டும்.

**1995 ஆம் ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்வு மாணவர்களைப் பாதிக்காத வகையில் கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதால் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் ஒரு பகுதி யாழ். இந்து மகளிர் கல்லூரியாகச் செயற்பட்டது.**

பாடசாலையின் வளர்ச்சியில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயற்பாடுகள் நல்ல முறையில் அமைகிறது. எந்த ஒரு விடயத்தையும் அதிபர் திருமதி பேரம்பலத்தின் கவனத்தில் விட்டு அவர்களது ஒத்துழைப்புடனேயே முன்னெடுத்து வருகின்றனர். கனடா, ஆஸ்திரேலியா ஆகிய இடங்களைச் சேர்ந்த பழைய மாணவிகளதும் பெற்றோர்களதும் கல்விப் பகுதியினரதும் ஒத்துழைப்புடன் பௌதிக வளங்கள் ஓரளவு கிடைத்து வருகின்றன.

இங்கு கல்வி கற்றுள்ள பல மாணவிகள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சிறந்த நிலையில் வாழ்வது கல்லூரியின் உயர்வான பணியைப் பறைசாற்றுகின்றது.

1995 ஆம் ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்வு மாணவர்களைப் பாதிக்காத வகையில் கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதால் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் ஒரு பகுதி யாழ். இந்து மகளிர் கல்லூரியாகச் செயற்பட்டது.

அப்போது அதிபராகக் கடமையாற்றியவர் திருமதி சரஸ்வதி ஜெயராசா. 1996 ஆம் ஆண்டு மீள யாழ். நகர் திரும்பியபோது கட்டடங்கள் சேதமுற்று முக்கிய ஆவணங்கள் சிதைவுற்றுக் காணப்பட்டன.

எனினும் அவற்றையெல்லாம் மீளப்பெற்று கல்லூரியின் வளர்ச்சிக்காக அவர் உன்னத சேவையை வழங்கியிருந்தார். பொது விஞ்ஞான கூடம் நூல் நிலையம், கணினி அறை என்பன புதிதாகக் கட்டி முடிக்கப்பட்டன. 1998 ஆம் ஆண்டு ஆலயத்தின் விநாயகர் ஆலயமும் புனரமைக்கப்பட்டதுடன் கும்பாபிஷேகமும் இடம்பெற்றது கல்லூரி வளாகத்தில் உள்ள இந்தக் கோயிலின் மூலஸ்தான விளக்கு கல்லூரியின் ஸ்தாபகரின் பெயரைத் தாங்கியவாறு இன்றும் உள்ளது.

அதிபர் திருமதி ஜெயராஜா இந்து மகளிர் கல்லூரியின் இன்றைய வளர்ச்சியில் முக்கியத்துவம் பெற்ற அதிபராகக் காணப்படுகின்றார். இவரது காலத்தில் பாடசாலைக்கான வளங்கள் தாராளமாகப் பெறப்பட்டுள்ளன.

இந்த கல்லூரியின் வளர்ச்சியில் தம்மை இணைத்துக் கொண்டவர்களில் முன்னாள் சபாநாயகர் சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி, சட்டத்தரணிகளான ஆர். ஆர். நல்லையா, ரி.முத்து சுவாமிப்பிள்ளை, ஆர்.சிவகுருநாதன், அ.அருளம்பலம், சி. அருளம்பலம் மற்றும் இராச முதலியார், வி. பொன்னம்பலம், எஸ்.ராஜரட்ணம் ஞ.தனபாலசிங்கம் ஆகியோர் முக்கிய இடத்தில் உள்ளனர்.

இந்துப் பண்பாட்டின் சின்னமாக யாழ். நகருக்கு பெருமை சேர்த்துக் கொண்டிருப்பதே கல்லூரியின் உயர்வுக்கான அத்தாட்சி. அது முன்னெடுக்கும் சாதனைகள் யாழ். மக்களுக்குத் திருப்தி தருவதாக அமைகின்றது.

தனது தூர நோக்கான கல்வி படைப்பாற்றல் உடல் உள ஆன்மிக மேம்பாட்டினூடாக எதிர்கால சாவல்களை எதிர்கொள்ளத்தக்க ஆளுமை மிக்க மகளிரை உருவாக்கும் உன்னத இடமாக கல்லூரி மிளிர வேண்டும் என்ற மகுட வாசகத்துக்கு அமைய அனைத்துத் துறைகளிலும் ஆளுமை கொண்ட மகளிரை உருவாக்கக்கூடிய செயற்பாடுகளை நோக்கி பாடசாலையை நகர்த்திச் செல்வதில் அதிபர், ஆசிரியர்கள் கரம் கோர்த்துள்ளனர்.

ஆண்டுதோறும் அதிகரித்துவரும் மாணவர்களின் தொகைக்கேற்ப கட்டடம், தள்பாடங்கள் அதிகரிக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கல்லூரிக்கென போதிய நிலம் இருக்கின்றது.

சாவல்களுக்கு முகம்கொடுத்து மாணவர்களின் எதிர்கால நலன்கருதி பாடசாலையை வழி நடத்திச் செல்லும் ஆளுமைமிக்க அதிபரான. திருமதி பேரின்பநாதன் ''நான் இங்கு வாழ்கிறேன். இது அழகாக இருக்க வேண்டும்'' என்ற குறிப்பின் மூலம் வாழ்வின் மகத்துவம் எது என்பதை மாணவிகளுக்குத் தெரிவித்துள்ளார். பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட அனைவரதும் அர்ப்பணிப்பில் கல்விக்கான பெரு விருட்சமாக வளர்ந்து கொண்டிருக்கிறது யாழ். இந்து மகளிர் கல்லூரி.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின் பாவனையாளர்களுக்கு சலுகைக் கட்டணம் அறிவிப்பு

### அறிமுகமாகிறது புதிய திட்டம்

கொழும்பு,ஏப்.3

''நாளைய தினத்துக்காக இன்று மின்சக்தியைப் பாது காப்போம்'' என்ற மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் திட்டத்துக்கு சமனான புதிய திட்டம் ஒன்று மின் பாவனையாளர்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

புதிய திட்டத்தின்படி 10 சதவீதம் மின்சாரத்தை குறைத்துப் பாவித்தால் 50 சதவீத மின்கட்டண கழிவைப் பெறமுடியும்.

மேலும் 20 சதவீதம் குறைத்து பாவனை செய்தால் ஒரு மாதத்துக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும்.

இந்தத் திட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் பங்குபற்ற மின் பாவனையாளர்கள் குறுந்தகவல் மூலம் தம்மைப் பதிவு செய்து கொள்ளலாம் என்று மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு அறிவித்துள்ளது. (ச)




இலங்கை சாரணியத்தின் நூறாவது ஆசிய ஜம்போரி விழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை தம்புள்ளையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டு ஆரம்பித்துவைத்தார். வெளிநாட்டு மாணவர்கள் அவருடன் கைலாகுகிறார்கள்.

## வாகன விபத்தில் 3 மாதங்களில் 590 பேர் சாவு

கொழும்பு,ஏப்.3

இலங்கையில் கடந்த மூன்று மாத காலப்பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 590 பேர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

இந்த விபத்துக்களினால் 1289 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, கடந்த 30 மணித்தியாலங்களில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 10 பேர் இறந்துள்ளனர். இந்த வாகன விபத்துக்கள் அம்பலங்கொட, நுவரெலியா, கேகாலை, கடுவெல, நாரம்மல, மின்னேரிய, ஹம்பாந்தோட்டை, திஹகொட போன்ற பிரதேசங்களில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## வடக்கு, கிழக்கு இணைப்பே தமிழ் மக்களுக்கு நன்மை

அம்பாறை,ஏப்.3

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படுவதன் மூலமே தமிழ் மக்களுக்கு நன்மை ஏற்படும். அத்தோடு சிறந்த நிருவாகக் கட்டமைப்பையும் ஏற்படுத்த முடியும் -இவ்வாறு வடகிழக்கு மாகாண ஜீவோதய நலன் புரி நிறுவனத் தலைவர் எஸ்.லோகநாதன் தெரிவித் தார்.

வடக்கு, கிழக்கு ஜீவோதய நலன்புரி நிறுவனத்தின் பிரமுகர்கள் கௌரவிப்பு நிகழ்வு கல்முனை சணச மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இணைந்திருந்த வடக்கு, கிழக்கை பிரித்ததன் மூலம் தமிழ் மக்கள் எந்தப் பயனையும் அடையாது துன்பங்களிலேயே அமிழ்ந்துள்ளனர்.

வடக்கு, கிழக்கைப் பிரித்த பின்னர் பேரினவாதிகளதும், இனவாதிகளதும் அத்துமீறல்களும், அடாவடித்தனங்களும் எமது மண்ணை ஆக்கிரமிக்கும் செயல்களும் அதிகரித்த வண்ணமேயுள்ளன.

வடக்கு, கிழக்கு பிரிப்பு மூலம் தமிழ் மக்களுக்கு துரோகம் இழைக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு ஒன்றை வழங்கும் விடயம் நீடித்துச் செல்கின்றதே தவிர உருப்படியான எந்த முன்னேற்றத்தையும் இந்த விடயத்தில் அரசு காட்டவில்லை.

தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைக்கான இன விடுதலைக்கான நீண்ட கால போராட்டத்துக்கு பெரும்பான்மை பலத்தைக் கொண்ட இன்றைய அரசு நிரந்தரத் தீர்வு ஒன்றை வழங்குவதில் பின்னடித்து வருகின்றது.

இணைந்த வடக்கு, கிழக்கில் தமிழ்மக்களுக்கு தம்மைத் தாமே ஆளும் உரிமை வழங்கப்படவேண்டும். அதுவே நிரந்தர சமாதானத்துக்கு வழிவகுக்கும்.

இணைந்திருந்த வடக்கு, கிழக்கைப் பிரித்ததன் மூலம் கிழக்கு மாகாண சபை உருவானபோதும் இந்த மாகாண சபையில் சிறந்த நிருவாகக் கட்டமைப்பு இல்லாத நிலைமையே நீடித்து வருகின்றது.

உள்ளூராட்சி மன்றங்களின் அட்டவணைப்படுத்தப்படாத சிற்றூழியர்களுக்கான பதவி உயர்வுத் திட்டமொன்றைத் தயாரித்து நடைமுறைப்படுத்த முடியாத நிலைமையில்தான் கிழக்கு மாகாண சபை நிருவாகமுள்ளது. எனவே வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீண்டும் இணைக்கப்படுவதன்மூலம் தான் சிறந்த நிருவாகக் கட்டமைப்பை ஏற்படுத்த முடியும்.

இதேவேளை, வடக்கு, கிழக்கில் தமிழ், முஸ்லிம் மக்களிடையே உறவுப் பாலம் மேலும் பலமிக்கதாகக் கட்டியெழுப்பப்படுவதன் மூலமே எதிர்காலத்தில் எம்மை எதிர்நோக்கி நிற்கும் சவால்களை முறியடித்து எமது இருப்புக்களை உறுதிப்படுத்தலாம்- என்றார். (ச-30)

## வீட்டு நாய்களுக்கும் பொலிஸ் பயிற்சி

வீடுகளில் வளர்க்கப்படும் நாய்களுக்கு மோப்ப சக்தி அதிகம் உள்ளது.

கொழும்பு,ஏப்.3

வீடுகளில் வளர்க்கும் நாய்களுக்குப் பொலிஸ் பயிற்சி வழங்குவதற்கு இலங்கை பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக நாய்களுக்கான பயிற்சி நிலையம் ஒன்றை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் திணைக்கள நாய்ப் பிரிவின் அதிகாரி ஒருவர் கூறினார். வீடுகளில் வளர்க்கப்படும் நாய்களுக்கு மோப்ப சக்தி அதிகம் உள்ளது.

இதனால் முறையாகப் பயிற்சியளித்தால் 70 சதவீத திருட்டுக்களைக் குறைக்க முடியும் என்று அவர் தெரிவித்தார். (ச)

## அநுராதபுரத்தில் மின்னல் தாக்கி ஒருவர் சாவு

கொழும்பு,ஏப்.3

அநுராதபுரம் - கம்பரிகஸ்வெவ பகுதியில் மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதோடு மேலும் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் அஹமது லெப்பே காசிம் மொஹமட் (வயது-45) என்ற நபரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## துப்பாக்கிகளுடன் இருவர் கைது

கொழும்பு,ஏப்.3

புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மணல்தீவுப் பிரதேசத்தில் 2 சட்ட விரோத துப்பாக்கிகளைப் புத்தளம் பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் 2 பேரை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை கைதுசெய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, குறித்த இடத்தில் சோதனை நடவடிக்கை மேற்கொண்ட பொலிஸார் இந்தச் சட்ட விரோத துப்பாக்கிகளைக் கைப்பற்றியுள்ளனர். (ச)

## போருக்கு ஆதரவளித்த மக்கள் இன்று விளைவை அனுபவிக்கின்றனர்

### கருணாதிலக எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு,ஏப்.3

போரின் போது அரசுக்கு ஆதரவு அளித்த மக்கள், இன்று அரசின் அநாவசிய செலவுகளுக்கு நட்டஈடு செலுத்தி வருகின்றனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் முடிந்தும் அரசு அதிக வரிச் சுமையை மக்கள் தலையில் சுமத்தியுள்ளது.

பணம் படைத்தவர்களுக்கு அதிக போசனைத் திட்டத்தையும் ஏழைகளுக்கு 2500 ரூபா திட்டத்தையும் அரசு செயற்படுத்தியுள்ளது.



குடும்ப வாகனமாக பொது மக்கள் பயன்படுத்தி வரும் மோட்டார் சைக்கிள், ஓட்டோ ஆகியவற்றுக்கு வரியை அரசு உயர்த்தியுள்ளது.

புது வருடத்தின்பின் மா, பால் மா எரிவாயு மற்றும் பொருள்களின் விலைகளை விலையை அதிகரிக்க அரசு தீர்மானித்துள்ளது.

அரசின் இந்த நடவடிக்கை [illegible] ளது. (ச)

## தொழில் சட்டத்தை மேம்படுத்தாவிட்டால் அமெரிக்கச் சலுகையை இழக்க நேரிடும்

### கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய தொழிற் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.3

அரசு தொழில் சட்டத்தை மேம்படுத்தாவிட்டால் அமெரிக்காவில் இருந்து இலங்கைக்கு கிடைக்கும் வரிச் சலுகைகள் சிலவற்றை இழக்க நேரிடும் என்று கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய பொது சேவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அரசு விரைவில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும் என்று சங்கத்தின் செயலாளர் என்டன் மார்க்ஸ் தெரிவித்தார்.

தொழில் சட்டதிட்டங்களை வார்த்தைகளால் மாத்திரமன்றி செயலிலும் நிகழ்த்திக்காட்டுமாறு அவர் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார். தொழில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதாக உறுதியளித்தே அரசு ஜி.எஸ்.பி வரிச்சலுகையை பெற்றுக் கொண்டுள்ளது என்றும் சட்டத்தைச் செயற்படுத்த அரசுக்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என் றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இதேவேளை, தனியார் துறை ஊழியர்களின் சம்பள உயர்வு குறித்து தகவல் வழங்குமாறு தொழில் துறை அமைச்சர் காமினி லொக் குகே சம்பளக் கட்டுப்பாட்டு சபையிடம் கேட்டுக் கொண் டுள்ளார் என்று ஒரு தகவல் கூறுகிறது. (ச)

## புதுவருட பரிசாக மக்களுக்கு வரிச்சுமை

கொழும்பு,ஏப்.3

நாட்டில் பொருளாதார சிக்கல் இல்லை எனக்கூறும் அரசு நாட்டு மக்களுக்கு புதுவருட பரிசாக அதிக வரிச்சுமையை வழங்கியுள்ளது என்று மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் சபை விடுத்துள்ள [illegible] தெரிவிக்கப்படுவதாவது:

உடன் நடைமுறைக்கு வரும் வகையில் பொருள்கள் சிலவற்றின் வரிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.


எரிபொருள், பஸ், மின் கட்டண உயர்வால் துயரில் இருக்கும் மக்களுக்கு மீண்டும் வரிச்சுமை அதிக ரிக்கப்பட்டுள் ளது.

மது பாவனையில் இருந்து மக்களை பாதுகாக்கவே வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாகக் கூறி மக்களை ஏமாற்றி, அரசு கோடிக் கணக்கில் லாபம் பெற முயற்சித்துள்ளது.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சர்வதேச சமூகத்தின் காத்திரமான பங்களிப்பு இலங்கைக்குத் தேவை

## தமிழீழ அரசின் வெளிவிவகாரத் துணை அமைச்சர் ஆஸி நாடாளுமன்ற உறுப்பினரிடம் வலியுறுத்து



தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை கவனத்தில் கொண்டு, சர்வதேச சமூகம் தனது காத்திரமான பங்களிப்பை இலங்கையில் செலுத்த வேண்டும் என்று நாடுகடந்த தமிழீழ அரசின் அரசியல் வெளி விவகாரத் துறை துணை அமைச்சர் மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

ஆஸ்திரேலியாவின் பழங்குடி மக்களுக்கான, ஆஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹொன் கென் வையற்றை (Hon Ken Wyatt) சந்தித்துக் கலந்துரை யாடிய போதே, அவர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை தொடர்பில் சுதந்திரமான சர்வதேச விசாரணைப் பொறிமுறை, ஈழத்தில் ஐ.நாவின் அனைத்துலக பாதுகாப்புப் பொறிமுறை, அனைத்துலகத் தின் கண்காணிப்பில் தமிழீழத்தில் பொதுசன வாக் கெடுப்பு ஆகிய தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை கவனத்தில் கொண்டு, சர்வதேச சமூகம் தனது காத்திரமான பங்களிப்பை இலங்கைத் தீவில் செலுத்த வேண்டும் என்று மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

சிங்கள ஆட்சியாளர்களினால், ஈழத் தமிழினத்தின் மீது நடத்தப்பட்டு வரும் இன அழிப்பு தொடர்பிலான ஆவணங்களை முன்னிறுத்தி, ஈழ மக்களின் நியாயமான விடுதலைப் போராட்டத்தை விளக்கிய துணை அமைச்சர், ஐ.நா. மனித உரிமைச் சபையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர் மானம் குறித்து, தமிழர்களின் நிலைப்பாட்டை தெரியப்படுத்தினார்.

ஈழ மக்களுக்கு நியாயமான தும், நிலையானதுமான அரசியல் தீர்வைக் காண, ஆஸ்திரேலியா தலைமைதாங்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

நாடுகடந்த தமிழீழ அரசின் இந்த நிலைப்பாட்டை கரிசனையோடு கவனத்தில் கொண்ட ஆஸ்திரேலியா நாடாளுமன்றஉறுப்பினர்,ஏனைய நாடாளுமன்ற உறுப் பினர்களுடன் இது குறித்து கலந்துரையாடுவதாக உறுதியளித்துள்ளதாக, நாடு கடந்த தமிழீழ அரசின் அரசியல்வெளி விவகாரத்துறை துணை அமைச்சர் மாணிக்க வாசகர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

# மரண தண்டனை: 106

## இலங்கையில் கடந்த வருடம் மட்டும்

கொழும்பு,ஏப்.3

இலங்கையில் கடந்த ஆண்டில் 106 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என்று சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

மரண தண்டனை நிறைவேற்றப்படும் நாடுகளின் வரிசையில் இலங்கை பட்டியல் படுத்தப்படாத போதிலும், மரண தண்டனைகள் விதிக்கப்படுவதாகக் குற்றம் சுமத்தியுள்ளது.

மரண தண்டனையை இல்லாதொழிக்குமாறு அரசிடம் கோர உள்ளதாக தேசிய மனித உரிமைச் சபை கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் தெரிவித்திருந்தது.

எவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபட்டாலும் மரண தண்டனை விதிக்கப்படக் கூடாது என்பதே சர்வதேச மன்னிப்புச் சபையின் கோரிக்கையாக அமைந்துள்ளது.

> மரண தண்டனையானது மனிதனின் வாழும் அடிப்படை உரிமையை முடக்கும் வகையில் அமைந்துள்ளது

மரண தண்டனையானது மனிதனின் வாழும் அடிப்படை உரிமையை முடக்கும் வகையில் அமைந்துள்ளது என்று சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக் காட்டியுள்ளது.

இதேவேளை, மரண தண்டனையை நிறைவேற்றும் 'அலுக்கோசு' பதவிகளுக்கு நபர்களுக்காக அண்மையில் சிறைச்சாலைகள் அமைச்சு விண்ணப்பங்களை கோரியிருந்தமை குறிப்பிடத் தக்கது. (ச)

# தீவகத்தில் புதிய இனப்பயிர்கள் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்

யாழ்ப்பாணம், ஏப்.3

தீவகப் பகுதிகளில் தற்போது விவசாயிகள் அதிக இலாபம் தரும்புதிய இனப் பயிர்களைப் பயிரிடுவதில் ஆர்வம் காட்டியுள்ளனர்.

கடந்த காலப் பயிர்ச்செய்கையின் போது புகையிலை, வெங்காயம், மிளகாய் போன்ற பயிர்களை பயிரிட்டு, அதிகளவு லாபத்தைப் பெற்று வந்தனர். தற்போது அவற்றுக்கான அறுவடை முடிவடைந்து தமது வயல் நிலங்களில் திராட்சை, புதிய இன மிளகாய், முருங்கை போன்ற பயிர்களை நட்டு வருகின்றனர்.

குடாநாட்டில் தற்போது திராட்சை, முருங்கை போன்வற்றுக்கு சந்தையில் அதிகளவு கேள்வி கோரப்படுவதகாவும், இவற்றுக்கு தட்டுப்பாடு நிலவிவருவதாலும், தீவக விவசாயிகள் இந்தப் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதில் ஆர்வம் காட்டியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர். (வ-14)

# புத்தாண்டு வரும்வேளை பொருள்கள் விலை உயர்வு

கொழும்பு ,ஏப்.3

தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு பொருள்களின் விலை உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியே பொருள்களின் விலையேற்றத்துக்கான பிரதான காரணி என்று தெரிவிக்கப் படுகின்றது.

கடந்த மாதம் நாட்டின் பண வீக்கம் 5.5 வீதத்தினால் உயர்வடைந்துள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள்களுக்கான விலைகள் உயர்வடையும் என்று பழைய சோனகர் தெரு வர்த்தகர் சங்கத்தின் தலைவர் பழனியாண்டி தெரிவித்துள்ளார்.

அரிசி, மீன்ரின், பருப்பு, பெரிய வெங்காயம், உருளைக் கிழங்கு, சீனி போன்ற உணவுப் பொருள்களுக்கான விலைகள் உயர்வடைந்துள்ளன என்றார் அவர். அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வால் மக்கள் தமது பண்டிகையைக்கூடக் கொண்டாட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# நாவலருக்குப் பின் தமிழ்ப்பணி ஆற்றிய பெருமகன் சதாவதானி கதிரைவேற்பிள்ளை




மேலைப் புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை பெரு மகனாரின் பெருமை சொல்லுந் தரமன்று. நாவலர் அவர்களுக்குப் பின்னர் தமிழ்மொழிக்கும் சைவத்துக்கும் அரும்பணியாற்றியவர்களில சதாவதானியும் முக்கிய பங்கினை வகித்தார். பெருமகனார் 1871 பிரசோற்பத்தி வருடம் மார்கழி மாதம் 03 ஆம் திகதி இலங்கைத் தீவின் வட பகுதியில் அமைந்துள்ளது. மேலைப் புலோலியிலே நாகப் பிள்ளை- சிவகாமி தம்பதியரின் குழந்தையாக அவதரித்தார். ஆரம்பக் கல்வியினை சைவப்பிரகாச வித்தியாசாலையில் பெற்று ஆற் றல் மிக்கவராக விளங்கினார். கற்ற பாடசாலையிலே ஆசிரியராகக் கடமையாற்றினார்.

அக்காலத்திலே கலங்கரை விளக்கம் போலிருந்த கனக சுந்தரம் பிள்ளையவர்களிடம் கதிரை வேற்பிள்ளை தொல்காப்பியம், சங்கவிலக்கியம் முதலான அருங்கலை நூல்களையும் வேறும் பல வித்துவான்களிடம் செந்தமிழ் இலக்கணத்தையும் சைவசித்தாந்த சாத்திரங்களையும் வடமொழியையும் நுணுகி ஆராய்ந்து கற்றுப் புலமையெய்தினார்.

1897 ஆம் ஆண்டு முதலாக வேப்பேரி உயர்நிலைப் பள்ளியிலும், சென்தோம் உயர்நிலைப் பள்ளியிலும் ஆசிரியராய் கடமையாற்றினார்.

பிள்ளையவர்களின் கற்பித்தல் முறை மாணவரை வெகுவாகக் கவர்ந்தது. அதனால் தமிழ் உலகம் போற்றும் திரு.வி.க. என்னும் கலியாணசுந்தர முதலியாரும் சகோதரர் உலகநாத முதலியாரும் பிறரும் பிள்ளை அவர்களின் மதிப்புக்குரிய மாணவ சிரோமணிகளாயினர். பெருமகனாரின் ஆற்றல், அறிவு, புகழ் பற்றி திரு.வி. கல்யாணசுந்தர முதலியாரவர்கள் .பின்வருமாறு குறிப்பிடுகின்றார். ''முதன்முதல் எனக்கு கல்விக் கண் திறந்தவர் யாழ்ப்பாணத்து மேலைப் புலோலியூர் நா.கதிரைவேற்பிள்ளை. அவர் தம் பெரும் பொழுது சமய வாதங்களிலும், கண்டனங்கள் வரைவதிலும் செலவா யிற்று. குறிப்பிட்ட நேரத்தில் மாணாக்கர் அவரிடத்தில் தமிழ் பயிலுதல் இயல்வதில்லை. ஒய்வு கிடைக்கும் எந்த நேரத் திலும் அவர் பாடம் சொல்வார். எவ்விடத்திலும் சொல்வார். அவரது வாதப் பேச்சுக்களிலும் தமிழ் மணங் கமழும். கலைமகள் நடம் புரிவாள். மாணாக்கர் ஐயப்பாடுகள் பல நீங்கும்.

''செந்தமிழ் அணங்கின் சிந்தையில் என்றும் தங்கும்
தமிழொளித் துங்கவன்''

பிள்ளையவர்கள் தணிகைப் புராணமும் கந்தபுராணமும் ஒழுங் காகப் பிரசங்கம் செய்து வந்த காலத்திலே மாயாவாதத்தை இவர் தாக்கி உண்மைச் சுத்தாந்தவித சைவசித்தாந்தத்தை நிலைநாட் டினார். இவருடைய சீரிய தொண்டைப் பாராட்டிச் சென்னையில் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் அவர்கள் தலைமையிலே 'மாயா வாத துவம்ச கோளரி' என்னும் பட் டம் வழங்கப்பட்டது.

சைவத் தமிழன்பர்கள் தமிழ் நாட்டில் பல இடங்களிலும் பேரவைக் கூட்டி பிள்ளையவர் களைக் கொண்டு பிரசங்கங்கள் செய்வித்து மேலும் பல விருதுக ளும் பட்டங்களும் வழங்கு வாராயினர். சைவசித்தாந்த மகாசரபம், அத்துவித சித்தாந்தம கோத்தரணர், மகா வித்துவான், நாவலர், பெருஞ் சொற் கொண்டல் என்பன போன்ற பட்டங்கள் பிள்ளையவர்களின் பெயரை மொய்த் தன. ஆரணி சமஸ்தான வித்துவானாய் இருந்த காலத்திலேதான் அவ்வாதீனத் தலைவரால் அத்துவித சித்தாந்த மகோத்தாரணர் பட்டத்தை நல்கினார் என்பர்.

சிவசேத்திராலய மகோற்சவ விளக்கம், ஏகாதசிப் புராண அரும்ப தவுரை, திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் வரலாறு முதலாய நூல்கள் அவருக்குப் பெரும் புகழை ஈட்டிக் கொடுத்தன. இவற்றை விடப் பழனித் தலபுராணம், [illegible] [illegible] சிவ ராத்திரி புராணம் முதலியவற்றுக்கும் தெளிவான விருத்தி யுரையெழுதினார். இவர் அதி வீரராமபாண்டியன் இயற்றிய தமிழ்ச் கூர்மபுராணத்துக்கும் அரிய தோருரை எழுதியுள்ளார்.

புலவர்க்கு ஔடதமெனப் போற்றப்படும் நைடதத்துக்கு ஓர் ஆராட்சியுரையெழுதினார். தமிழ் நாட்டுச் சைவமடங்களாலும் குறுநில மன்னரவையினாலும் புரவல ராலும் போற்றப் பெற்ற கதிரைவேற் பிள்ளை சதாவதானம் செய்யப் போகின்றாராம் என்னும் செய்தி சென்னையில் பரவியது. வித்து வான்கள், கவிராயர்கள், பண்டிதர் கள், பிரபுக்கள், மடத்துத் தம்பிரான் சுவாமிகள் அன்றித் சிறந்தாரெல்லாரும் நிறைந்த மண்டபத் தில் 1907 ஆண்டிற் சதாவதானமும் செய்து சதாவதானம் கதிரை வேற்பிள்ளையெனப் பெயர் பெற்றார்.

பிள்ளையவர்கள் செய்த பெய ரகராதியை காஞ்சி நாகலிங்க முதலியாரவர்கள் பதிப்பித்தார்.

அதுவே வெளிவந்த அகராதிகளுள் தலை சிறந்தது.

தமிழ் மொழிக்கும் சைவத்துக்கும் அரும் பெரும் பணிகள் ஆற்றிய பெருமகனார் 1907 பராபல வருடம் பங்குனி மாதம் பதின் மூன்றாந் திகதி செவ்வாய்க் [illegible] சத்திரங் [illegible] சித் திதியிலே அகண்டாகாரப் பொரு ளாஞ் சிவத்துடன் இரண்டறக் கலந்தார்.

மேற்படி பெரும்புகழ் சதாவதானி பெரு மகனாருக்கு ஞாபகார்த்த அஞ்சல் முத்திரை வெளி யிட முயலும் கொழும் புத் தமிழ்ச் சங்கத்தினரின் நடவடிக்கையை தமிழ் மக்கள் பாராட்டி வரவேற்பர் என நம்பு வோமாக.

1948 இல் ஆரம்பிக்கப்பட்ட கதிரை வேற்பிள்ளை சனசமூக நிலையம் சமூகக் கல்வி மேம்பாட்டு செயற்பாடுகளிலும் 1987 இல் ஆரம்பிக்கப்பட்டதும் இவ்வாண்டு வெள்ளிவிழாக் கொண்டாடுவது மான சதாவதானி கதிரை வேற் பிள்ளை சிக்கன கடனுதவு கூட்டு றவுச் சங்கம் கடனுதவி, கல்வி மற்றும் வாழ்வாதார செயற்பாடுகளிலும் சிறப் பான சேவைகளை ஆற்றி வருவது மகிழ்ச்சிக்குரியதே.

அம்பலவாணர் துரைசிங்கம்.

## மாணவரிடையே சித்திரப் போட்டிகள்

பாடசாலை மாணவர்களுக்கிடையே ''மலேரியாவிலிருந்து நீங்கிய இலங்கை'' பற்றிய சித்திரப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இந்தப்போட்டி கனிஷ்ட பிரிவு, சிரேஷ்ட பிரிவு என இரு பிரிவுகளாக நடத்தப் படவுள்ளது. தரம் 6 தொடக்கம் தரம் 8 வரை கற்கும் மாணவர்கள் கனிஷ்ட பிரிவிலும், தரம் 9 தொடக்கம் தரம் 13 வரை கற்கும் மாணவர்கள் சிரேஷ்ட பிரிவிலும் பங்கு பற்ற முடியும்.

தேசிய மட்டத்தில் இந் தப் போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் முதலிடத்தைப் பெறுபவர்களுக்கு 15 ஆயிரம் ரூபாவும், இரண்டா மிடத்தைப் பெறு பவர் களுக்கு 10 ஆயிரம் ரூபாவும் , மூன்றா மிடத்தைப் பெறுபவர்களுக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும் ரொக்கப் பணமாக வழங்கப் படுவதுடன் சான்றிதழும் வழங்கப்படவுள்ளது. மேலும் 10இடங்களைப் பெறுப வருக்கும் சான்றி தழ்களும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மாகாண மட்டத்திலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப் படவுள்ளன. (ம-190)

## ஆலய கட்டுமானப் பணிகள் ஆரம்பம்

சுழிபுரம்திருவடிநிலைதீர்த்தக்கரையில் அமைந்துள்ள வகைவைரவப்பெருமான் ஆலயம் கருங்கற்களினால் மூலஸ்தான கட்டு வேலைகள் ஆரம்பமாகி நடைபெற்று வரு கின்றன. கட்டுமானப் பணிகள் நடைபெற்றுவருவதால் தற்போது மூல விக்கிரகம் வாகை மரத்துக்கு அருகில்வைத்து தற் காலிகமாகக் கட்டப்பட்டுள்ளது. (வ-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரிடரிலிருந்து பாதுகாக்க...



மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள நொச்சிமுனைக் கிராமத்தில் சுனாமி அனர்த்த ஒத்திகை நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது. இந்த ஒத்திகை நிகழ்வு மட்டக்களப்பிலுள்ள முப்படைகளின் ஏற்பாட்டில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய மட்டக்களப்பு அலுவலகத்தின் அனுசரணையுடன் இடம்பெற்றது.

# கிழக்கு மாகாணத்துக்கு விரைவில் தேர்தல்

மட்டக்களப்பு,ஏப்.3

கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் முன்கூட்டியே நடத்தப்படக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் எதிர் வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறுவதற்கான சாத்தியம் இருப்பதாக அரச பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை ஊவா, வடமத்திய மற்றும் மத்திய மாகாணசபைகளுக்கான தேர் தல்களும் முன்கூட்டியே நடத்தப்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாகாண சபைத் தேர்தல்களில் வெற்றியீட்டி, அதன் மூலம் மக்களின் ஆதரவு அரசுக்கு இருப்பதை உலக நாடுகளுக்கு வெளிப்படுத்த முடியும் என்று மாகாண முதலமைச்சர்கள் சிலர் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.

இதற்கமையவே இந்த நான்கு மாகாண சபைகளுக்குமான தேர்தல்கள் இடம்பெறவுள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபை அமர்வுகளில், இலங்கைக்கு எதிரான தீர்மானம் தொடர்பில் மக்களின் கருத்தாக தேர்தல் முடிவுகள் அமையும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இந்தாண்டு நிறைவுக்கு முன்னர் இந்த மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச)

## விகாரை உடைத்து புத்தர் சிலைகளும் திருட்டு போகின்றன

கட்டுகஸ்தோட்டை,ஏப்.3

கட்டுகஸ்தோட்டை, பஹல - கொண்டதெனிய விகாரை உடைக்கப்பட்டு 10 புத்தர் சிலைகளும் பணமும் திருடப்பட்டுள்ளன என்று கட்டுகஸ்தோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

விகாராதிபதி கடந்த சனிக்கிழமை மாலை அவசியத் தேவை காரணமாக வெளியே சென்றிருந்தபோது விகாரையை உடைத்து இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுகஸ் தோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## மான்தோல் விற்ற இளைஞர் கைது

எருவில்,ஏப்.3

அம்பாறை மாவட்டத்தின் நாமல்ஓயா பிரதேசத்தில் மான்தோல்கள், மான்கொம்பு ஆகியவற்றை விற்பனை செய்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட புலனாய்வுப் பிரிவுப் பொலிஸாருக்கு இது தொடர்பில் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அங்கு சென்ற பொலிஸார் குறித்த இளைஞரைக் கைதுசெய்தனர் என்று அம்பாறை விசேட புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்

கைதுசெய்யப்பட்ட இளைஞரை அம்பாறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-31)

# கிழக்கில் கப்பம் கோரும் விடயத்தில் கருணாவுக்கு தொடர்பில்லையாம்

மட்டக்களப்பு,ஏப்.3

கிழக்கு மாகாணத்தில், அரசசார் பற்ற நிறுவனங்களிடம் அரசியல்வாதி ஒருவர் (பிள்ளையான்) கப்பம்கோரி வருவதாக வெளியாகிய செய்தி தொடர்பாக மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் விளக்கமளித்துள்ளார்.

இந்தச் சம்பவத்துக்கும் தனக்கும் எந்தத் தொடர்புகளும் இல்லை என்று அவர் கூறியுள்ளார்.

இந்தச் செய்தி தொடர்பாக ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் மட்டக்களப்பு அலுவலகத்தில் பணியாற்றும் அஸத்தூர் ரஹ்மானிடம் தகவல் ஏதும் இருக்கின்றதா என்று வினவினேன்.

அதற்கு அவ்வாறான தகவல்கள் தொடர்பாக எந்தத் தகவல்களையும் தான் அறியவில்லை என்று அவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் நடைபெற்று வரும் அபிவிருத்திப் பணிகளில் சம்பந்தப்பட்டுள்ள அரசசார்பற்ற நிறுவனங்களுடன் பிரதி வெள்ளிக்கிழமைகளில் அபிவிருத்தி தொடர்பான முன்னேற்றங்கள் குறித்த கூட்டங்களை தான் நடத்துவதாகவும், அந்தக் கூட்டங்களில் இவ்வாறான சம்பவங்கள் குறித்துத் தனக்கு அறிவிக்கப்படவில்லை எனவும் மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் தெரிவித்தார். (ச)

20 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
10.05.1926

மறைவு
15.03.1992

அமரர் காசிப்பிள்ளை சபாரத்தினம்

திதி: துவாதசி - 03.04.2012

எமது குடும்ப விளக்காக வாழ்ந்த
எமது அன்பின் பப்பாவே!
கண்ணை இமை காப்பதுபோல எம்மை
வளர்த்துவிட்டு நீங்கள் சென்று
இருபது ஆண்டுகள் சென்றதுவே!
என்றும் உங்கள் நினைவுகளுடன்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவுகளுடன்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

## புனர்வாழ்வு பெறாத விடுதலைப்புலி உறுப்பினர் கைது

அக்கரைப்பற்று,ஏப்.3

புனர்வாழ்வு பெறாமல் தலைமறைவாகி இருந்து வந்தார் எனக்கூறப்படும் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் அக்கரைப்பற்று, கண்ணகிபுரம் பிரதேசத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப நபர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை கைது செய்யப்பட்டார் என்று அக்கரைப்பற்றுப் பொலிஸார் தெரிவித்தனர்.

2002ஆம் ஆண்டு காலப் பகுதியில் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து வெளியேறி இராணுவப் புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வு பெறாமல் தலைமறைவாக இருந்து வந்துள்ள கண்ணகிபுரம், முதலாம் பிரிவைச் சேர்ந்த குடும்பஸ்தரான சிவலிங்கம் கமலராஜன் (வயது-29) என்பவரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தநபர் அக்கரைப்பற்று மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். (ச)

கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No.1 பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவு செய்யவும்.

குறிப்பு: எம்மிடம் புறொயிலர் குஞ்சுகள் கொள்வனவு செய்பவர்களிடம் திரும்பவும் இறைச்சிக்கோழிகள் கொள்வனவு செய்யப்படும்.

தொடர்பு:

நல்லூர் பாம் சென்ரர், 19,முருகேசர் ஒழுங்கை, நல்லூர். 0212226944.
நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி.0776225944.
சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை, 0778996085.

(18102)(6,7,12)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
08.05.1952

மறைவு
05.03.2012

திருமதி கணேசானந்தம் செல்வமலர் (மனோகரி)

அன்புள்ள அம்மாவே!
மாதம் ஒன்று ஓடினாலும் ஆறுமா எங்கள் துயரம்
கண்மூடித் திறக்கும் முன் காலன் உன்னை அழைத்தானே
தினந்தோறும் உன் நினைவில் கண்ணீர் காவியம் ஆகின்றது
உனது பிரிவால் நிம்மதியைத் தொலைத்துவிட்டுத் தவிக்கின்றோம்.

இன்று (03.04.2012) செவ்வாய்க்கிழமை காலை 5.00 மணியளவில் வல்லியானந்தப் பிள்ளையார் கோயில் அருகில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும், தொடர்ந்து முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய சபிண்டீகரண நிகழ்விலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அபிராமி இல்லம்,
துன்னாலை வடக்கு, கரவெட்டி.
தொ.பே:- 021 226 3065

என்றும் நினைவில்,
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கில் புதிதாக 31 ஆரம்பப் பாடசாலைகள்

திருகோணமலை,ஏப்.3

கல்வி அமைச்சின் ஆயிரம் பாடசாலை அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் கிழக்கில் 31 ஆரம்பப் பாடசாலைகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.ஈ. போல் தெரிவித்துள்ளார்.

புதிதாக உருவாக்கப்பட்ட பாடசாலைகளுக்கான பௌதிக வளங்கள் ஏற் படுத்தப்பட்டு வருகின்றன என்றும் அவர் கூறினார். (ச)

# மருத்துவக் காட்சியை 150,000 பேர் பார்வை

### கிழக்கு பல்கலை மருத்துவபீடப் பீடாதிபதி தெரிவிப்பு

எருவில்,ஏப்.3

உயர்கல்வி அமைச்சின் அனுசரணையுடன் கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவ பீடம் ஏற்பாடு செய்த, மட்டக்களப்பு வரலாற்றில் முதன்முறையாக நடைபெற்ற கிழக்கின் மருத்துவக் கண்காட்சியை கடந்த ஐந்து நாள்களில் 1 லட்சத்து 50 ஆயிரம் பேர் பார்வையிட்டுள்ளனர் என்று கிழக்குப் பல்கலைகழக மருத்துவபீட பீடாதிபதி கே.கருணாகரன் தெரிவித்தார்.

கடந்த 28ஆம் திகதி மருத்துவபீட அரசடி வளாகத்தில் ஆரம்பமான இந்தக் கண்காட்சியை மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களைச்சேர்ந்த பெரும் எண்ணிக்கையிலான பாடசாலை மாணவர்களும் கண்டுகளித்துள்ளனர். (ச-31)

## கிழக்கில் வெள்ளரிப்பழம் அமோக விளைச்சல்

எருவில்,ஏப்.3

கிழக்கு மாகாணத்தில் பயிரிடப்படும் வெள்ளரிப்பழச் செய்கை இந்த முறை அமோக விளைச்சலைத் தந்திருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளரிப்பழச் செய்கை என்றுமில்லாதவாறு விளைச்சலைத் தந்துள்ளதாக வெள்ளரிப்பழச் செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரையம்பதி, கிரான் குளம் உட்பட பல இடங்களில் வெள்ளரிப்பழம் செய்கை பண்ணப்பட்டு வருகின்றது. ஐம்பது ரூபா முதல் 200 ரூபாவரை ஒரு பழம் சந்தைகளில் விற்பனை செய்யப்படுகின்றது.

தற்போதைய சமாதான சூழலில் பல்வேறு இடங்களுக்கும் சென்று வெள்ளரிப் பழங்ளை விற்பனை செய்ய முடிந்துள்ளதாக உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒரு ஏக்கரில் பயிரிடப்படும் வெள்ளரிப்பழம் 60ஆயிரம் ரூபா லாபம் பெறக்கூடிய .விற்பனை செய்யமுடிவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (ச-31)

# ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டும் பட்டிருப்பு வலயத்தில் சிறந்த பெறுபேறு

### பாராட்டுகிறார் பட்டிருப்புப் பணிப்பாளர்

எருவில்,ஏப்.3

பட்டிருப்பு வலயத்தில் விஞ்ஞான,கணித, ஆங்கில ஆசிரியர்கள் பற்றாக்குறையாகவுள்ள போதிலும் ஏனைய பிரிவு ஆசிரியர்களைக்கொண்டு கற்பித்ததன் மூலம் மாணவர்கள் ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர் என்று பட்டிருப்பு வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி பிள்ளைநாயகம் நகுலேஸ்வரி தெரிவித்தார்.

காக்காச்சிவட்டை விஸ்ணு மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது கல்வி வலயத்தில் அதிகளவான பௌதிக வளங்களைக்கொண்ட பாடசாலைகளில் குறைந்த பரீட்சைப் பெறுபேறுகள் காணப்படுகின்றன. ஆனால் ஆசிரியர் பற்றாக்குறையான பாடசாலைகள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளன.

நான் கற்ற காலத்தில் ஒரு ஆசிரியர் அனைத்து பாடங்களையும் கற்பித்து சித்தியடைந்த அன்றைய நிலைமையை இன்று இந்த ஆசிரியர்கள் வெளிக்காட்டியிருப்பது பெருமைகொள்ளவேண்டிய விடயம்.

அந்த வகையில் இம்முறை பட்டிருப்பு கல்வி வலயத்தில் 19 பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் ஜி.சீ.ஈ சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றியிருந்தபோதும் ஆறு பாடசாலைகளில் ஒன்பது பாடங்களில் அதி விசேட சித்தியை மாணவர்கள் பெற்றுள்ளனர்.

பாடசாலைகளில் கொண்டாடப்படும் விழாக்கள் மாணவர்களுக்கு பல விடயங்களை சொல்பவையாக இருக்கவேண்டும்.

மாணவர்கள் எதிர்காலத்தலைவர்கள். எனவே அதிபர் , ஆசிரியர்கள் ஆகியோரது செயற்பாடுகள் மாணவர்களுக்கு முன்மாதிரியானவையாகக் காட்டப்பட வேண்டும்.- என்றார். (ச-31)

## கிழக்கு கூட்டுறவு இயக்கத்தில் 325,000 உறுப்பினர்கள்

திருகோணமலை,ஏப்.3

கிழக்கு மாகாணத்தில் கூட்டுறவு இயக்கத்தில் 3 லட்சத்து 25 ஆயிரம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர் என்று கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் எம்.சி.எம் ஷெரிப் தெரிவித்தார். திருகோணமலை நகரில் முதலாவது கோப் சிற்றி திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணத்தில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் கூட்டுறவுச் சங்கம் உள்ளது. கிழக்கில் அம்பாறை, கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை என்று நான்கு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலகப் பிரிவுகள் அமைந்துள்ளன. கூட்டுறவு இயக்கம் அர்ப்பணிப்புடன் கூடிய சிந்தனையாளர்களால் உருவாக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் மூன்று கோப் சிற்றி விற்பனை வளாகங்கள் நிறுவப்படவுள்ளன. இதில் முதலாவது கோப் சிற்றி திருகோணமலை நகரிலும் ஏனைய இரண்டும் மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலும் திறக்கப் படவுள்ளன.- என்றார். (ச-40)


### நீங்காத நினைவுகளுடன், ஒன்பதாமாண்டின் நினைவுகள்

தாயின் மடியில் 08 ★ 08 ★ 1985

காலன் பிடியில் 03 ★ 04 ★ 2003

அமரர் செல்வன் மரியதாஸ் பிரதீபன்



எமது குடும்பத்தில் ஆசையுடன் வந்துதித்த முதல் மகனே எம் மூத்தவா அதனால்தான் காலன் முதலாவதாய் உனை பாதியினில் பறித்தானோபதறும் நெஞ்சத்துடன் பரிதவிக்கும் உன் குடும்பத்தினர்.

பக்கஸ்லேன், மானிப்பாய் (16375))(6-7-8)

குடும்பத்தினர்

### வீடு வாடகைக்குத்தேவை

இணுவில், மருதனார்மடம், உடுவில், சுன்னாகப் பகுதியில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்கு தேவை. மாத வாடகை ரூபா 10,000/= (பத்தாயிரம்) வரை தரப்படும். தொடர்பு: 077 044 0570

### பணிப்பெண் தேவை

யாழ்ப்பாண வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. சம்பளம் 10,000/=

தொடர்பு - 077 1392137

### தவறிவிட்டது

தாலிக்கொடி தவறவிடப்பட்டுள்ளது. 18.03.2012 (ஞாயிற்றுக்கிழமை) அன்று யாழ்.புனித மரியன்னை பேராலயத்துக்கும், மத்தியூஸ் வீதி ஆகியவற்றுக்கிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரிக்கு பதில் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம். தகுந்த சன்மானம் தரப்படும்.

முகவரி: 16/18, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 0776409496

### Physics - A/L 2014

சிறுகுழு, தனிப்பட்ட வகுப்புக்கள் M.Sc பட்டதாரி ஆசிரியரால் கற்பிக்கப்படும்.

தொடர்பு : 077 6184713

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் மாதன் வைரவி

பிறப்பு 04★10★1926

மறைவு 04★03★2012

வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று(03.04.2012) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து நிகழும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மந்திரிமலை
புத்தூர் வடக்கு,
புத்தூர். (16336) (45-6-7)

பிள்ளைகள்

### மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்: 17.09.1972

மகிமைக்குள்: 03.04.2009



கிறிஸ்து எனக்கு ஜீவன்
சாவு எனக்கு ஆதாயம் (பிலிப் 1:21)

கடந்த 03.04.2009 அன்று புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மாத்தளன் வலயன்மட பகுதியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது சிக்கி கர்த்தருக்குள் நித்திரையான

திருமதி பாஸ்கரன் விஜயகுமாரி

அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவான இன்று (03.04.2012) செவ்வாய்க்கிழமை அவரை நினைவுகூரும்

கந்தசாமி பாஸ்கரன் (கணவர்),
சாம்சன், ஜான்சன், கபிரியேல் (பிள்ளைகள், பருத்தித்துறை),
ஆறுமுகம் விஜயலட்சுமி (தாய், திக்கம்),
போதகர் ஆறுமுகம், விஜயகுமார், பர்னப (சகோதரர்கள், நெல்லியடி),
ஆறுமுகம் ராஜகுமார் (நெதர்லாந்து),
வி.கலைவாணி (நெல்லியடி), ரா.நவநிதா (நெதர்லாந்து) மச்சாள்மார்,
வி.போல்ராஜ், வி.பர்னபராஜ் (மருமக்கள், நெல்லியடி),
ரா. இம்மானுவேல், ரா.யோசுவா (நெதர்லாந்து),

ஆண்டு மூன்று ஓடினாலும் உம் நினைவுகள் அகலவில்லை.

கர்த்தருக்குள் மரிக்கின்றவர்கள் இது முதல் பாக்கியவான்கள் (வெளி 14:13)

ஆறுமுகம் ராஜகுமார்,
நெதர்லாந்து.

(C313) (6.7.10)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின் ஆரம்பக் கல்விப்பிரிவின் பகுதித் தலைவரும், சிரேஷ்ட ஆசிரியையுமான திருமதி சித்திரமேகலை நாகராஜா அவர்கள் இன்றைய தினம் சர்வதேச பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெறும் கல்விமாணிப்பட்ட கற்கை நெறியில் பட்டம் பெறுவதையிட்டு பாராட்டி வாழ்த்துவதோடு இவர் தேக ஆரோக்கியத்தோடு வாழ இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழையமாணவர் சங்கம்
மு/ யோகபுரம் ம.வி., யோகபுரம்

### பாடசாலை விடுமுறையை பயனுள்ளதாக மாற்றும் சிறுவர்களுக்கான கொம்ப்யூட்டர் பயிற்சி

- Junior Diploma in Computer Science
- Junior Diploma in Computer Programming
- Junior Diploma in Graphics & Animation
- Junior Diploma in Digital Creativity
- Diploma in Cartoon Animation







புதிய வகுப்புக்கள் 4-4-2012 , 7-4-2012 ஆரம்பம்
Admissions are in progress - Register Now

பாடசாலைக் கல்வி மற்றும் தனியார் வகுப்புக்கள் (ரியூஷன்) பாதிக்காத வகையில் பயிற்சி நேரங்களை தெரிவுசெய்யலாம்.

இப்பயிற்சியின் சிறப்பம்சங்கள்
- 7 வயது முதல் 14 வயதுள்ள சிறுவர்கள் மேற்குறிப்பிட்ட பயிற்சிகளில் இணைந்து கொள்ளலாம்
- கணனி உலகில் தடம்பதிக்க இதுவே சரியான தருணம்
- குழந்தைகளின் கணனி அறிவையும் கலை உணர்வையும் கொம்ப்யூட்டரில் வெளிப்படுத்தும் கிராபிக்ஸ் கோர்ஸ்
- கொம்ப்யூட்டரில் ஓவியம் வரைதல், வண்ணங்களை அளித்து அசைய வைத்தல் ஆகியன கற்கலாம்
- ஒலி-ஒளி ஸ்பெஷல் எபெட்சும் கற்றுக்கொள்ளலாம்
- சிறு வயதிலேயே கிராபிக்ஸ் அறிவை ஊட்டி வருங்காலத்தில் பெரிய வல்லுனராக்கலாம்

CSC-ASIAN COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION
9, குமார வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம் T.P-021 2229191


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஓரளவு மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# தொழில் புரட்சி மூலம் சாதனை பட்டதாரிகளும் படைக்கலாம்

## வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் தெரிவிப்பு

வேலையற்ற பட்டதாரிகள் இனிவரும் காலங்களில் 'வைற் கொலர்' அரச உத்தியோகங்களை எதிர்பார்க்கக்கூடாது.

பல்கலைக்கழகங்களில் பெற்ற பல்துறை அறிவை பயன்படுத்தியும் பயன்படுத்தப்படாத வளங்களைப் பயன்படுத்தியும் கைத்தொழில் புரட்சி மூலம் பட்டதாரிகள் சாதனை புரியலாம். இவ்வாறு வலி. மேற்கு பிரதேச சபை உறுப்பினர் தர்மலிங்கம் நடனேந்திரன் தெரிவித்தார்.

அராலியில் ஏ-எல்விளையாட்டுக் கழகத்தின் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட தர்மலிங்கம் நடனேந்திரன் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று நாடு தழுவிய ரீதியில் 75 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகள் உள்ள னர். இவர்களிடம் 50 வீதமான பட்டதாரிகள் கீழ் உழைப்பில் உள்ளனர்.

வடக்கில் உள்ள வேலையற்ற பட்ட தாரி கள் அரச தொழிலை எதிர்பார்த்து 7,8 வருடங்களைக் கழித்துள்ளனர்.

உண்மையில் இந்த நிலை இனிவரும் காலங்களில் மாறவேண்டும். பட்டதாரிகள் ஒவ் வொருவரும் ஒவ்வொரு சாதனை படைக்க வேண்டும்.

படைப் பாளி களான பட்டதாரிகள் வேலையில்லை என்ற நிலையை விடுத்து சுயதொழில் தேடலில் ஈடுபட்டு சமூகத்தில் முன்னுக்கு வரவேண்டும்.

வடக்கிலும் சரி, நாடு தழுவிய ரீதியிலும் சரி 1999 இல் 10 ஆயிரம் பட்டதாரி களுக்கும், 2005 இல் 40 ஆயிரம் பட்டதாரி களுக்கும் வேலை வழங்கி அரசு களைத்து விட்டது.

தற்போது கடந்த 7 வருடங்களுக்கு மேலாக அரசு விண்ணப்பங்களைக் கோருகின்றது. ஆனால் வேலை வழங்கப்படுவதில்லை.

எனவே இன்றைய காலத்து இளைஞர்களின், பட்டதாரிகளின் மனங்களில் மாற்றம் வேண்டும்.

அதுவே புதிய சிந்தனைகளை தோற்றுவித்து தேசம் வளரவும், நாடு செழிக்கவும் உதவும்- என்றார். (ந)

# இயேசுவின் பாடுபட்ட திருமுகம் தெரியுதா?

இன்னும் அகதி முகாமுக்குள்.... முட்கம்பி வேலிக்குள், அநியாயச் சிறைக்குள், அரச ஆதிக்கத்தின் பிடிக்குள்... உணவருந்துவதற்கு மட்டுமல்ல பல வேலைகளைச் செய்வது என்னுடைய இடதுகரம் தான். நான் ஒரு காலத்தில் என்ரை பள்ளிக்கூடத்தில் அதிவேக ஓட்டச் சம்பியன். பள்ளிக்கூட விளையாட்டுப் போட்டிகளில் மட்டுமன்றி ஏனைய போட்டிகளிலும் சுறுசுறுப்பாக, உற்சாகத்துடன் பங்குபற்றி முன்னிலை வகித்தேன். இப்போ இடுப்புக்கு கீழே இயக்கம் இல்லை. அது அந்தக் கொத்துக்குண்டு செய்த வேலை.




''என்ர உடம்பு முழுவதும் இன்னும் ''செல்பீஸ்'' இருக்கு. என்ன செய்வது?

என்ர குடும்பம் நடுத் தெருவுக்கு வரக்கூடாது. ஏதோ என்னால் முடிஞ்ச சின்னச் சின்ன வேலைகளை செய்கிறேன்.'' ''என்ர அண்ணனை ஆமிக்காரர் உயிரோடு பஸ்ஸில் ஏற்றியதை கண்ணால் பார்த்தேன். ஆனால் அதுதான் அவனைக் கடைசியாகப் பார்க்கிறது என நான் நினைக்கவே இல்லை. என்ர கண் இன்னமும் கட்டித்தான் இருக்கு. எந்தச் சிறையில் இருக்கின்றேன் என்பது இன்னமும் எனக்கு தெரியவில்லை. தமிழ், சிங்களம் இந்த மொழிகளில் இருக்கிற எல்லா விதமான ''தகாத'' வார்த்தைகளிலும் அர்ச்சனை செய்து உடம்பில பூட்ஸ் காலால் மிதிக்காத இடமே இல்லை.

வருடக்கணக்காக வாங்கிக்கொண் டிருக் கிறதாலே எல்லாம் மரத்துப் போய்விட்டது.எனக்காவது பரவாயில்லை. எனக்கு பக்கத்து அறையில் ஒரே உயிர் போகும் சத்தம். ''எத்தனை தாய்மார்கள், எத்தனை சகோதரங்கள் இவர்கள் எல்லோரும் உயிரோட வர வேண்டும் என்று பிரார்த்தித்துக்கொண்டிருக்கிறார் களோ தெரியவில்லை!! திரும்பி வந்தாலும் நடமாடும் பிணம்தானே! அன்பர்களே! யாருக்கோ நடந்தது, நடந்து கொண்டிக்கின்றது என ஒரு காலத்தில் நாம் நினைத்தது எம் மத்தியிலும் நடந்தது. நடந்து முடிந்தது. இனியும் நடக்காது என்று எப்படிச் சொல்லலாம்...? என்ன தான் நடந்தாலும் நாம் திருந்தி விட்டோமா? இந்தத் தவக்காலத்தில் இதைப்பற்றிக் கொஞ்சம் சிந்திப்போம்.

அருட்திரு. ஜோசப் செல்வன்(செ.தா)

# பல்கலை விரிவுரையாளர்கள் எதிர்ப்பு

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், வெளியார்களினால் ஏற்பாடு செய்யப்படும் கருத்தரங்கு மற்றும் அவைபோன்ற வற்றில் கலந்து கொள்வதற்குத் தடைவிதித்து கல்வியமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்க சம்மேளனம் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது.

இந்தச் சுற்றறிக்கையின் படி அரச நிறுவனங்கள் அல்லாத ஏனைய அமைப்புக்களினால் ஏற்பாடு செய்யப்படும் கல்வி தொடர்பான நிகழ்வுகளில் அவர்கள் கலந்து கொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடைக்கு தாம் வெளிப்படையாக எதிர்ப்பைத் தெரிவித்ததாக சம்மேளனத்தின் தலைவர் நிர்மல் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், இந்த அசாதாரண சுற்றறிக்கை குறித்து கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் ஜீ. ஜீ. ஜயசிங்கவிடம் கேட்டபோது.

அவர்கள் அவ்வாறு வெளி நிகழ்வுகளில் கலந்துகொண்டு பல்கலைக் கழகத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்கிறார்கள் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையிலேயே அமைச்சரவையின் பணிப்புரைக்கு அமைய இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டதாகவும் மேலதிக செயலாளர் குறிப்பிட்டார்.

## விசேட மீள் பரீட்சை

இதழியல் டிப்ளோமா கற்கைநெறி முழுநேரம் அணி III (2008/2009) பகுதிநேர அணிII (2008/2010) கல்வியாண்டு மாணவர்களுக்கான விசேட மீள் பரீட்சை எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக் கானவிண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் விண்ணப்பப் படிவங்களை பெற்று பூர்த்தி செய்து பணிப்பாளர், ஊடக வளங்கள் ஊடாக அனுப்பிவைக்கு மாறு யாழ். ஊடக வளங்க ள் மற்றும் பயிற்சி மையப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ந)

## பொதுக் கூட்டம் 2012

### பழைய மாணவர் சங்கம், யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை

எமது கல்லூரியினது பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 15.04.2012 கல்லூரி மண்டபத்தில் தலைவர் திரு. எம். சாந்தசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது. க்ல்லூரியின் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

குறிப்பு:

பிரேரணைகள் இருப்பின் 13.04.2012 க்கு முன் கல்லூரி முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

செயலாளர்
N.B. பாலேந்திரன்

(16390) (6,7,10)

## மரண அறிவித்தல்

### காசிநாதர் கனகசிங்கம்

புத்தூர் மேற்கு சிவன்கோயிலடியைச் சேர்ந்த காசிநாதர் கனகசிங்கம் இயற்கை எய்திவிட்டார்.

அன்னார் கொழும்பு அபிராமி ரெக்ஸ்ரைல், புத்தூர் அம்பாள் புடைவையகத்தின் முன்னாள் உரிமையாளரும், பிரபல சமூக சேவையாளரும், சிவபக்தரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது புத்தூர் இல்லத்தில் (03.04.2012) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக குடும்ப மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
பேறாமக்கள், மருமக்கள்.

(16389) (7,9,10)

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு : 077 6979607

## மணமகள் தேவை

35 வயது நிரம்பிய நற்பண்புடைய இந்து உயர் கௌரவ குடும்பத்தைச்சேர்ந்த மணமகனுக்கு பொருத்தமான நற் பண்புடைய மணமகள் தேவை. மண மகன் சுயதொழில் செய்பவர் மாதாந்த வருமானம் ரூ. 25,000 மேல் கிரகபாவம் மிகக் குறைவு.

தொடர்பு : 078 9516249

## மணமக்கள் தேவை

★ யாழ். இந்து கௌரவ குடும்பம் 1973 ஆம் ஆண்டு பிறந்த உள்ளூராட்சி மன்றத்தில் வேலை பார்க்கும் மணமகனுக்கு சைவ போசன மணமகள் தேவை. நட்சத்திரம் - பூரட்டாதி கிரகபாவம் - 18

★ யாழ். இந்து கௌரவ குடும்பம். 1975 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் பிறந்த பூசம் நட்சத்திரம் கிரகபாவம் 10 லண்டன் P.R உள்ள மணமகனுக்கு சைவ போசன மணமகள் தேவை. மணமகன் தற்போது வந்துள்ளார்.

★ யாழ். இந்து கௌரவ குடும்பம் உயர் கல்வி கற்பதற்கு லண்டன் சென்றுள்ளார். 1988 ஆம் ஆண்டு சதய நட்சத்திரம் உடைய மணம கனுக்கு லண்டன் P.R உள்ள அசைவ போசன மணமகள் தேவை.

தொடர்பு: 078 301 7290, 021 321 2961

(14620) (45.6.7)

## ஜேர்மன் மொழியும் இலகுவழியும்

Germany, Swiss Deutsch மொழிகள் 9.04.2012 புதிய பிரிவுகள் ஆரம்பமாக உள்ளது. இலகுவான முறையில் Geethe Institute இனால் வழங்கப்படும் சான்றிதழுக்கு ஏற்றவாறு பிரபல்ய ஆசிரியர் மூலம் கற்பித்துத்தரப்படும்.

(எங்கள் மூலம் பல மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்)

Academy of Logic, Palaly Road, Jaffna
(இலுப்பையடிச் சந்திக்கு அருகில்) Mrs. Kones
T.P : 077 9629296

## பெயர் மாற்றம்

செல்வபுரம் உரும்பிராய் தெற்கு, உரும்பிராயைச் சேர்ந்த பரமசிவம் கனிஸ்ரா ஆகிய நான் எனது பெயரினை இன்றிலிருந்து பரமசிவம் ஜெனிஸ்ரா எனப் பெயர் மாற் றம் செய்வதோடு இன்றில் இருந்து சகல ஆவணங்களிலும் பரமசிவம் ஜெனிஸ்ரா எனக் கையொப்பம் இடுவேன் என்பதைச் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

- பரமசிவம் ஜெனிஸ்ரா

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன்
ஜெயக்குமார் ஆரூரன்
(யாழ். இந்துக்கல்லூரி)

2011 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் 9 ஏ, சித்தியடைந்துள்ளார். இவர் மேலும் பல சிறப்புகள் பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
அன்ரி
அக்கா (கோகிலா)

(சி/314) (45.6.7)

## வேலைவாய்ப்பு

நல்லூரில் இயங்கும் பிரபல சைவ ரெஸ்ரோரன்றிற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

* மேற்பார்வையாளர் 35 வயதுக்கு மேல் மும்மொழி தெரிந்திருத்தல் வேண்டும்.
* காசாளர், பெண்கள் விரும்பத்தக்கது.
* கணக்காளர், * சமையல் அறை உதவியாளர் (ஆண்),
* [illegible] (ஆண்)

தொடர்பு:021 222 8294, 077 7661083

## புத்தம் புதிய வீடு விற்பனைக்குண்டு

நல்லூர் செட்டித்தெருவில் அழகான புத்தம் புதிய மாடி வீடு தொழில்நுட்ப வல்லுனர்களால் வடிவமைக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு பூர்த்தியடைந்த நிலையில் விற்பனைக் குண்டு.

காணியை சுற்றி சுவர்களால் அமைக் கப்பட்ட இடம் சகல வசதிகளையும் உடைய புதிய வீடு முன்னு ரிமை அடிப்படையில் விலை நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:
0772470590 / 0778543106

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று (03.04.2012) பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் "கல்விமாணி" பட்டம் பெறும் எமது வித்தியாலய

**அதிபர் திருமதி ஆனந்தஈஸ்வரி இராஜரட்ணம்**

அவர்களையும் கணிதபாட

**ஆசிரியர் வேலும் மயிலும் முகுந்தன்**

அவர்களையும் மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று பார்போற்றிட வாழ்கவெனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யா/மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்**
**உப அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**

(சி/2973) (2-7-6)

---

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை**
**முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்**

## வணிகமாணி/ தொழில் நிர்வாக மாணி விசேட விரிவுரைகள்

எமது பீடத்தில் கல்விகற்று தவிர்க்கமுடியாத காரணங்களால் தொடர்ந்து கற்கமுடியாத 2 ஆம், 3 ஆம் வருட மாணவர்களுக்கான விசேட விரிவுரைகள் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதால் மாணவர்கள் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடாதிபதி அலுவலகத்தில் உரிய விண்ணபத்தைப் பெற்று பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களைப் பீடாதிபதி அலுவலகத்தில் 20.04.2012 அன்று அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

இது அவர்களுக்கு வழங்கப்படத் தீர்மானிக்கப்பட்ட இறுதிச் சந்தர்ப்பமாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**- பதிவாளர்.**

(சி/137) (2-7-6)

---

## வீரர்களின் போர்
## 12 ஆவது துடுப்பாட்டப் போட்டி

VS

6th 7th ஏப்ரல் 2012

*தலைமை*
திரு.கு.வேல்சிவானந்தன் (அதிபர் யா/மகாஜனக் கல்லூரி)
கலாநிதி ஆறு.திருமுருகன் (அதிபர் யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

**இடம்:-** யா/ மகாஜனக் கல்லூரி மைதானம்.
**காலம்:-** காலை 8.30

*பிரதம விருந்தினர்*
திரு.நாகமுத்து சாந்திநாதன் (மகாஜனன்)
(தலைவர் யா/ மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், கனடா)

*சிறப்பு விருந்தினர்*
திரு.எம் குமாரறூபன்
(ஸ்கந்தவரோதயன், சுவிற்சர்லாந்து)

கௌரவ விருந்தினர்
திரு.எம் நடராஜா (மகாஜனன்)
தலைவர், உதவிப் பணிப்பாளர், உடற்கல்வி, வலிகாமம் வலயம்.

## நண்பர்களின் போர்
8th ஏப்ரல் 2012

**இடம்:-** *யா/மகாஜனக்கல்லூரி மைதானம்.*
**காலம்:-** காலை 08.30

*பிரதம விருந்தினர்*
திரு. பொன்னுத்துரை பாலகுமார் (மகாஜனன்)
(முகாமையாளர் இலங்கை வங்கி, சுன்னாகம்)

*சிறப்பு விருந்தினர்*
திரு. நடராஜா சண்முகவேல் (ஸ்கந்தவரோதயன்)
அகில இலங்கை சமாதான நீதிவான்

*கௌரவ விருந்தினர்*
*லயன் திரு. செல்லத்துரை மகாதேவன் J.P.*
லயன் திருமதி. பூமாதேவி மகாதேவன் (மகாஜனன்)

அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்

*யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.* *யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.*

---

## தவறிவிட்டது

NW VR 8933 எனும் இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் பதிவுப் புத்தகம் 22.02.2012 இல் இருந்து சாவகச்சேரிக்கும் யாழ்ப்பாணத் துக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத் தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். T.P.0772892975

## வாகன (கார்) சாரதி தேவை

நற்குணமுள்ள தீய பழக்கவழக்கமற்ற 45 வயதுக்கு மேற்பட்ட அனுபவமுள்ள வாகன (கார்) சாரதி தேவை. மாதச் சம்பளம் வழங்கப்படும். தொடர்பு:- 077 6560003

## மரண அறிவித்தல்



**திருமதி. பாலன் சயிலா**

கொக்குவில் மேற்கு கொக்குவில் வராகியம்மன் கோவில் வீதி, கேணியடியை பிறப்பிடமாகவும், இல. 1/7, CDI Apartment, மெனிங் பிளேஸ், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. பாலன் சயிலா 01-04-2012 அன்று காலமானார். இவர் பரராஜசிங்கம் சிவஞானமலர் ஆகியோரின் அன்பு மகள் ஆவார் அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல் : பாலன் கணவர்.
தொலைபேசி : 072 2685442/0777872763

---

## மரண அறிவித்தல்

### திருமதி மேரி ஆன் பொன்றோஸ் பல்தசார்



மாதகல் பத்திமா வீதியில் பிறந்து, வளர்ந்து, கொழும்பிலும் பின்பு நோர்வேயிலும் குடும்பத்துடன் வாழ்ந்த திருமதி மேரி ஆன் பொன்றோஸ் தனது 88ஆம் வயதில் 26.03.2012 நோர்வேயில் காலமானார்.

அன்னார் அமரர் மனுவேற்பிள்ளை பல்தசாரின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுவாம்பிள்ளை பிரான்சிஸ்-வரோனிக்கா தம்பதியினரின் இளைய மகளும், பொன்ராசா பல்தசார் (சட்டத்தரணி-கனடா), ஆனந்தராசா (இளைப்பாறிய கிராம அலுவலர்-இலங்கை), றஞ்சினி (பிரான்ஸ்), சறோஜினி (கனடா), சாமினி (நோர்வே), பத்மினி (நோர்வே), இராஜ்குமார் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற மேரி ஜோசபின் (பேபி), றெஜீனா (பபி, ஆஸ்திரேலியா), றெஜி-பிரான்சிஸ் (கனடா), ஜோ பிரான்சிஸ் (கொழும்பு), Dr. ஜீவம் பிரான்சிஸ் (மட்டுநகர்), இராஜன் பிரான்சிஸ் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்றவர்களான ஜோசப் சவுந்தரநாயகம், இம்மானுவேல், அரசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், றுக்மணி (கனடா), வசந்தி (ஆசிரியை, கிளி/செல்வநகர்), அந்தோனிப்பிள்ளை (பிரான்ஸ்), சச்சிதானந்தன் (கனடா), ஜேம்ஸ் (நோர்வே), காலஞ்சென்ற தேவசகாயம் பிரான்சிஸ் (நோர்வே), செல்லினி (நோர்வே) ஆகியோரின் பிரிய மாமியும், கனடாவில் வசிக்கும் ராதிகா, சங்கர், இலட்சுமணா, பிரான்ஸில் வசிக்கும் கண்ணன் (செலின்), ரமேஸ் (டெல்வின்), வள்ளுவன், ஈழநாதன் (அமுதன்), சுகந்தி, ஆஸ்திரேலியாவில் வசிக்கும் வசந்தன் (சுபாஸ்), தமயந்தி, இலங்கையில் வசிக்கும் (நிமல்ராஜ்), ஜெயந்தி, தயானந்தி, நோர்வேயில் வசிக்கும் நவநீதன், நளாயினி (மாட்டீன்), அரவிந்தன், மைதிலி, வாசுகி, ஜானகி, தேவகி, ராஜினி, நந்தினி, ஸ்ரெவன் ஆகி யோரின் பேர்த்தியும், சோவியா, பிறீடா, மக்ஸன், மனோன் ஆகியோ ரின் பூட்டியுமாவார்.

அன்னாரது இறுதி நல்லடக்க ஆராதனை (04.04.2012) புதன்கிழமை 'ஓல்கோர்ட்' நோர்வேயில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Tel: 0047 51618175
0047 51617423
0047 51669692

தகவல்:
ப.லோ.இ. [illegible] (மகன்)
585, 'தயா[illegible]' செல்வநகர்,
கிளிநொச்சி.

(14092) (6,7,10)

---

## மரண அறிவித்தல்



### வேலுப்பிள்ளை மகிழ்ராஜன் (மகிழ் அண்ணை)

வட்டு. மேற்கை பிறப்பிடமாகவும், வட்டு. கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை மகிழ்ராஜன் அகாலமரணமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை (முன்னாள் விதானை யார் - இரத்தினேஸ்வரி அம்மா தம்பதியரின் அன்புமகனும், காரைநகர் களபூமியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சதாசிவம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாதேவியின் (வட்டு. இந்துக் கல்லூரி ஆரம்பப் பாடசாலை பிரிவு தலைமை ஆசிரியை) அன்புக் கணவரும், சுகந்தனின் அன்புத் தந்தையும், மனோராஜ், புவனதேவி, சறோஜினிதேவி, சிவஞானதேவி, மங்களேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், செல்வரஞ்சிதன் (செல்வண்ணை), மகாலிங்கம், யோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், வேலாயுதத்தின் சகலனும், காலஞ்சென்ற சோமசுந்தரம் (காரைநகர் முன்னாள் விவாகப்பதிவாளர்) மற்றும் சிவபாக்கியத்தின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கியாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு. கிழக்கு,
சித்தன்கேணி.

(சி/316) (45,6,7)

தகவல்:
**கமலாதேவி (மனைவி)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபான்ஸ் வருடப் பிறப்பு

நிறையக் கொடுக்கல் – நிறைய வாங்கல்

40% வரை தள்ளுபடி

பணம் சேமிப்பு

மின்சாரச் சேமிப்பு

# வாங்கினால் விசேஷம் கையிலே காசு மிச்சம்.



LG Life's Good

## LED தொலைக்காட்சிகள்

37,990/- ரூபாவிலிருந்து

உங்கள் பணத்தை மிச்சப்படுத்தி இந்தப் புதுவருடத்தில் உங்கள் வாழ்க்கையை மேலும் வண்ணமயப்படுத்தும்.

• மிகக் குறைந்த மின் பாவனை • 40% வரையான தள்ளுபடி

டொலரின் பெறுமதி அதிகரிப்பதனால் பண்டிகைக் காலத்தின் பின்னர் விலை அதிகரிக்கப்படலாம். இந்தப் பண்டிகைக் காலத்தில் மேலதிக சலுகைகளை வழங்கும் கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதற்கு அபான்ஸ் காட்சியறைகளுக்கு இன்றே விரையுங்கள்.

அபான்ஸிலிருந்து பொருளொன்றை கொள்வனவு செய்வதன் மூலம் பணமும் நேரமும் மீதமாகும்.

REDLIME

## நமது காலத்திற்கேற்ற எமது சேமிப்பு நாயகன்

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

Abans

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம்,ஏப்.3
கீரிமலை நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வர ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழாஇன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளது. (வ)

* * *

வடமராட்சி, ஏப்.3
அச்சுவேலி, வளலாய் ஞானவைரவர் கோயில் வருடாந்த பெருந்திருவிழா நாளை மறுதினம் வியாழக் கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனையுடன் உற்சவம் ஆரம்பமாகி நடைபெற்று மாலையில் சுவாமி வீதிவம் வந்து பக்தர்களுக்கு அருட்காட்சி வழங்குவார். (வ-8)

* * *

மேலைப் புலோலி வாணர் குடியிருப்பு, கொக்கன் கலட்டி முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் இன்று செவ் வாய்க்கிழமை ஆரம்பமாகி, நாளை புதன்கிழமை பகல் 11.30 மணிக்கு விசேட பூசை நடைபெற்று பிற்பகல் 1.30 மணிக்கு நிறைவுபெறும். (ம-8)

* * *

மூளாய் ஸ்ரீ முத்துக்குமார சுவாமி ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நாளை புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மறுநாள் வியாழக்கிழமை பகல் 11 மணியளவில் தீர்த்தத் திருவிழாவும் மாலை கொடியிறக்கமும் இடம் பெறும். (ம-14)

# 5 இலங்கையர் உட்பட 24 பேர் மலேசியாவில் மடக்கிப் பிடிப்பு

மலேசியாவுக்குள் சட்டவிரோதமாக நுழைய முயற்சித்தனர் எனக் கூறப்படும் 5 இலங்கையர்கள் உள்ளிட்ட 24 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ரெலா உறுப்பினர்கள் 6 பேர் உள்ளிட்ட மலேசியாவின் பென் கெராங் கிராமவாசிகள் 20 பேர் இணைந்து குறித்த 24 வெளிநாட்டவர்களையும் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

வான் மற்றும் இரு கார்களில் வந்திறங்கிய 24 வெளிநாட்டவர்கள் பென்கெராங் கிராமத்தில் 10 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தப்படாமல் உள்ள பாடசாலை ஒன்றுக்குள் செல்ல முயற்சித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்களில் 14 ஆப்கானியர்களும் 3 பாகிஸ்தானியர்களும் 5 இலங்கையர்களும் அடங்குகின்றனர்.

கைது செய்யப்பட்டுள்ளவர்களின் கடவுச்சீட்டு செல்லுபடியானதா இல்லையா என்பது குறித்து மலேசிய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்கள் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டால் மலேசிய ஆள்கடத்தல் சட்டத்தின் கீழ் 15 வருட கால சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டிவரும் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# கச்சதீவு அருகே மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை தாக்குதல்

இராமேஸ்வரம் பகுதியில் இருந்து கடந்த சனிக்கிழமை காலை 500 விசைப்படகுகளில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் சென்று கச்சத்தீவு அருகே மாலை வலை விரித்து மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

30 இலங்கை கடற்படையினர் 6 சிறிய ரோந்து கப்பல்களில் அங்கு சென்று இராமேஸ்வரம் மீனவர்களை விரட்டியடித்தனர் என்று இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதனால் இராமேஸ்வரம் மீனவர்கள் வலைகளை எடுத்துக் கொண்டு அவசர அவசரமாக வேறு பகுதிக்குச் சென்றுவிட்டனர்.

இலங்கை கடற்படையினர் விரட்டியடித்ததால் அவர்கள் மீன் பிடிக்காமல் தவித்தனர். பின்பு இரவு மீன் பிடித்துக் கொண்டு இன்று அதிகாலை கரைக்குத் திரும்பியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடுக்கடலில் இலங்கைக் கடற்படையினர் தங்களை விரட் டியடித்த சம்பவம் குறித்து மீன்வளத்துறை அதிகாரியிடம் மீனவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர் என்று அந்தச் செய்திகள் கூறுகின்றன. (வ)

## நீர் விநியோகத்தை விஸ்தரிக்குக

சுன்னாகத்திலிருந்து நவாலி கொத்துக்கட்டி வரை செல்லும் நீர் விநியோகத்தை ஆணைக்கோட்டை வரை விஸ்தரிக்குமாறு அந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

இந்த நீர் விநியோகம் தற்போது சுன்னாகத்திலிருந்து மானிப்பாய்- கட்டுடையூடாக நவாலி கொத்துக்கட்டி மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

எனவே இந்த விநியோகத்தை நவாலியூடாகவே ஆனைக்கோட்டைக்கும் நவாலியின் ஏனைய பகுதிக்கும் விஸ்தரிப்பு செய்து தருமாறு கேட்டுள்ளனர். (வ-100)

# சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஏப்.3
கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகின.

இதன் அடிப்படையில் பாடசாலை அதிபர்கள் அனுப்பி வைத்த மாணவரின் பரீட்சைப் பெறுபேறுகள் வருமாறு.

**பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்**

பா. ஜனனி- 3ஏ 3சி 2எஸ், ப.மயூரன் 3ஏபி2சி3எஸ், வி.செந்தூர்க்குமரன் - 2ஏ 3பி 2சி 2எஸ், சோ.ஜனனி - 2ஏ3பிசி2எஸ், வ.விதுஷன் -2ஏ2பி4சி எஸ், கு.கோகுலன்- 2ஏ 2பி 3சி 2எஸ்.

**தொண்டமானாறு மகா வித்தியாலயம்**

அ.துவாரகா -5ஏ 3பி சி, இ.சுமித்திரா - 4ஏ3பி2சி, இ.நிதர்சினி - 3ஏ2பி3சி, எஸ், த.நிதர்சினி 2ஏ 4பி 3சி, கோ.ஸ்ரீகிருஷ்ணா - 3ஏ 3சி 2எஸ், சு.கலியுகன் - ஏ 2பி 5சி, அ.ஜீவராஜ் - ஏ 2பி 4சி 2எஸ், த.கௌதமி- ஏ 2பி 2சி 3எஸ், உ.கிருஷிகா -ஏ பி 2சி 4எஸ், லோ.சிந்துஜா - ஏ பி 2சி 4எஸ், ஜி.ஜனந்தன் - ஏ பி சி 4எஸ், சி.சிவாஞ்சலி- ஏ 5சி 3எஸ், ச.சக்திகா - ஏ 5சி 3எஸ், அ.றொசான் -ஏ 4சி 3எஸ், அ.பிரியதர்சினி - ஏ 4சி 4எஸ், நா.அஜந்தன் - ஏ 3சி 4எஸ் மா.சுயாத்தா - ஏ 3சி 4எஸ், யோ.தனுஷன்- 2பி 2சி 4எஸ், கு.கபிலன்- பி 2சி 4எஸ், கி.சுதர்சினி- ஏ 3சி 2எஸ்.

**கற்சிலைமடு அரசினர் தமிழ்கலவன் பாடசாலை**

ந. நவநீதன்- 3ஏ 3பி 2சி, கே.தர்சா-2ஏ பி 3சி 2எஸ், சி.கோபிகா- ஏ 2பி 5சி, சி.கோசிகா- ஏ 4பி சி 2எஸ், சு.அர்ச்சனா-ஏ 2பி 3சி எஸ், க.தனுஸ்- ஏ பி 4சி 2எஸ், சி.விஜயதாஸ்-4சி 4எஸ், த.அனோசன்- பி 3சி 4எஸ், எஸ்.மதுவந்தி-ஏ பி 4சி 2எஸ், ச.தர்சிகா-ஏ, 2பி 5எஸ், ச.தர்மிலா-ஏ 2பி 2சி 3எஸ், த.ஜனகன்-ஏ 3சி 3எஸ், சி.வினோஜன்- ஏ 2பி சி 4எஸ். (வ-28)

## தையல் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

நவாலி சத்தியசாயி தொழிற்பயிற்சி நிலையத்தின் தையல் பயிற்சி நெறி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சி 6 மாத காலங்கள் இலவசமாக வழங்கப்படும். பயிற்சி நெறியில் இணைய விரும்புவோர் நவாலியில் உள்ள சத்தியசாயி தொழிற்பயிற்சி நிலையத்துடன் தபால் மூலம் அல்லது நேரில் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-14)

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**நாளை**
பங்குனி 22 புதன்கிழமை 04.04.2012
திதி: துவாதசி கா 07.26 வரை
நட்சத்திரம்: பூரம் பி.இ 04.09 வரை
சுபநேரம்: 4.39-06.09 வரை,
ராகு காலம்: 12.09- 01.39 வரை




**மேடம்:** இன்று பல பணிகளும் தொடர்ச்சியாக இருக்கும். தொய்வில்லாமல் செய்து முடிப்பீர்கள். சில செலவுகளை யோசிக்காமல் மேற்கொள்வீர்கள். அவசர வேலையின் பொருட்டு, சிறு பிரயாணம் ஒன்று இருக்கும். குடும்ப விடயங்களில் தங்களின் மனமாற்றம் சந்தோஷத்துக்கு வழிவகுக்கும். பணியில் எதிர்பார்த்த நிகழ்ச்சி ஒன்று நடக்கும்.



**இடபம்:** இன்று மனநிறைவான சூழ்நிலை நிலவும். நீண்ட நாள்களாக நீங்கள் செய்ய நினைத்த பணி ஒன்றை இன்றே செய்து முடிப்பீர்கள். உறவினர் ஒருவரின் சந்திப்பு சில தகவல்கள் தெரிந்து கொள்ள ஏதுவாக அமையும். கொடுக்க வேண்டிய மற்றும் வரவேண்டிய பணங்களை பட்டியலிட்டு துரிதப்படுத்திச் செயற்படுவீர்கள்.



**மிதுனம்:** இன்று தெய்வ சிந்தனை மோலோங்கி நிற்கும். சில காரியங்களை அவசரமாக, அவசியமாக செய்ய வேண்டியதாக இருந்தபோதும், நிதானத்தோடு செயற்படுவீர்கள். மனைவியின் கருத்துக்கள் அதிகம் யோசிக்க வைத்தபோதும், கோபப்படாமல் கருத்தில் கொள்ளுங்கள். வாகன வகையில் செலவுகள் இருக்கும்.



**கடகம்:** இன்று எதிர்பாராத செலவுகளோடு ஆரம்பமாகும். பணி நிமித்தமான பயணங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கும். சில காரியங்களை குழப்பத்தோடு ஆரம்பித்தபோதும், செய்து முடிப்பீர்கள். தொழில் பங்குதாரர்களோடு சந்திப்பும், அடுத்து செய்ய வேண்டிய பணிகளையும் திட்டமிடுவீர்கள்.



**சிங்கம்:** இன்று ஒவ்வொரு காரியத்திலும் மறதி மற்றும் தாமதங்களால் அல்லல்பட நேரலாம். எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்ய வேண்டாம் என்பதை ஒரு குறிப்பு எடுத்துக் கொண்டு செயற்படுதல் அவசியம். பணியில் தங்களின் செயற்பாடு பாராட்டுப் பெற வைக்கும். பாசமான நண்பர்களுக்காக செலவுகள் இருக்கும்.



**கன்னி:** இன்று வீட்டு வசதிகளை அதிகப்படுத்திக் கொள்வீர்கள். குடும்ப காரியம் ஒன்றுக்காக தீவிரமான சிந்தனை கொள்வீர்கள். தொழில் வகையில் தங்களின் நினைப்புக்கு எதிர்மறையான செயற்பாடுகள், தங்களை அதிகம் யோசிக்க வைக்கும். அவசரப்பட்ட நடவடிக்கைகளைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.



**துலாம்:** இன்று இனிய நாள். சந்தோஷமான செய்திகளும், பிரியமானவர்களின் வருகையும் இருக்கும். நண்பர் ஒருவருக்காக உதவிகள் மேற்கொண்டு, தங்களின் பணம் விரையமாகலாம். கருத்துவேறுபாடுகள் கொண்ட உடன்பிறப்புகளோடு சமாதான முயற்சிகளை மேற்கொள்வீர்கள்.



**விருச்சிகம்:** இன்று யுக்தி புத்தி யோசனையுடன் செயற்படுவீர்கள். கடந்த நாள்களில் ஏற்பட்ட தவறுகளைக் கணக்கெடுத்து, திரும்பவும் வராமல் செயற்பட சபதம் கொள்வீர்கள். வீட்டுத் தேவைக்காக, விருப்பப்பட்ட பொருள் ஒன்றுக்காக, அதிகப்படியான அலைச்சல் இருக்கும். தாயாரைப் பற்றிய சிந்தனை அடிக்கடி வந்து போகும்.



**தனுசு:** இன்று தொழில் வளர்ச்சிக்காக புதிய திட்டம் ஒன்றை வரையறை செய்வீர்கள். உடல்நிலையில் சிறு சுணக்கம் ஏற்பட்டபோதும், பொருட்படுத்தாது பணிகளை மேற்கொள்வீர்கள். சில விடயங்களுக்காக யோசிக்காமல், செலவுகளை மேற்கொள்வீர்கள். மாலையில் குடும்பத்தோடு தெய்வ தரிசனம் மேற்கொள்ள வாய்ப்பு உண்டு.



**மகரம்:** இன்று கடந்த இரண்டு நாள்களாக நிலவிய சோம்பல் நீங்கி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். எதிர்பார்த்த பண வரவு இருக்கும். சில காரியங்களை உங்கள் அணுகுமுறையால் வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். உடன்பிறப்புகளுக்காக கொடுத்த பணத்தைத் திருப்பிக் கேட்பதில் தயக்கம் ஒரு பக்கம், சில அவசியச் செலவுகளுக்காக கடன்களை எதிர்பார்ப்பது மறுபக்கம் என்ற நிலையில் இருக்கும்.



**கும்பம்:** இன்று ஒரு குழப்பமான மனநிலையோடு இருப்பீர்கள். இதைச் செய்வதா அதைச் செய்வதா என்ற நிலை ஒவ்வொரு காரியத்திலும் நிலவும். ஓரளவிற்கு காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். ஒரு விடயத்துக்காக பணத்தை எடுத்துக் கொண்டு, அந்தப் பணத்தை மற்றொரு விடயத்துக்காக பயன்படுத்துவீர்கள். வெளிவட்டாரப் பழக்க வழக்கம் விரிவடையும்.



**மீனம்:** இன்று மன திருப்தியோடு ஒவ்வொரு காரியத்தையும் மேற்கொள்வீர்கள். நீண்ட நாள்களாக வராத பணம் ஒன்று, இன்று கைக்கு வந்துசேரும். நண்பர்கள் மூலம் நல்ல வாய்ப்புகள் கிடைக்கப்பெறும். வாய்ப்புகளை வளைந்து கொடுத்து பயன்படுத்திக் கொள்ள முயற்சியுங்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | 6 | | | | | | 8 |
| | | | 1 | | | 9 | 5 | |
| 1 | 9 | | 4 | 2 | | 3 | | 6 |
| 5 | | | | | 7 | | | 9 |
| | 7 | | 8 | 6 | 2 | | 3 | |
| 3 | | | 5 | | | | | 7 |
| 6 | | 3 | | 5 | 9 | | 4 | 2 |
| | 5 | 2 | | | 1 | | | |
| 7 | | | | | | 1 | | 5 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 6 | 7 | 3 | 8 | 1 | 9 | 2 | 5 |
| 1 | 3 | 2 | 7 | 9 | 5 | 4 | 8 | 6 |
| 5 | 9 | 8 | 4 | 2 | 6 | 3 | 1 | 7 |
| 7 | 5 | 9 | 1 | 6 | 8 | 2 | 3 | 4 |
| 8 | 4 | 6 | 5 | 3 | 2 | 1 | 7 | 9 |
| 3 | 2 | 1 | 9 | 7 | 4 | 6 | 5 | 8 |
| 2 | 8 | 3 | 6 | 5 | 9 | 7 | 4 | 1 |
| 9 | 1 | 5 | 2 | 4 | 7 | 8 | 6 | 3 |
| 6 | 7 | 4 | 8 | 1 | 3 | 5 | 9 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் மீண்டும் புலி தேடும் படை

## சந்தேகநபர் ஒருவர் கைது

திருகோணமலை, ஏப்.3

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்குள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் ஊடுருவி உள்ளதாகப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன என்று செய்திகள் வெளியான பின்னணியில் கிழக்கில் மீண்டும் தேடுதல் நடத்தினர் படையினர். மேலதிக இராணுவத்தினர் குவிக்கப்பட்டு கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் நேற்றும் நேற்றுமுன்தினமும் இருநாள்களாக இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இந்தத் தேடுதல் வேட்டை தொடர்வதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

திருகோணமலை அன்பு வழிபுரம், திருகோணமலை - அநுராதபுரம் சந்தி, மட்டக்களப்பு, அம்பாறை பகுதிகளில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அண்மையில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவரின் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலி இயக்கத்தைச் சேர்ந்தவர் எனச் சந்தேகிக்கப்படும் ஒருவர் வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே இந்தத் தேடுதல் நடத்தப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் அறிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் தனது முதற்கட்ட வாக்குமூலத்தில், இந்தியாவிலிருந்து விடுதலைப் புலி உறுப்பினர்கள் இலங்கை வந்திருப்பதாகக் கூறினர். அது தொடர்பில் கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் தேடுதல் நடத்த இராணுவத்தினருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இராணுவத்தினர் நடத்திய தேடுதலின்போது விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் எனச் சந்தேகிக்கப்படும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 2002ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து இவர் வெளியேறி இருந்ததாக விசாரணையின் மூலம் தெரியவந்துள்ள தாகப் பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்டவர் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து வெளி யேறிய போதும் அவர் புனர் வாழ்வு நிலையத்துக்குச் செல்லாமல் தலைமறைவாக இருந்தார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, விடுலைப் புலிகள் மீண்டும் இலங்கைக்குள் ஊடுருவி விட்டனர் என்ற சாட்டில், முன்னாள் போராளிகளை மீண்டும் கைது செய்து தடுப்பு முகாம்களுக்கு கொண்டு செல்லவே இந்தத் தேடுதல் வேட்டை நடத்தப்படுவதாக கிழக்கு மாகாண மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

தேடுதல் வேட்டையைத் தொடர்ந்து புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் பலரும் உயிரைக்கையில் பிடித்தபடி அச்சத்துடன் இருப்பதாகவும் கூறப்படுகிறது. (ஙு-10)

(முன்னர் வந்த செய்தி 19 ஆம் பக்கத்தில்)

## குருதிக்கொடை நிகழ்வுகள்

முள்ளியவளை,ஏப்.3

முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையின் இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள இரத்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு, இங்குள்ள பாடசாலைகளில் குருதிக் கொடை முகாம் நடை பெற்று வருகின்றது.

இதுவரை காலமும் இந்த வங்கிக்குத் தேவையான இரத்தத்தைப் படையினரே வழங்கி வந்தனர். எமது உறவுகளுக்குத் தேவையான இரத்தத்தை இந்தப் பகுதியில் வாழும் மக்களிடம் பெற்றுக் கொள்வதற்காக வைத்தியர்கள் எடுத்த முயற்சியின் பயனாக இந்த குருதிக்கொடை நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த 29 ஆம் திகதி முல்லைத்தீவு மகாவித்தியாலய மாணவர்களும் ஆசிரியர்களும் குருதிக்கொடையில் ஈடுபட்டனர். 30 ஆம் திகதி குமுழமுனை மகா வித்தியாலய மாணவர்களும் ஆசிரியர்களும் குருதிக் கொடை யில் ஈடுபட்டனர்.

அத்துடன் இந்தக் குருதிக்கொடை நிகழ்வுக்கான துண்டுப் பிரசுரங்களையும் வ அனுசரணையையும் இந்தப் பகுதி வர்த்தகர்கள் சிலர் வழங்கினர்.

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

# செட்டிகுளம் மக்களுக்கு மீண்டும் இடர் நேற்றும் இடியுடன் கூடிய மழை

## பிரிட்டன் எம்.பியும் வந்து பார்த்தார்

வவுனியா, ஏப்.3

வவுனியா செட்டிகுளம் இடைத்தங்கல் முகாமில் நேற்று மீண்டும் இடியுடன் கூடிய கடும் மழை கொட்டித் தீர்த்தது.

கடந்த 31 ஆம் திகதி பெய்த கனமழை மற்றும் மினி சூறாவளி அங்கிருந்த தற்காலிக வீடுகளை பிடுங்கி எறிந்து கோரத்தாண்டவம் ஆடியது. இதனால் 2, 000 பேர் நிர்க்கதியாகினர். அவர்களுக்கு தறப்பாழ்கள் வழங்கப்பட்டன. அவற்றைக்கொண்டு மக்கள் தற்காலிக கூடாரங்களை அமைத்திருந்தனர்.

நேற்றைய மழையை அடுத்து அந்தக் கூடாரங்களுக்குள்ளும் தண்ணீர் புகுந்தது.

சுமார் ஒரு மணி நேரம் நீடித்த இந்த மழை காரணமாக மக்கள் மீண்டும் அவல நிலைக்கு தள்ளப்பட்டனர்.

தொடர்ந்து மழை பெய்ததால் கதிர்காமர் முகாமில் இருந்து மக்களுக்கு சமைத்த உணவுகளை வழங்க வவுனியா அரச செயலகம் ஏற்பாடு செய்திருந்தது.

இதேவேளை வவுனியாவிலும் ஏனைய இடங்களிலும் பரவலாக மழை பெய்ததாக உதயன் செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை, இடைத்தங்கல் முகாமில் கடந்த 30 ஆம் திகதி பெய்த கனமழை மற்றும் மினி சூறாவளி காரணமாக சேதமடைந்த பகுதிகளை பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர் நோர்த் நேஷ்ரி நேற்று நேரில் சென்று பார்வையிட்டார். பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து நிலைமைகளை கேட்டறிந்தார்.

நேற்றுக் காலை விசேட ஹெலி மூலம் கதிர்காமர் முகாமிற்கு வருகை தந்த இவர் அங்கு சேதத்துக்குள்ளான பகுதிகளை பார்வையிட்டார். தொடர்ந்து ஆனந்தகுமாரசாமி முகாமுக்கும் சென்ற அவர் அங்கும் சேத விவரங்களைப் பார்வையிட்டார்.

**இடைத்தங்கல் முகாமில் கடந்த 31 ஆம் திகதி பெய்த கனமழை மற்றும் மினி சூறாவளி காரணமாக சேதமடைந்த பகுதிகளை பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர் நோர்த் நேஷ்ரி நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.**

போர் முடிவுக்கு வந்த பின்னர் வவுனியாவில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயும் நோக்கிலேயே பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் வவுனியாவுக்கு வருகை தந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. இவருடன் இலங்கை வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளும் வருகை தந்திருந்தனர்.

(உ-10-400)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
சுப்பிரமணியம் சிறீகாந்தன்

கடந்த 04.03.2012 ஞாயிற்றுக் கிழமை அன்று சிவபதமடைந்த எமது குலவிளக்கு அமரர் - சுப்பிரமணியம் சிறீகாந்தன் அவர்களின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் மற்றும் ஆத்மசாந்தி பிரார்த்தனைகளும் 03.04.2012 ந.ப. 12.00 மணியளவில் நடைபெற்று அதனைத்தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் இருப்பதால் தாங்களும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

(தயவு செய்து இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம்

16391)(6-7-8)

மனைவி, பிள்ளைகள்

மரண அறிவித்தல்

வைரமுத்து தளையசிங்கம்

(முன்னாள் சாரதி இ.போ.ச)



யாழ்ப்பாணம் கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து தளையசிங்கம் (01.04.2012) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து–கண்ணகை தம்பதியரின் அன்பு மகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தையா -அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சுதாகரன் (சுதா) சுகிர்தா (சுமதி) ஆகியோரின் அன்புத் தந்தையும் மலர் காலஞ்சென்ற பகவத்சிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் இரவிச் சந்திரன் (மலேரியா தடுப்புப் பிரிவு,சுகாதாரப் பணிமனை -நல்லூர் ),சாந்தினி ஆகியோரின் அன்பு மாமனும் சுவேதிகன் ,சாயித்தியன்,தர்சியான், செல்சியா, கஜவதனன், துஸ்மிகா,அஸ்வினிஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற இராசமணி(ஆசிரியர்), பிறேமாபகவத்சிங்கம்,தர்மலிங்கம் ,காலஞ்சென்றவர்களான நற்குணம் ,இராசமணி மற்றும்செல்வரத்தினம் சிவராசா ,இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2012) செவ்வாய்க்கிழமை பி.ப.2.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

24/2 பாரதி வீதி ,கச்சேரி கிழக்கு யாழ்ப்பாணம்

தகவல்: குடும்பத்தினர்.

## ஈழ அகதிகளுக்கும் மருத்துவக்காப்பீடு

யாழ்ப்பாணம், ஏப்.3

தமிழக அரசின் விரிவான மருத்துவ காப்பீடுத் திட்டம், இலங்கை அக திகளுக்கும் விரிவாக்கப் பட உள்ளது. இங்குள்ள 117 முகாம்களில் இலங் கைத் தமிழர்கள் வசிக் கின்றனர்.

இவர்களில், குடும்பத் தலைவர்களுக்கு 1000 ரூபா வழங்கப்படுகிறது. அத்தியாவசியப் பொருள்கள் மானியத்தில் வழங்கப்படுகின்றன. இந்த நிலையில் முதல்வராக ஜெயலலிதா பொறுப்பேற்றவுடன் விரிவான மருத்துவகாப்பீடுத் திட்டத்தை அறிவித்தார்.

இதில் உயர்தர சிகிச்சை பெறலாம். இந்தத் திட்டத்தை அகதிகளுக்கும் விரிவாக்க, தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இது தொடர்பான புள்ளி விவரங்களை, அதிகாரிகள் அனுப்பியுள்ளனர். விரிவாக்கம் குறித்த அறிவிப்பு விரைவில் வெளியிடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

தவறி விட்டது

(NPSC2190)எனும் இலக்கமுடைய வாகனத்தின் இலக்கத்தகடு 30.03.2012 அன்று சுன்னாகத்துக்கும் கோண்டாவில் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. ... துடன் தொடர்பு கொள்ளவும்.தொ.பே 0778448020




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா வேலாயுதபிள்ளை (சின்னத்துரை)

(ஓய்வுபெற்ற இ.போ.ச.சாரதி)



தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வேலாயுதபிள்ளை நேற்று (02.04.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் மகனும் சரஸ்வதியின் (மாம்பழம்) அன்புக் கணவரும் பரமலிங்கம், காலஞ்சென்றவர்களான கண்மணி அம்மா, வீரசிங்கம், தங்கச்சியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் தேவராசா, தவமணி, காலஞ்சென்றவர்களான நவரத்தினம், தியாகராசா, நமசிவாயம், மகேஸ்வரி, நடராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2012) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் ஒரு மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி வீதி, தாவடி வடக்கு,
கொக்குவில்

தகவல்:
சரஸ்வதி வேலாயுதபிள்ளை
(மனைவி -மாம்பழம்)

## திருமதி கமலாதேவி கமலேஸ்வரன்



புங்குடுதீவு, 7 ஆம் வட்டாரம், ஊரதீவைப் பிறப்பிடமாகவும் பத்தினிபுரம், பாலம்போட்டாறு, திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி கமலேஸ்வரன் 30.03.2012 வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - சற்குணம் தம்பதியரின் அன்பு மகளும் கமலேஸ்வரனின் அன்பு மனைவியும் தர்மலிங்கம் - தேவகியம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் டினேஷ்வரன், ரமேஸ்குமார், அதிசன் ஆகியோரின் அன்புத் தாயும் கந்தசாமி, யோகநாதன் (பிரான்ஸ்), பாஸ்கரன்(பிரான்ஸ்),காலஞ்சென்ற திருச்செல்வம் (சுவிஸ்) மற்றும் கலைச்செல்வன், நகுலாதேவி (மஞ்சுளா - சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் லோஜினி (ஆஸ்திரேலியா), தமிஸ்வரன் (ஆஸ்திரேலியா), சமேஸ்வரன் (கட்டார்), கேசவர்தன், கேசயானி, தவமணிதேவி(தவம்), வசந்தகுமாரி (பிரான்ஸ்), சாந்தினிதேவி (பிரான்ஸ்), அன்பழகி (சுவிஸ்), அன்பழகன் (சுவிஸ்), முருகையன் (ஆஸ்திரேலியா), நரேந்திரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (01.04.2012) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பாலம்போட்டாறு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Baskaran, A.Bakalimenpa -4
2 Rue - De - LaEare,93000 Boriveny, France
T.P.: 00331-48300369

தகவல்:
இ.பாஸ்கரன்
(சகோதரன்)






## கண்ணீர் அஞ்சலி



அமரர் வேலுப்பிள்ளை மகிழ்ராஜன்

அவர்கள் 03.04.2012 ஞாயிற்றுக்கிழமை காலமானதையிட்டு துயருற்றிக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

42, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

கே.வி.ஆர். சென்ரர்ஸ்
உரிமையாளரும் ஊழியர்களும்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணுலகில்
22 - 07 - 1952



விண்ணுலகில்
05 - 03 - 2012

## நல்லதம்பி தர்மராசா


அன்பின் தெய்வமாய் அறிவின் ஆசானாய்
பண்புடனே பார் புகழ எம்மையெல்லாம்
வாழ வைத்து விட்டு இன்பமுடன் இருக்கையில்
எம்மை விட்டுச் சென்றதேனோ
நெஞ்சிருக்கும் வரை நாம் உங்களை மறவோம்.

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள், ஒத்தாசைகள் புரிந்து ஆறுதல் கூறி அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு 03.04.2012 இன்று அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*கொம்மாந்தறை,*
*வல்வெட்டித்துறை.*

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் பூக்கள்



## வேலுப்பிள்ளை மகிழ்ராஜன்

(மகிழண்ணை)

நேற்று முன்தினம் (01.04.2012)ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்ததையிட்டுத் துயருறும், அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சோ.செந்தூரன்
மைத்துனர் (இத்தாலி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியுறவுக் கொள்கையின் தோல்வியே அந்நியர் தலையீடு

## ஐ.தே.க. பிரதித் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 3

அரசின் வெளியுறவுக் கொள்கைகளினால் நாட்டின் அப்பாவிப் பொதுமக்களே பாதிக்கப்படுவர் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம்சாட்டியுள்ளார்.

பொல்பத்திகம பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மிக முக்கியமான விடயங்களில் அரசு எடுக்கும்



**அரசின் தவறான வெளியுறவுக் கொள்கைகளினால் வெளிநாட்டு சக்திகள் இலங்கை விவகாரங்களில் தேவையின்றி தலையீடு செய்கின்றன.**

தீர்மானங்களின் விளைவுகளை மக்களே அனுபவிக்க நேரிட்டுள்ளது.

அரசியல் அடவாடித்தனம், வெள்ளைவான் கடத்தல் மற்றும் வெளியுறவு கொள்கைகள் போன்றவற்றால் நாடு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றது.

அரசின் தவறான வெளியுறவுக் கொள்கைகளினால் வெளிநாட்டு சக்திகள் இலங்கை விவகாரங்களில் தேவையின்றி தலையீடு செய்கின்றன.

நாட்டின் எதிர்காலத்துக்கு சுமுகமான வெளியுறவுக் கொள்கை மிகவும் முக்கியமானது. எனினும், உள்நாட்டு விவகாரங்களில் வெளிநாட்டு சக்திகள் தலையீடு செய்வதை மக்கள் எதிர்க்க வேண்டும்.- என்றார். (ச)

# மின் ஒழுக்கால் தீ விபத்து சிறார் பாடசாலை நாசம்

## சங்கானையில நேற்று மாலை சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப். 3

சங்கானைப் பகுதியில் உள்ள சர்வதேசச் சிறார் பாடசாலை ஒன்று தீப்பிடித்து எரிந்ததில் அங்கிருந்த 20 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் எரிந்து நாசமாகின.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

நேற்று மாலை 6.45 மணியளவில் சங்கானை நகரப் பகுதியில் அமைந்துள்ள ''பட்டர் பிளை'' என்ற சர்வதேசப் பாடசாலைக் கட்டடத்தில் திடீரெனத் தீ கொழுந்து விட்டெரிந்தது. இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பொதுமக்கள் தீயை அணைக்க பெருமுயற்சி எடுத்தனர். எனினும் அதற்குள் தீ பரவியதால் கட்டடத்தினுள் இருந்த பாடசாலை உபகரணங்கள், கணினிகள், இலத்திரனியல் உபகரணங்கள் உள்ளிட்ட 20 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் எரிந்து நாசமானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

**பாடசாலை உபகரணங்கள் உள்ளிட்ட 20 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் தீக்கிரையாகின.**

இந்தச் சம்பவம் குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து அந்த இடத்துக்கு விரைந்த மானிப்பாய்ப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். இதன்போது மின் ஒழுக்குக் காரணமாகவே இந்த தீ விபத்து நேர்ந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தீ விபத்து நிகழ்ந்த போது கட்டடத்தினுள் எவரும் இருக்கவில்லை. இதனால் உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. (ங-29)

# சிறைச்சாலை அதிகாரியிடம் சிக்கிய கைபேசி

கொழும்பு, ஏப். 3

போகம்பறை சிறைச்சாலைக்குள் கையடக்க தொலைபேசி ஒன்றைக் கொண்டு செல்ல முயற்சித்த சிறைக் கைதி ஒருவரைக் கடந்த வெள்ளிக்கிழமை சிறைச்சாலை அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

உறவினர் ஒருவரை பார்வையிட்ட பின் மீண்டும் சிறைச்சாலைக்குள் திரும்பும்போதே இந்தக் கைத் தொலைபேசி கண்டெடுக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

விசேட இயந்திரம் ஒன்றின் மூலமே இந்தத் தொலைபேசி கண்டெடுக்கப்பட்டதாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர். (ச)



இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் 38ஆவது வருடாந்த மாநாடு கடந்த 31ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றது. இதில் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க, நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# கொழும்புத் தமிழ்ச்சங்கம் நடத்தும் உலகத் தமிழ் இலக்கிய மாநாடு

கொழும்பு, ஏப். 3

கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் 70ஆவது ஆண்டு நிறைவையொட்டி உலகத் தமிழ் இலக்கிய மாநாடு ஒன்றை எதிர்வரும் ஜூன் முதலாம், 2ஆம், 3ஆம் மற் றும் 4ஆம் திகதிகளில் நடத் துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

'தமிழ் இலக்கியமும் சமூகமும் - இன்றும் நாளையும்' என்ற தொனிப்பொருளில் இடம்பெறவிருக்கும் இம் மாநாட்டில் தமிழகத்தின் முன்னணி எழுத்தாளர்கள் உள்ளிட்ட உலகின் பல பாகங்களிலிருந்தும் தமிழ் எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள் கலந்துகொள்ள ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாநாட்டில் சமர்ப்பிப்பதற்கு சிறுவர் இலக்கியம், புனைகதை, கட்டுரை, ஆவணப்படுத்தல், மொழி பெயர்ப்பு இலக்கியம், விமர்சனம், செவ்வி தாக்கம் நிகழ்த்து கலைகள், இலக்கியக் கோட்பாடுகள், பெண்ணியம், இதழியல், இணையமும் வலைப்பதிவுகளும் முதலான விடயங்களில் ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

# அமைச்சர் மேர்வின் சில்வா மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ஊடக அமைப்புக்கள் கோரிக்கை

கொழும்பு, ஏப். 3

அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஊடக அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

ஊடகவியலாளர் ஒருவரை நாட்டைவிட்டு தாம் விரட்டியடித்ததாக அமைச்சர் மேர்வின் சில்வா பகிரங்கமாக ஒப்புக் கொண்டுள்ளார். அமைச்சருக்கு எதிராக எவ்வாறான நடவடிக்கை எடுக்கமுடியும் என்பது தொடர்பில் சட்ட ஆலோசனை நடத்தப்பட்டு வருவதாக ஊடக நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது தொடர்பில் அடுத்தவாரம் தீர்மானிக்கப்படும் என்று சுதந்திர ஊடக அமைப்பின் அழைப்பாளர் சுனில் ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஊடக அடக்குமுறைக்கு எதிராகப் போராட்டங்கள் நடத்தப்பட்ட போதிலும் அவை உதாசீனப்படுத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கத் திட்டமிட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போதல ஜயந்தவை தாமே நாட்டை விட்டு வெளியேற்றியதாக அமைச்சர் பகிரங்கமாக அறிவித்துள்ளபோதிலும், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் தரப்பினர் இதுவரையில் நடவடிக்கை எதனையும் எடுக்காமை துரதிஷ்டவசமானது என்று அவர் தெரிவித்தார்.

2006 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் ஊடகத்துறையைச் சார்ந்த 40 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், ஐந்து ஊடக நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# புதிய சகாப்தமொன்றின் ஆரம்பம்; வெற்றி குறித்து ஆங் சான் சூகி

யாங்கூன், ஏப். 03

''எமது வெற்றி மக்களின் வெற்றி. இது எமது முழுமையான வெற்றியல்ல. இந்த நாட்டில் ஜனநாயக முன்னெடுப்புகளில் பங்கேற்கவேண்டுமெனத் தீர்மானித்துள்ள மக்களின் வெற்றி. இது ஒரு புதிய சகாப்தத்தின் ஆரம்பம்'' - என மியான்மர் இடைத் தேர்தலில் வெற்றிபெற்ற ஆங் சான் சூகி நேற்று திங்கட்கிழமை தமது ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மியான்மரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இடைத்தேர்தலில் ஆங் சான் சூகி வெற்றிபெற்றார். மறுதினமான நேற்று திங்கட்கிழமை அவரது ஜனநாயகத்துக்கான தேசியக் கட்சியின் தலைமை அலுவலகம் முன்னால் ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் திரண்டனர். அவர்கள் வெற்றிக் குதூகலத்தில் திளைத்தார்கள். இவர்கள் மத்தியில் ஆங் சான் சூகி உரையாற்றினார்.

இந்தத் தேர்தல் வெற்றி முன்னாள் நீண்டகால அரசியல் கைதியான ஆங் சான் சூகி முழு வீச்சில் அரசியலில் ஈடுபட வழிசமைக்கிறது. மியான்மர் இராணுவ மேலாதிக்க நாடாளுமன்றில், எதிரணி உறுப்பினர்களைக்கொண்ட சிறு குழுவொன்றுக்கு இவர் தலைமை வகிப்பார்.

உத்தியோகபூர்வ முடிவுகள் இன்னும் சில நாள்களுக்குள் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. தென் கிழக்கு ஆசிய நாடான மியான்மர் இராணுவ ஆட்சியின் குரூர யுகத்திலிருந்து விடுபடத் தொடங்கியுள்ளது. இவரது வெற்றி ஊர்ஜிதப்படுத்தப்பட்டால், அது புதிய யுகத்தில் ஒரு மைல்கல்லாக அமையும் என அரசியல் அவதானிகள் குறிப்பிடுகிறார்கள்.

முன்னாள் இராணுவ ஆட்சியாளர்கள், ஆங் சான் சூகியை இவரது ஏரிக்கரை இல்லத்தில் இரு தசாப்தங்களாக வீட்டுக்காவலில் வைத்திருந்தார்கள். 2010ஆம் ஆண்டின் பிற்பகுதியில் சூகி விடுதலை செய்யப்பட்டார்.

# இளைஞர் வீடமைப்புத் திட்டம் மூலம் அனைத்து மக்களுக்கும் வீடுகள்

## அமைச்சர் சனத் நிஷாந்த பெரேரா தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.2

இலங்கையில் வாழும் அனைவருக்கும் வீடு ஒன்றை அமைத்துக் கொடுப்பதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு 'ஸ்ரீலங்கா யூத்' (இளைஞர்) வீடமைப்புத் திட்டம் பெறும தியான பங்களிப்பை வழங்கும் என்று வடமேல் மாகாண இளைஞர் விவகார, கடற்றொழில், வீடமைப்பு நிர்மாணத் துறை மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சர் சனத் நிஷாந்த பெரேரா தெரிவித்தார்.

புத்தளம் மாவட்டத்தில் இடம்பெற்ற பிரதான நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடமேல் மாகாணத்தில் தமக்கென ஒரு வீடு இல்லாத 74 ஆயிரம் குடும்பங்கள் உள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ளது.

இந்தத் தொகையில் 74 ஆயிரம் குடும்பங்கள் புத்தளம் [illegible] வீடில்லாத அனைவருக்கும் 2014ஆம் ஆண்டின் இறுதிக்கு முன்னர் வீட்டை அமைத்துக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

'ஸ்ரீலங்கா யூத்' எனும் இந்த வேலைத்திட்டத்தின் கீழ் புத்தளம் மாவட்டத்தில் 16 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. இதற்காக தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் ஒரு லட்சம் ரூபாவும், வடமேல் மாகாண வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் மூலம் இருபத்து ஐயாயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய பாரதிக்கு சம்பியன்

யாழ்ப்பாணம், ஏப்.3

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இறுதியாட்டத்தில் மலையாளபுர புதிய பாரதி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

இறுதியாட்டத்தில் மலையாளபுர புதிய பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மருதநகர் மருத நிலா விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

5 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் மலையாளபுர புதிய பாரதி விளையாட்டுக் கழகம் 3:2 என்ற செற் கணக் கில் வெற்றிபெற்றது.(ங-23)



நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான தடகளப் போட்டிகளை யாழ்.அரச அதிபர் இமெல்டா சுகுமார் ஒலிம்பிக் தீபம் ஏற்றி ஆரம்பித்து வைத்தார்.

### வலைப்பந்தாட்ட இறுதியில்

# இன்று பலப்பரீட்சை

## பல்கலையும் யூனியனும்

வலி.வடக்கு, ஏப்.3

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக விளையாட்டு அவையும் பல்கலைக்கழக வலைப் பந்தாட்ட அணியும் இணைந்து யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட முன்னணிக் கழகங்களுக்கு இடையே நடத்திய வலைப்பந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மஞ்சள் அணி பெரும் பகிரத பிரயத்தனத்தின் மத்தியில் வெற்றி பெற்றுள்ளது.



யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கூடைப்பந்தாட்ட மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வலைப்பந்தாட்ட மஞ்சள் அணியும் தெல்லிப் பழை யூனியன் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

போட்டியில் இரு அணிகளும் சமபலத்துத்துடன் மோதிக்கொண்டன. இரு அணிகளும் மாறி, மாறிப் புள்ளிகளைப் பெற்ற வண்ணம் இருந்தன. இதனால் முதல் பாதி ஆட்டம் 15:14 புள்ளிகள் என்ற நிலையில் யாழ்.பல்கலைக்கழக மஞ்சள் அணி முன்னிலை பெற்றிருந்தபோது முடிவுக்கு வந்தது.

எனினும் இரண்டாம் பாதி ஆட்டத்தில் அதிகளவான புள்ளிகளைப் பெற்று எதிரணியை எப்படியும் வீழ்த்தி விட வேண்டும் என்ற கங்கணத்துடன் இரு அணி வீராங்கனைகளும் களத்தில் இறங்கின.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் பல்கலைக்கழக மஞ்சள் அணி தனக்கு கிடைத்த வாய்ப்புகள் அனைத்தையும் உரிய முறையில் பயன்படுத்திப் புள்ளிகளைக் குவித்தது. ஆனால் தெல்லிப்பழை யூனியன் அணியோ முதல்பாதி ஆட்டத்தில் காட்டிய எதிர்ப்பை இரண்டாம் பாதி ஆட்டத்தில் கைவிட்டுவிட்டது. மிக இலகுவான சந்தர்பங்களைக் கூட யூனியன் அணி தவற விட்டது. இதனால் இரண்டாம் பாதி ஆட்டத்திலும் பல்கலைக்கழக மஞ்சள் அணி 20:16 புள்ளிகள் என்ற அடிப்படையில் முன்னிலை பெற்றது.

ஆட்ட நிறைவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மஞ்சள் அணி 35:30 புள்ளிகள் என்ற அடிப்படையில் தெல்லிப்பழை யூனியன் 'ஏ' அணியை வெற்றிகொண்டு இறுதியாட்டத்துக்கு நுழைந்தது.

மற்றுமொரு அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வலைப் பந்தாட்ட நீல அணியும் தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக்கழக 'பி' அணியும் மோதிக்கொண்டன.

தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழக 'பி' அணி போட்டியின் ஆரம்பத்தில் இருந்தே தனது வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் விளையாடியது. முதல் பாதி ஆட்ட நிறைவில் 13:07 புள்ளிகள் என்ற அடிப்படையில் தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக்கழகம் முன்னிலை பெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் பல்கலைக்கழக நீல அணி எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்காத நிலையில் யூனியன் விளையாட்டுக்கழக 'பி' அணி மீண்டும் ஆதிக்கத்தை நிலைநாட்டியது. இதனால் இரண்டாம் பாதி ஆட்டத்தை அந்த அணி 11:05 புள்ளிகள் என்ற நிலையில் கைப்பற்றியது.

ஆட்ட நிறைவில் தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக்கழக அணி 24 :12 புள்ளிகள் என்ற அடிப்படையில் யாழ்.பல்கலைக்கழக நீல அணியை வீழ்த்தி இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றது.

இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும் மூன்றாம் இடத்துக்கான போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் யாழ். பல்கலைக்கழக விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் க.கணேசநாதன் தலைமையில் யாழ். பல்கலைக் கழக விளையாட்டு மைதானத்தில் இன்று செவ்வாய் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக் கழகத்தின் முன்னாள் விளையாட்டு வீரரும் வட மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் கணக்காளருமான சு.அகிலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் யாழ்.பல்கலைக் கழக நீல அணியும் தெல்லிப் பழை யூனியன் விளையாட்டுக்கழக 'எ'அணியும் மோதவுள்ளன.

இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழக 'பி' அணியும் யாழ். பல்கலைக்கழக மஞ்சள் அணியும் மோதவுள்ளன.

(ங-86)



இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் வருடாந்த ஒன்றுகூடல் கடந்த மாதம் உதைபந்தாட்ட சம்மேளன காரியாலயத்தில் இடம்பெற்றது. இதில் உதைபந்தாட்டத்தின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் முன்னாள் செயலர் மு.பிரான்சிஸ் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவரும் [illegible] நாடாளுமன்ற உறுப்பினருமான றியட் அட்மிரல் சரத் வீரசேகரவால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். (23)

### இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஏப் 3

இலங்கை கடற்படை உதைபந்தாட்ட அணிக்கும், யாழ்.பல்கலைக் கழகம், ஞான முருகன் விளையாட்டுக் கழகம் இணைந்த உதைபந்தாட்ட அணிக்கும் இடையிலான பயிற்சி உதைபந்தாட்ட போட்டி இன்று செவ்வாய்க் கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

நேற்றுக் காலை 8 மணியளவில் இலங்கைக் கடற்படை அணியினர், சென்பற்றிக்ஸ் கல்லூரி உதைபந்தாட்ட அணியினருக்கான உதைபாந்தாட்ட தொடர்பான பயிற்சிகளை வழங்கினர். (23)

## ஊர்காவற்றுறை கோட்ட மெய்வன்மை முடிவுகள்

17 வயது ஆண்கள்

100 மீற்றர் ஓட்டம்

1ஆம் இடம் எம்.கஜித்யா/எழுவைதீவு முருகவேள் வித்.

2ஆம் இடம் ஜெ.ரனிஸ்ராஜ் - சென்.அன்ரனிஸ் கல்லூரி

3ஆம் இடம் பி.யூட் பவிதரன் நாரந்தனை றோ.க.த.க.

200 மீற்றர் ஓட்டம்

1ஆம் இடம் ஜெ.சிந்துஜன் - சென்.அன்ரனிஸ் கல்லூரி.

2ஆம் இடம் என்.சிந்துஜன் - சென்.அன்ரனிஸ் கல்லூரி

3ஆம் இடம் எம்.கஜித் - எழுவைதீவு முருகவேள் வித்.

400 மீற்றர் ஓட்டம்

1ஆம் இடம் என்.சிந்துஜன்-அனலைதீவுசதாசிவம்வித்.

2ஆம் இடம் கே.அன்பரசன் - ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ்.

3ஆம் இடம் என்.நிஜாந்தன் - அனலைதீவு சதாசிவம் வித்தி.

800 மீற்றர் ஓட்டம்

1ஆம் இடம் கே.அன்பரசன் - ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ்.

2ஆம் இடம் என்.சிந்துஜன் - அனலைதீவு சதாசிவம் வித்தி.

3ஆம் இடம் என்.நிஜாந்தன் - அனலைதீவு சதாசிவம் வித்தி.

1500 மீற்றர் ஓட்டம்

1ஆம் இடம் ஜெ.சிந்துஜன் - ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ்.

2ஆம் இடம் எம்.பவாநந்தன் - கரம்பொன் சண்முகநாத வித்தி.

3ஆம் இடம் -ஏ.அன்ரனி அரியதாஸ் - எழுவைதீவு முருகவேள் வித்தி.

முப்பாய்ச்சல்

1முதலாம் இடம் டி.பிரசாந் - ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ்.

2ஆம் இடம் ஜெ.சிந்துஜன் - ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ்.

3ஆம் இடம் கே.ஜெசுதன் - நாரந்தனை றோ.க.த.க.

உயரம் பாய்தல்

1ஆம் இடம் எம்.நித்தியன் - ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ்.

2 ஆம் இடம் பி.அனிஸ்ரன் - ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ்.

3 ஆம் இடம் எம்.கஜித் - எழுவைதீவு முருகவேள் வித்தி.

நீளம் பாய்தல்

1 ஆம் இடம்- எஸ்.விதுஷன் - அனலைதீவு சதாசிவ வித்தி.

2 ஆம் இடம் எம்.நித்தியன்- ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ்.

3 ஆம் இடம்- ஆர்.மிரோஜன்- ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ்.

குண்டெறிதல்

1 ஆம் இடம்- ஆர்.மிரோஜன் -ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ்.

2ஆம் இடம் வி.வசீகுமார்- எழுவைதீவு முருகவேள் வித்தி.

3ஆம் இடம் சாந்த ரூபன்- ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ்.

தட்டெறிதல்

1 ஆம் இடம்- ஆர்.மிரோஜன்- ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ்.

2 ஆம் இடம்- கே.நிக்ஷன்- ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ்.

3 ஆம் இடம்- யு.சிந்துஜன்- கரம்பொன் சண்முகானந்தா வித்தி.

*(தொடரும்)*


## வெல்லுங்கள் ரூ. 5,000/=

### உங்களுக்கான கேள்வி இதுதான்...

ஏப்ரல் 6ஆம், 7ஆம் திகதிகளில் மகாஜனா, ஸ்கந்தா அணிகள் மோதும் 12ஆவது "வீரர்களின் போரில்" வெற்றிபெறும் அணி எது?

- சரியான விடையை கீழே பிரசுரமாகும் கூப்பனில் எழுதி மகாஜனாக் கல்லூரி மைதானம், ஸ்கந்தாக் கல்லூரி, உதயன் அலுவலகம் ஆகிய இடங்களில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடுங்கள்.
- விடைகளை ஏப்ரல் 7ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்னர் பெட்டிகளில் இடவேண்டும். அதற்குப் பின்னர் வரும் விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
- சரியான விடை அளிப்பவர்களில் இருந்து வெற்றியாளர் ஒருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு அவருக்கு ரூபா.5,000/= பணப்பரிசு வழங்கப்படும்.
- உதயனில் பிரசுரமாகும் கூப்பனில் எழுதப்படும் விடைகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

உதயன்

ஏப்ரல் 6ஆம், 7ஆம் திகதிகளில் மகாஜனா, ஸ்கந்தா அணிகள் மோதும் 12 ஆவது "வீரர்களின் போரில்" வெற்றி பெறும் அணி எது?

..............................


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சமனிலையில் முடிந்த ஆட்டம்

''மான்செஸ்டர் சிட்டி மற்றும் சன்டர்லேண்ட் அணி கள் மோதிய பிரீமியர் லீக் கால்பந்து ஆட்டம் சமனிலை யில் முடிந்தது.''



பிரிட்டனில் பிரீமியர் லீக் உதைபந்தாட்டத் தொடர் நடைபெற்று வருகிறது. லண்டனில் நடந்த லீக் ஆட்டம் ஒன்றில் மான்செஸ் டர் சிட்டி மற்றும் சன்டர் லேண்ட் அணிகள் மோதிக் கொண்டன. இதன் முதல் பாதியின் 31ஆவது நிமிடத் தில் சன்டர்லேண்ட் அணி யின் செபஸ்டின் ஒரு கோல் அடித்தார். இதற்கு பதிலடி யாக மான்செஸ்டர் சிட்டி அணியின் மரியோ 43ஆவது நிமிடத்தில் பெனால்டி வாய்ப்பை கோலாக மாற்றி னார். 45ஆவது நிமிடத்தில் சன்டர்லேண்ட் அணியின் நிக்கோலஸ் கோல் அடித் தார். இரண்டாம் பாதியில், செபஸ்டின் மற்றொரு கோல் அடிக்க, பதிலடியாக மான் செஸ்டர் சிட்டி அணியின் மரியோவும், அலெக்சாண்ட ரும் தலா ஒரு கோல் அடித் தனர். முடிவில், மான்செஸ் டர் சிட்டி மற்றும் சன்டர் லேண்ட் அணிகள் மோதிய ஆட்டம் 3-3 என்ற கணக் கில் சமனிலை ஆனது. மற் றொரு ஆட்டத்தில் செல் சியா 4-2 என்ற கணக்கில் அஸ்டான் வில்லா அணியை வென்றது. (5)

# சம்பியன்



ஐக்கிய அமெரிக்காவில் இடம்பெற்றுவந்த மியாமி மாஸ்டர்ஸ் கிண்ண ரெனிஸ் தொட ரில் ஆண்களுக்கான தனிநபர் இறுதி ஆட்டத் தில் உலகின் முதற்தர வீரர் நொவாக் ஜேகோ விச் சம்பியன் பட்டம் வென்றுள்ளார். இது இது அவரின் மூன்றாவது மியாமி சம்பியன் பட்ட மாகும்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் பிரிட்டனின் அன்டி முரேயை 6-1, 7-6 என்ற கணக்கில் ஜோகோவிச் வெற்றிகொண்டார். 2007ஆம் ஆண்டு முதன் முதலாக மியாமி மாஸ்டர்ஸ் சம்பியன் பட்டம் வென்ற ஜொக் கோவிச், 2011ஆம் ஆண்டிலும் சம்பியன் பட்டம் வென்றிருந்தார்.

நேற்றைய வெற்றி குறித்துக் கருத்துத் தெரிவித்த ஜோ கோவிச், ஆரம்பத்திலிருந்து நேற்றைய போட்டியில் மிகச் சிறப்பாக விளையாடி யதாகவும், முரே மிகச் சிறந்த வீரர் என்ப தால் தவறுகளை விட முடியாது இருந்ததாகவும் தெரிவித்தார். (5)



# பயஸின் 50 ஆவது பட்டம்

''மியாமி சர்வதேச ரெனிஸ் போட்டியில் இரட்டையர் பிரிவில் சாம்பியன் பட்டம் வென்றதன் மூலம் இந்திய வீரர் லியாண்டர் பயஸ் 50ஆவது சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.''



அமெரிக்காவில் உள்ள மியாமி நகரில் ஏ.டி.பி. ரெனிஸ் தொடரின் இறுதியாட்டம் நடைபெற்றது.

இந்தப் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதிச் சுற்றில் இந்தியாவைச் சேர்ந்த லியாண்டர் பயஸ் மற்றும் செக் குடியரசைச் சேர்ந்த ஸ்டெபானிக் ஜோடி, பெலாரஸ் வீரர் மேக்ஸ் மிரினி மற்றும் கனடா வீரர் நெஸ்டர் ஜோடியுடன் மோதியது.

சிறப்பாக விளையாடிய பயஸ் ஜோடி 3-6, 6-1, 10-8 என்ற செட் கணக்கில் மேக்ஸ் ஜோடியை வீழ்த்திச் சம்பியன் பட்டம் வென்றது.

இந்த வெற்றியின் மூலம் லியாண்டர் பயஸ் இரட்டையர் பிரிவில் 50ஆவது சம்பியன் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். (5)

*மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் போலந்து வீராங்கனை அக்னிஸ்கா ரட்வன்ஸ்கா அபாரமாக ஆடி 7-5, 6-4 என்ற நேர் செட் கணக்கில் ரஷ்யாவின் முன்னணி வீராங்கனை யான மரியா ஷரபோ வாவை வீழ்த்தி சம்பி யன் பட்டம் பெற்றார்.*



# ஓராண்டின் பின்னர் தொடர் வெல்லுமா இலங்கை?

இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கிடையில் இரண்டாவதும் இறுதியு மான டெஸ்ட் ஆட்டம் இன்று இடம்பெறவுள்ளது. முதலாவது டெஸ்ட் ஆட் டத்தில் இலங்கை அணி வெற்றிபெற்றிருந்தது. இந்த நிலையில் இன்றைய ஆட் டத்திலும் இலங்கை அணி வெற்றி பெறும் பட்சத்தில் சர்வதேச கிரிக்கெட் தொட ரில் ஓராண்டுகளின் பின்னர் இலங்கை அணி பெற்றுக் கொள்ளும் தொடர் வெற்றி யாகும்.

இன்றைய ஆட்டத் தில்இலங்கை அணியின் துணைத்தலைவர் அன் ஜலோ மத்தியூஸ் இடம் பெற்றுள்ளார். இங்கிலாந் துக்கெதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்துக்கான அணியில் சேர்க்கப்பட்டி ருந்த அன்ஜலோ மத்தியூஸ், போதிய உடற்தகுதி இன்மை காரணமாக அணியிலிருந்து நீக்கப்பட வேண்டி ஏற்பட் டது.

அன்ஜலோ மத்தியூஸ் நீக்கப்பட்டதன் காரணமாக மாற்று வீரராக அணியில் சேர்க்கப்பட்டிருந்த சாமர சில்வா தற்போது அணியி லிருந்து நீக்கப்பட்டுள்ளார். அன்ஜலோ மத்தியூஸ் அணி யில் சேர்க்கப்பட்டுள்ள போதிலும், தனித்து துடுப் பாட்ட வீரராக மாத்திரம் செயற்படுவார் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

தனது வாழ்வின் மிகச் சிறந்த திறனில் காணப் படும் சாமர சில்வா, இந்தப் பருவகாலத்தில் 1000 முதற் தரப் போட்டி ஓட்டங்களைப் பூர்த்தி செய்துள்ளதுடன், இங்கிலாந்து அணிக்கெதி ராக இடம்பெற்ற பயிற்சி ஆட்டத்தில் வேகமான 163 ஓட்டங்களையும் பெற்றிருந் தார்.

எனினும் டெஸ்ட் அணி அறிவிக்கப்படும் போது அணியில் சேர்க்கப்பட்டிராத சாமர சில்வா, அன் ஜலோ மத்தி யூஸிற்கு மாற்று வீரராக அணி யில் பின்னர் சேர்க்கப்பட்டார். தற்போது அன் ஜலோ மத்தியூஸ் அணிக்குத் திரும்பியுள்ள நிலையில் சாமர சில்வா அணியிலிருந்து நீக்கப்பட் டுள்ளார்.

அதேவேளை, ஆரம்பப் பந்துவீச்சாளர் சானக வெல கெதரவிற்கு அடிவயிற்றுப் பகுதியில் ஏற்பட்ட உபாதை காரணமாக அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். வெல கெதரவுக்குப் பதிலாக வேகப் பந்து வீச்சாளர் ஷமின்ட எ்ரங்க அணியில் இணைக் கப்பட்டுள்ளார்.


கடந்தாண்டு ஒக்ரோப ரில் பாகிஸ்தானுக்கெதிரான ரெஸ்ட் தொடருக்கான அணியில் சேர்க்கப்பட்டு அதன் பின்னர் அவரது முழங் கையில் ஏற்பட்ட உபாதை காரணமாக அந்தத் தொடரி லிருந்து விலகிய எரங்க, அதன் பின்னர் அணியில் இணைத்துக் கொள்ளப் படும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

இதேவேளை இங்கி லாந்து அணியிலிருந்து காயம் காரணமாக ஸ்ருவேர்ட் புரோட் நீக்கப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக விளை யாடுவதற்கு ஸ்ரீபன் பின், ரிம் பிரெஸ்னன் ஆகிய இருவரிடையே போட்டி நிலவுகின்றது. ரிம் பிரெஸ்ன னின் சகல துறைத் திறமை கள் அவருக்கு வாய்ப்பாக அமைய லாம் என்ற போதிலும், காயத்தின் பின்னர் அவர் அதிகமாகப் பந்துவீசியிராத காரணத்தால் பந்துவீச்சா ளராக ஸ்ரீவன் பின்னிற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ள தாகக் கருதப்படுகிறார்.

எனினும் அவ்வாறு இடம்பெறின் இங்கிலாந்து அணி துடுப்பாட்டத்தில் சோர்வைச் சந்திக்க இட முண்டு. அவ்வாறு இங்கி லாந்து அணி கருதுமாயின் கடந்த ஆட்டத்தில் விளை யாடிய பனேசர் நீக்கப்பட்டு ரிம் பிரெஸ்னனும், ஸ்ரு வேர்ட் புரோடிற்குப் பதிலாக ஸ்ரீவன் பின்னும் விளை யாட இடமுண்டு. (5)

''இலங்கை, இங்கி லாந்து அணிகளுக்கிடை யில் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் இன்று இடம் பெறவுள்ளது. முதலா வது டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை அணி வெற்றி பெற்றிருந்தது. இந்த நிலையில் இன்றைய ஆட்டத்திலும் இலங்கை அணி வெற்றி பெறும் பட்சத்தில் சர்வதேச கிரிக் கெட் தொடரில் ஓராண்டு களின் பின்னர் இலங்கை அணி பெற்றுக் கொள் ளும் தொடர் வெற்றி யாகும்.''

# அஷ்ரப்புல்லை கழற்றியது பங்களாதேஷ்



2012 ஆம் ஆண்டுக்கான பங் களாதேஷ் கிரிக்கெட் வீரர்களின் ஒப்பந்தப் பட்டியல் அறிவிக்கப்பட் டுள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள பட் டியலில் 5 வகையான பிரிவுகள் வழங்கப்பட்டு வீரர்கள் வகைப் படுத்தப்பட்டுள்ளனர். அத்தோடு அனைத்து வீரர்களுக்கும் 10 சத வீத ஊதிய அதிகரிப்பு வழங்கப் பட்டுள்ளது.

ஏ பிளஸ், ஏ, பீ, சீ மற்றும் புதியவர்களுக்கான பட்டியல் என்று ஐந்து வகையாகப் பிரிக்கப்பட்டுள்ள ஒப் பந்தப் பட்டியலில் சகிப் அல் ஹசன், முஷ்பிக்கிர் ரஹிம், தமிம் இக்பால், அப்துர் ரஷாக் மற்றும் மஷ்ரபி மோர்ரஷா ஆகியோர் முதல்நிலைப் பிரிவில் வகைப்படுத்தப் பட்டுள்ளனர்.

மஹமதுல்லா மற்றும் இம்ருல் கைஸ் ஆகியோர் இரண்டாம் நிலையிலும், ரூபெல் ஹொசைன், ஷபீல் இஸ்லாம், நஷ்முல் ஹொசைன் ஆகியோர் மூன் றாம் பிரிவிலும், நஷீர் ஹொசைன், ஜக் ருல் இஸ்லாம் நான்காம் பிரிவிலும் வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

புதியவர்களுக்கான பிரிவில் நஷி முடின், ஷூவகற்றா ஹொம் மற்றும் எலி யாஸ் சணி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

அறிவிக்கப்பட்டுள்ள ஒப்பந்தப் பட்டியலில் பங்களாதேஷ் அணியின் முன்னாள் அணித்தலைவர் மொஹமட் அஷ்ரபுல் இற்கு இடம் வழங்கப்பட வில்லை. தொடர்ச்சியான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டும் பிரகாசிக்காத காரணத் தால் அவருக்கான வாய்ப்புப் பறிக்கப்பட் டுள்ளது.

அத்தோடு சஹாதத் ஹொசைன், ஜூனைட் சித்திக்கி, சயீட் ரசல், ரக்கிபுல் ஹசன், நயீம் இஸ்லாம், சுரவடி ஸூவோ ஆகியோரும் ஒப்பந்தங்களை இழந் துள்ளனர். (5)



*லண்டன் ஒலிம்பிக்கில் ஆண்க ளுக்கான மல்யுத்த போட்டியில் பங்கேற்க இந்திய தரப்பில் அமித் குமார் (55 கிலோ), யோகேஷ்வர் தத்(60 கிலோ) ஆகியோர் ஏற்கனவே தகுதிப் பெற்றுள்ளனர். பீஜிங் ஒலிம் பிக் போட்டியில் வெண்கலப் பதக் கம் வென்ற இந்திய வீரர் சுஷில் குமார் லண்டன் ஒலிம்பிக் போட்டி யில் பங்கேற்க இன்னும் தகுதி பெற வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.*

# முதல் முறையாக இந்தியப் பெண்

ஒலிம்பிக்கில் பெண்களுக்கான மல்யுத்தப் போட்டியில் பங்கேற்க, முதல் முறையாக இந் திய வீராங்கனை ஒருவர் தகுதி பெற்றுள்ளார்.

இந்த ஆண்டு ஜூலை 27 ஆம் திகதி லண்டன் ஒலிம்பிக் போட்டி தொடங்க உள் ளது. இதில் நடைபெற உள்ள போட்டிகளுக்கான தகுதிச் சுற்றுப் போட்டிகள் நடைபெற்று வரு கின்றன. இந்த நிலையில் ஆசிய மல்யுத்த தகுதி சுற்று போட்டி கஜகஸ்தானில் உள்ள அஸ்தானா வில் நடைபெற்றது.

இதில் பெண்களுக்கான 55 கிலோ எடை பிரிவிற்கான தகுதிச் சுற்றின் இறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் இந்திய வீராங்கனை கீதா, கொரியாவின் ஜி இனும் உடன் மோதினார். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்தியாவின் கீதா, போட்டியின் முடிவில் 5-0 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றி பெற்று தங்கப் பதக்கத்தைப் பெற்றார். இதன்மூலம் லண்டனில் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க கீதா தகுதிப் பெற் றார். ஒலிம்பிக்கில் பெண்களுக்கான மல் யுத்த போட்டியில் பங்கேற்க இந்திய வீராங்கனை ஒரு வர் தகுதிப் பெறுவது இதுவே முதல் முறையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ணம் வென்றுஒரு வருடம் வீழ்ச்சிப் பாதையில் இந்தியா

கடந்த வருடம் இடம்பெற்ற உலகக்கிண்ணத் தொடரில் இந்திய அணி சம்பியன் பட்டம் வென்று நேற்றுடன் ஓராண்டு பூர்த்தியாகின்றது. கடந்த வருடம் ஏப்ரல் இரண்டாம் திகதி மும்பை வன்கடே மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் இலங்கை அணியை வெற்றி கொண்டு இந்தியா சம்பியனாகியிருந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி பெற்றுக்கொண்ட 274 ஓட்டங்களுக்குப் பதிலளித்தாடிய இந்திய அணி 48.2 பந்து பரிமாற்றங்களில் 4 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்திருந்தது. இறுதி வெற்றி ஓட்டங்களை இந்திய அணியின் தலைவர் மகேந்திரசிங் டோனி ஆறு ஓட்டங்கள் மூலம் பூர்த்தி செய்தார்.

அதன் பின்னரான இந்த ஒரு வருட காலப்பகுதியில் இந்திய அணி பெரிதான வெற்றிகளைப் பெற்றுக் கொள்ளத் தவறியிருந்தது. மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிராக மேற்கிந்தியத் தீவுகளிலும், பின்னர் இந்தியாவிலும் வைத்து இந்திய அணி ஓரளவு திறமைகளை வெளிப்படுத்தியிருந்த போதிலும், இங்கிலாந்துக்கெதிராக இங்கிலாந்தில் வைத்து 0-4 என்ற டெஸ்ட் தொடர் தோல்வி, பின்னர் 0-4 என்ற ஒருநாள் தொடர் தோல்வி என்று தோல்விகளைச் சந்திக்கத் தொடங்கியது.

அதன் பின்னர் இந்தியாவில் வைத்து இங்கிலாந்தை 5-0 என்ற கணக்கில் வெற்றிகொண்ட போதிலும், ஆஸ்திரேலியாவில் வைத்து ஆஸ்திரேலியாவிடம் 0-4 என்ற கணக்கில் டெஸ்ட் தொடரில் தோல்வி கண்டதோடு, இலங்கை, இந்திய, ஆஸ்திரேலிய அணிகள் பங்குபற்றிய முக்கோண ஒருநாள் தொடரில் இறுதி ஆட்டத்துக்குத் தகுதிபெறத் தவறியிருந்தது.

இறுதியாக ஆசியக்கிண்ண தொடரின் இறுதி ஆட்டத்துக்கும் தகுதிபெறத் தவறியிருந்தது இந்திய அணி.

ஏப்ரல் 2 ஆம் திகதி உலகின் முதற்தர டெஸ்ட் அணியாகவும், 2 ஆம் நிலை ஒருநாள் சர்வதேசப் போட்டி அணியாகவும் காணப்பட்ட இந்திய அணி, தற்போது 3 ஆம் நிலை டெஸ்ட் மற்றும் ஒருநாள் சர்வதேசப் போட்டி அணியாகக் காணப்படுகிறது.

மறுபுறத்தில் உலகக்கிண்ணத்தில் இரண்டாமிடம் பெற்ற இலங்கை அணியும் தொடர்ச்சியான தோல்விகளைச் சந்தித்து வருகிறது. இறுதியாக இங்கிலாந்து அணிக்கெதிராக காலியில் பெற்றுக் கொண்ட டெஸ்ட் வெற்றி, ஆஸ்திரேலிய சீ.பி. கிண்ணத் தொடரில் காட்டிய திறமை வெளிப்பாடுகள் தவிர, உலகக்கிண்ணத்தின் பின்னர் இலங்கை அணி பெரிதாக வெற்றிகளைச் சுவைத்திருக்கவில்லை. (5)

# பணக்கார அமைப்பின் கஞ்சத்தனம்

ஐ.பி.எல் தொடரின் பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட மும்பை பொலிஸாருக்கு ரூ.5 கோடிமீதி வழங்காது வைத்துள்ள இந்திய கிரிக்கெட் சபையின் மீது மும்பை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

அந்த மனுவில், மீதித் தொகையை உடனடியாக வசூலிக்க வேண்டும். இல்லாவிட்டால் எதிர்வரும் ஐ.பி.எல் தொடருக்கு பாதுகாப்பு வழங்கக்கூடாது என்று மும்பை பொலிசாருக்கு உத்தரவிட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மனு எதிர்வரும் வாரத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிகிறது.

இது தொடர்பாக மும்பையைச் சேர்ந்த சந்தோஷ் என்பவர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். அதில் 2010 ஆம் ஆண்டு ஐ.பி.எல் தொடரின் 6 ஆட்டங்கள் நவி மும்பையில் உள்ள டி.ஓய்.பாட்டீல் மைதானத்தில் நடைபெற்றன.

மார்ச் 12 ஆம் திகதி முதல் ஏப்ரல் 25 ஆம் திகதி வரையில் நடைபெற்ற இந்த ஆட்டங்களுக்கு 3,345 பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர். மும்பையில் குறைவான பொலிசாரே இருந்ததால், புனே மற்றும் சதாரா மாவட்டங்களில் இருந்து பாதுகாப்புப் பணிக்காக பொலிசார் அழைத்து வரப்பட்டனர்.

இவர்களுக்கான செலவுத் தொகையை வழங்குமாறு ரூ.5 கோடியே 65 லட்சத்துக்கான கணக்கறிக்கையை 2010 நவம்பர் 8 ஆம் திகதி அன்று பி.சி.சி.ஐக்கு அனுப்பினர் நவி மும்பை பொலிசார். ஆனால் பி.சி.சி.ஐயோ ரூ. 47 லட்சத்து 53 ஆயிரத்தை மட்டுமே வழங்கியது. அந்தத் தொகை நாகபுரி பொலிசாருக்கு மட்டுமே போதுமானதாக இருந்தது. மீதிப் பணத்தை பி.சி.சி.ஐ வழங்கவில்லை.

இதன்பிறகு மீதமுள்ள தொகையை வழங்குமாறு 2011 ஆம் ஆண்டு மே மாதம் வரை நவி மும்பை உதவிக் கமிஷனர் தொடர்ந்து கடிதம் எழுதினார். ஆனால் அதற்கு பலன் கிடைக்கவில்லை. இதன்பிறகு இந்த விவகாரத்தில் பொலிஸார் அமைதியாக இருந்துவிட்டனர். மேலும் தங்களுக்கு வர வேண்டிய பணத்தை பி.சி.சி.ஐயிடம் இருந்து பெறுவதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஐ.பி.எல் போட்டியால் பொதுமக்களுக்கு இடையூறு செய்தல், ஒலி மாசு உள்ளிட்ட பல் வேறு புகார்கள் பி.சி.சி.ஐ நிர்வாகிகளுக்கு எதிராக தெரிவிக்கப்பட்டாலும், அவர்கள் மீது எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே பாதுகாப்பு பணிக்கு வழங்கப்பட வேண்டிய மீதித் தொகையை பி.சி.சி.ஐயிடம் இருந்து வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் எதிர்வரும் ஐ.பி.எல் போட்டிக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடாது என்று மும்பை பொலிஸாருக்கு உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டுள்ளது.

வலி கிழக்கின் முன்னணி ஆசிரியர்
தமிழ் B.பத்மநாதன்
A/L 2014
தனிப்பாட அனுமதி வழங்கப்படும்
றோயல் அக்கடமி
பிரதான வீதி சங்கானை (இலங்கை வங்கி அருகில்)
05.04.2012 வியாழக்கிழமை பி.ப 4.00 மணி

Walk - in - Interview
Permanent & Visiting Lecturers
(CIVIL ENGINEERING / QUANTITY SURVEYING)
Applications are invited from suitably qualified candidates to fill the above vacancies in our Campus
Qualifications
1. A degree in Civil Engineering / Quantity Surveying or NDT or equivalent and membership of a Professional Institution.
2. A flair for teaching /ability to teach in English
Those who are interested please meet us on 6th April from 10.00 am to 4.00 pm with all the relevant documents.
IIS CITY CAMPUS
200, Sivan Pannai Road, Jaffna.
T.P :021 222 8060 Fax : 021 222 6933
E-mail : info@iis.edu.lk ,Web :iis.edu.lk

DCM
யாழ்நகர்
A/L 2014
கலை வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம் ஏப்ரல் 7 சனி காலை 8 மணி

A/L-2014
(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
ஆரம்பம் ஏப்ரல் 7 சனி- காலை 9 மணி
DMI Jaffna

ஆங்கிலம், பிரெஞ்ச், ஜெர்மன்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
04.04.2012 (புதன்கிழமை)
ஆங்கிலம் 12,000/- 3,000/- காலை 8 – 9
பிரெஞ்ச் 60,000/- 15,000/- காலை 9 – 10
இச்சலுகை புதன்வரை பதிவுசெய்வோருக்கு மட்டும்
1. பிரெஞ்ச், ஜெர்மன் தூதரக பரீட்சை மாதிரி புத்தகம் உட்பட 5க்கு மேற்பட்ட பெரிய புத்தகங்களும் 40 சிறிய புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படும்.
2. பயிற்சியில் திருப்தி இல்லையேல் பணம் முழுமையாக திருப்பித்தரப்படும்.
3. மூன்று மாத பயிற்சியின் பின் ஒரு வருடம்வரை பயிற்சியை தொடரவிரும்பின் சலுகைக்கட்டணம் 15000/- தவிர வேறு எந்த கட்டணமும் அறவிடப்பட மாட்டாது.
ஆசிரியர், அரச அலுவலர் உயர்கல்வி மாணவர்களுக்கான இலவச ஆங்கில விடுமுறைநாள் பயிற்சிப்பட்டறை : 06.04.2012 வெள்ளிக்கிழமை
6ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்புவரை பயிலும் பாடசாலை மாணவர்களுக்கான இலவச ஆங்கில பயிற்சிவகுப்பு 09.04.2012 திங்கள்
MyWay Language Research Institute
077 33 63 456

யாழ் நகர் ஆசிரியர்கள் தற்போது சங்கானையிலும்...
றோயல் அக்கடமி
பிரதான வீதி சங்கானை (இலங்கை வங்கி அருகில்)
A/L 2014
ஆரம்பம் ஏப்ரல் 05 வியாழக்கிழமை மாலை 4.00 மணி
வர்த்தகப்பிரிவு
பொருளியல் : வரதராஜன்
கணக்கீடு : பகீரதன்
வணிகக்கல்வி : முரளி
கலைப் பிரிவு
தமிழ் பத்மநாதன்
புவியியல் பாபு
இந்துநாகரிகம் ஸ்ரீஸ்
நாடகஅரங்கியலும் றமேஸ்
ஆங்கிலம் சந்திரமவுலி
அளவையியல் E.S.பவன்
அரசியல் சுகாஷ்
வரலாறு R.S.சந்திரன்
விவசாயம் சசி
I.C.T அம்பி

Deutsch, Dutch, French, Italian
ஜேர்மன் மற்றும் நெதர்லாந்து தூதரக பரீட்சைக்கான
German-Deutsch, Netherland-Dutch, French, Italian வகுப்புகள்
Audio-Video விளக்கங்களுடன் நடைபெறுகின்றன.
புதிய வகுப்புகளுக்கான பதிவுகள் தற்பொழுது நடைபெறுகின்றன.
Vivekananda Academy
221/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 077 484 2464, 021 321 6928, 021 222 0393

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 11 ★ 11 ★ 1940

மறைவு 04 ★ 03 ★ 2012

திருமதி

### விக்னேஸ்வரி கந்தசாமி

கடந்த 04.03.2012 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவியின் மறைவைக் கேட்டு நேரிலும், தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறி எமது துயரில் பங்கேற்ற உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (03.04.2012) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சூராவத்தை, சுன்னாகம் குடும்பத்தினர்.

ஷாம்சன் இங்கிலீஷ் - 3 மாத பயிற்சிநெறி
இன்றுவரை உங்களால் ஆங்கிலத்தில் பேசமுடியாதிருப்பதற்கான காரணம் ஆங்கிலம் கடினம் என்பதால் அல்ல, தவறான வழிமுறையில் கொப்பியில் எழுதியும், CD, புத்தகத்தின் வாயிலாக அதை முயற்சித்தமையாலாகும்.
ஆங்கிலத்தை மட்டுமல்ல உலகில் எந்தவொரு மொழியையும் இலக்கணம், CD, புத்தகம் வாயிலாகக் கற்று சரளமாகப் பேசவே முடியாது. நீங்கள் கூட உங்கள் தாய்மொழியை அவ்வாறு படிக்கவில்லையே!
எமது பழக்கப்படுத்தல் மூலமான ஆங்கிலப் பயிற்சியானது ஒரு சிறு குழந்தை எவ்வாறு தன் தாய் தந்தையருடன், அயலவருடன் பேசிப் பேசி மொழியைப் பழகியதோ அதை அடிப்படையாகக் கொண்டதாகும்.
நீங்களும் எமது பழக்கப்படுத்தல் மூலமான பயிற்சிப்பட்டறையில் (Work Shop) இணைய விரும்புகிறீர்களா? அப்படியானால் எதிர்வரும் 07.04.2012 இல் ஆரம்பமாகும் புதிய பிரிவில் இணையுங்கள். (ஆசிரியர்கள், தொழில்புரிவோர், பட்டதாரிகள் மற்றும் 15 வயதுக்கு மேற்பட்ட அனைவரும்)
சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு I மு.ப. 8 - 10 பிரிவு III பி.ப. 1 - 3
பிரிவு II மு.ப. 10 - 12 பிரிவு IV பி.ப. 3 - 5
ஒரு பிரிவில் 20 பேர் மட்டும்
SAAMSON ENGLISH
279, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(ஆஸ்பத்திரி பின்புறம்)
தொ.பே. 077 621 4567

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.